
கல்கி

KALKI 18-3-1973 45 காசு



ஆறே வாரங்களில் ரூ. 35 லட்சம் அன்னியச் செலாவணி செலவில் இளமை பொருந்திய எஞ்ஜினீயர்களும் தொழிலாளர்களும் கொண்ட ஒரு குழு என்ன செய்ய முடியும் தெரியுமா?



வருடந்தோறும் நம் தேசத்திற்கு ரூ. 2.5 கோடி அன்னியச் செலாவணி மிச்சப்படுத்த வழி செய்ய முடியும்.

ஆம், ரூ. 35 லட்சம் அன்னியச் செலாவணி செலவில் ஒரு ரிங் ரோலிங் மில் இணைக்கப் பட்டுள்ளது. அதன் பயனாக வருடந்தோறும் இறக்குமதித்தடுப்பின் மூலம் ரூ. 2.5 கோடி அன்னியச் செலாவணி தேசத்திற்கு மிச்சமாகும். முழுமையாகச் செயல்படும்போது இந்த மில்லில் 6 கிலோகிராம் வரை எடையும், 90 மி.மீ. முதல் 200 மி.மீ. வரை அளவும் கொண்ட 20 லட்சம் ரிங்குகள் தயார் செய்யப்படும். இவை ஆன்டி-ஃப்ரிக்ஷன் பேரிங்குகள், ஆட்டோமொபைல் மற்றும் இதர எஞ்ஜினீயரிங் தொழில்களுக்கு இன்றியமையாதவை.

இந்தியாவில் முதல் முதலாக இணைக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை, அதற்கான உபகரணங்கள் வந்து சேர்ந்த ஆறே வாரத்திற்குள், வெளிநாட்டு நிபுணர்களின் உதவி இன்றி, சராசரி 26 வயதே கொண்ட எஞ்ஜினீயர்கள் குழுவின் உதவியால் நிறுவப்பட்டு, இயக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் பலம் உறுதிமிக்க எஃகில் மட்டுமல்ல,
திறமை மிக்க ஊழியர்களிலும் உள்ளது.

TM-2974

டாடா ஸ்டீல்

கல்கி

பரிதாபி, பங்குனி 5

மார்ச் 18, 1973



பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

அட்டைப் படம் : விளக்கேற்றும் வனிக்கரங்கள் - வண்ணப்படம் : வித்யா ஸ்ரதா

ஒவ்வொரு முறையும் 90 பைசா மிச்சப்படுத் துங்கள், மீண்டும் பயன்படும் பிஜ் பேக்கில் நிரப்பி.



ஆகையால், '5-ரீ-ஃபில்' கொண்ட பிஜ் பாலிபேக் வாங்கினால், உங்களுக்கு மிச்சம் ரூ.4.50!

இந்த சேமிப்பு தவிர, உங்கள் சமையல் அறைப் பாத்திரங்கள், கண்ணாடிச் சாமான்கள், தரைகள் மற்றும் பீங்கான் சாமான்கள் எப்போதையும் விட அதிக பளிச்சிடும்! விரைவில் நுரை தரும், கொடியில் சுத்தம் செய்யும், உன்னத டிடர்ஜெண்ட் சக்தி படைத்த காரணத்தால், கண்ணைப் பறிக்கும் பளபளப்பைத் தருகிறது பிஜ்.

கணக்கு கவனமாக:
5 பிஜ் பேக்குகள் அல்லது மற்ற ... பேக்குகளின் விலை சுமார் ரூ. 9.30
'5-ரீ-ஃபில்' கொண்ட பிஜ் பாலிபேக்கின் விலை சுமார் ரூ. 4.80

மிச்சம் ரூ. 4.50



பிஜ்
கோத்ரெஜ்
தயாரிப்பு.

CMGS-42482 Tam

கல்கி மலர் 32 இதழ் 33

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்


சபாஷ், பங்களா தேஷ்!

ஜனநாயக அரசியல் வரலாற்றிலேயே உலகம் வியக்கும் வகையில் செயலாற்றியுள்ளது சுதந்திர பங்களா தேசம். விடுதலைப் போருக்குப் பின் ஓராண்டுக்குள் தனக்கென ஓர் அரசியல் சாஸனத்தை வகுத்துக் கொண்டதுடன் முதலாவது ஜனநாயகத் தேர்தலையும் மிக அமைதியாகவும், அதிவிரைவிலும் நடத்தி வெற்றி கண்டிருக்கிறது. 300 ஸ்தானங்கள் கொண்ட மத்திய சட்ட சபையில் 291 ஸ்தானங்களைக் கைப்பற்றி, வங்க பந்து ஷேக் முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக் கட்சி அமோகமான வெற்றி அடைந்து 750 லட்சம் மக்களது ஒப்பற்ற பிரதிநிதியாகப் பிரகாசிக்கிறது.


ஷேக் முஜிபுர் ரஹ்மான் இத் தேர்தலில் அமோகமான வெற்றியடைந்ததன் மூலம் பங்களாதேஷின் சுதந்திர நிலைமையை ஆணித்தரமாக நிலைநாட்டியிருக்கிறார். உலக நாடுகளுக்கும் வன்மையாக இதை உணர்த்தியிருக்கிறார். ஐ. நா. சபையில் உடனடியாக ஓர் அங்கத்தினர் ஸ்தானம் கிடைக்காவிட்டாலும் அந்த அரங்கத்தில் பங்களா தேஷின் அந்தஸ்து இனி முன்னைவிட மேலும் உயர்ந்து விளங்கும்.


பாகிஸ்தானைப் பொறுத்த மட்டில் இனியும் பங்களா தேசத்தை "கிழக்குப் பாகிஸ்தான்" என்றும், "முஸ்லிம் வங்காளம்" என்றும் ஜனாதிபதி புட்டோ கூறிக் கொண்டிருக்க முடியாது. தவிரவும், பங்களா தேசத்தின் அங்கீகாரத்தையும் அவர் அதிக காலம் தள்ளிப்போட முடியாது. ஏனெனில் அவருடைய அங்கீகாரத்தை எதிர்பார்க்காமலேயே பங்களா தேசம் வேகமாகத் தனது சுதந்திரப் பாதையில் முன்னேறிச் செல்ல ஆரம்பித்து விட்டது. பாகிஸ்தானில் அடைபட்டு வாடிக் கொண்டிருக்கும் சுமார் நாலு லட்சம் வங்காளிகளைப் பணயமாகக் கருதிக் கொண்டு போர்க் கைதிகள் விடுதலைக்காகப் பேரம் பேசும் மனப்பான்மையை ஜனாதிபதி புட்டோ விட்டொழிக்க வேண்டும். பிரத்யட்ச நிலையைக் கருத்தில் கொண்டு, பாகிஸ்தானையும், பங்களா தேசத்தையும் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைத் தீர்க்க முற்பட வேண்டும். இதன் அவசியத்தை உணர்த்தி வைக்கிறது பங்களா தேசத்தின் தேர்தல் வெற்றி.

பங்களா தேஷின் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது ஏக கட்சியின் ஆளுகை அந்நாட்டில் நிலைத்துவிடுமோ என்று சிறிது கலக்கம் ஏற்படக் காரணமும் உண்டு. ஒரு கட்சிக்குப் பெரும்பான்மை வெற்றி, தன்னம்பிக்கையுடன் செயலாற்ற அவசியம்தான் என்றாலும் சட்டசபையில் எதிர்க் கட்சியும் இருக்க வேண்டியது அவசியம். ஏழு அல்லது எட்டு எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் மட்டுமே 300 பேர் கொண்ட சட்டசபையில் செயல்பட்டால், காலப்போக்கில் யதேச்சாதிகாரப் பான்மையே வலுக்கும் என்ற ஐயம் இருக்கவே செய்யும். எதிர்க் கட்சிக்காரர்களும் சட்ட சபையில் தங்களுக்குச் சந்தர்ப்பம் ஒன்றுமில்லை என்பதால் மனமுடைந்து நாட்டில் கிளர்ச்சிகள் நடத்துவதிலும், அமைதியைக் குலைப்பதிலும் ஈடுபடக்கூடும். இதை ஒருவாறு கட்டுப்படுத்தவும், அவர்களையும் நாட்டின் முன்னேற்ற வேலைகளில் பங்கு கொள்ளச் செய்யவும், சட்டசபையில் பல ஆலோசனைக்குழுக்கள் ஏற்படுத்தி, ஒவ்வொன்றிலும் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற எதிர்க் கட்சிக்காரர்களில் திறமையும் நாட்டுப் பற்றும் உடையவர்களுக்கு, அவர்கள் சட்ட சபை அங்கத்தினர்களாக இல்லாவிட்டாலும் இடமளித்துச் செயல்பட்டால் ஜனநாயக முறையை ஒரே கட்சி அமோக வெற்றி கொண்டுள்ள நிலைமையிலும் செயல்படுத்த முடியும். இதன் மூலம் நாட்டு ஒற்றுமை குலையாமலும், ஆளும் கட்சியிலேயே பிளவுகள் ஏற்படாமலும் ஆட்சி சுமுகமாக நடைபெற வழி வகுத்ததாகும். பிரத்யட்ச நோக்குடன் நிலைமையைச் சமாளிக்கும் சாமர்த்தியம் உள்ளவரான ஷேக் முஜிபுர் ரஹ்மானின் தலைமையில் பங்களா தேசத்தின் முன்னேற்றம் தடையின்றி நிகழும் என்று எதிர்பார்ப்போம்.


அவர்களுக்குக் கறுப்பு செப்டம்பர் மட்டும்தான்; ஆனால் அவர்கள் நடத்தையால் வருஷம் முழுவதுமே கறுப்பாகி வருகிறதே எனக்கு!


பொருளாதார நிலை ரொம்ப மோசமாக இருப்பதாகச் சொல்லி ஏனய்யா இவரைப் பயமுறுத்தறீங்க?
?!?!
எதிர்க்கட்சிகள்
சவான்


நான் என்ன பண்ண முடியும்? வாயு உருளை அவருடையது. அவரைக் கேளு
விலைவாசி ஏற்றம்
தமிழர்
ஐயோ! தூக்கிட்டே போவுதே, காப்பாத்துவார் இல்லையா?
தவறான பொருளாதாரக் கொள்கை


உதிப்பிங்களோடு பிறக்காதுன்னு! சொல்ற நீங்களே அது உதிப்பியாகத்தானே இருக்கீங்க?
பொதுஜனம்

ஆளுநரின் அவசரம்!

கட்சி மாறத் தூண்டி, சட்டசபையில் பெரும்பான்மையைச் சிறுபான்மையாக மாற்றும் யுக்தி இந்திரா காங்கிரசின் ஏகபோக உரிமை அல்லவே. முன்பு சுதந்திரா - ஜார்க்கண்டு கூட்டு மந்திரி சபையைக் கவிழ்க்க இந்திரா காங்கிரஸால் மேற்கொள்ளப்பட்ட மோசமான நடவடிக்கைகளைத் தாமும் மேற்கொள்ள முடியும் என்று திரு பிஜு பட்நாயக் நிரூபித்து விட்டார். பிரகதி கட்சி என்று எதிர்க் கட்சிக் கூட்டணி ஒன்றை அமைத்து, அதில் சுதந்திரா, ஜார்க்கண்ட், உத்கல் காங்கிரஸ் கட்சிகளிலிருந்து மாறிச் சென்ற எம். எல். ஏ.க்களைச் சேர்த்து, சட்ட சபையில் ஸ்ரீமதி நந்தினி ஸத்பதிக்குப் பெரும்பான்மை ஆதரவில்லை என்று செய்துவிட்டார். இதை உணர்ந்த முதல் அமைச்சரும் தாம் பதவி இழக்க வேண்டும் என்ற நிலைமையில் சட்டசபையைக் கலைக்க மாநில கவர்னருக்கு ஆலோசனை கூற, அவரும் அப்படியே ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறி, சபை கலைக்கப்பட்டு விட்டது. மாநில ஆளுநர் திரு ஜட்டி ஏன் இவ்வளவு அவசரப்பட்டு ஸ்ரீமதி நந்தினி ஸத்பதியின் சிபாரிசை ஏற்றுக் கொண்டார்?

தமக்கு பெரும்பான்மை ஆதரவு இருக்கிறது என்று திரு பட்நாயக் நிரூபித்ததும், அவருக்கும் மந்திரி சபை அமைக்க வாய்ப்பு அளித்திருக்க வேண்டாமா? இதுதான் ஜனநாயகம் கேட்கும் கேள்வி. திரு பட்நாயக்கின் மெஜாரிட்டி, கட்சி மாறிகளால் கிடைத்த ஒன்று; இப்படி கட்சி மாறிகளைக் கொண்டு சட்டசபையில் பெரும்பான்மை பலம் பெறுவது ஜனநாயகத்தில் விரும்பத்தக்கதல்ல; ஜனாதிபதி ஆட்சி இத்தகைய கட்சி மாறும் போக்குகளை மட்டுப்படுத்தும் என்று திரு ஜட்டி வாதித்திருப்பாரேயானால் அதை நாம் வரவேற்கலாம். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. அப்படிக் கூறுவதற்கான காரணத்தை ஸ்ரீமதி நந்தினி ஸத்பதி எவ்வாறு பதவிக்கு வந்தார் என்பதை நன்கு அறிந்த நாம் எளிதில் ஊகிக்கலாம். ஸ்ரீ ஜட்டி தமக்கு முன் கவர்னர் பதவியிலிருந்தவரைச் சங்கடத்துக்குள்ளாக்க விரும்பவில்லை போலும்! எனவே அவர் எதிர் அணியில் உள்ளவர்களால் நிலையான அரசு அமைக்க முடியும் என்று தமக்குத் தோன்றவில்லை என்றே கூறியிருக்கிறார். அரசு நிலைக்குமா அதனிடம் மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதைச் சட்டசபைதான் தீர்மானிக்க வேண்டும். இந்த உரிமையை கவர்னர் தாமே மேற்கொண்டு விடக்கூடாது. ஆனால் இப்போது மாநில கவர்னர் காங்கிரஸ் மேலிடத்துக்கு இசைவாகச் செயல்படுவதிலேயே ஆர்வம் காட்டியிருக்கிறார்; சுதந்திரமாக இயங்கவில்லை என்று எண்ணுவதற்கு இடம் ஏற்பட்டு விட்டது.

தமிழ் நாட்டிலே...

— தீரன் —

எல்லாருமே போராடுகிறார்கள்

தமிழ் நாட்டில் இந்த 1973ம் ஆண்டின் மார்ச் மாதத்தைப் பொறுத்தவரையில் போராட்ட மாதம் என்றே அழைத்து விடலாம். தமிழ் நாடு அரசாங்கத்தின் கையாலாகாத்தனங்களை எதிர்த்துப் போராடாத பிரிவினரே கிடையாது என்று சொல்லத் தக்க அளவில் பல நியாயமான போராட்டங்கள் நடக்கின்றன.

1. நெசவாளிகள் போர்
2. பி. பார்மஸி மாணவர்கள் போர்
3. பாலிடெக்னிக் மாணவர்கள் போர்
4. பட்டதாரி ஆசிரியர்கள் போர்
5. ஆசிரியர்களுக்காக மாணவர்கள் போர்
6. மின்வெட்டுக் கண்டனப் போர்
7. ஸ்தாபன காங்கிரஸின் மக்கள் உரிமை தினப் போர் (மார்ச் 15)

இத்தனை எதிர்ப்புக்களும் சேர்ந்து நிரூபிப்பது என்ன? இந்த அரசாங்கத்தின் மீது சகல துறையைச் சேர்ந்தவர்களும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதே மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகிறது. இந்தப் போராட்டங்களுக்குப் பதிலாக அரசாங்கமும், அமைச்சர்களும் பூசி மெழுகுவது போல் எதையாவது சொல்லிக் கொண்டிருக்கிறார்களே ஒழிய, காரண காரிய உணர்வுடனும், பொறுப்புடனும் பதில்கள் சொல்வதாகத் தெரியவில்லை. தமிழ்நாடு அதிருப்தி என்னும் எரிமலையாக மாறியிருக்கிறது. அந்த அருப்தி எரிமலையின் உச்சியில் நின்று, வர இருக்கும் அல்லது வந்தே விட்ட அபாயங்களை உணராமல் வார்த்தை ஜாலங்களும், மித்ர பேதப் பேச்சுக்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள் பொறுப்பில் இருப்பவர்கள். மின்சார வெட்டால் வரும் தொழில் உற்பத்திப் பாதிப்பையும், விலைவாசி ஏற்றத்தையும் குறிப்பிட்டால் உடனே 'அந்த மாநிலத்தில் இல்லையா? இந்த மாநிலத்தில் இல்லையா?' என்று பதில் வருகிறது. வேறு மாநிலத்தைச் சுட்டிக் காட்டியோ, வேறு அமைச்சரவையைச் சுட்டிக் காட்டியோ 'அங்கே இல்லாத குறையா இங்கே இருக்கிறது' என்று கேட்பதெல்லாம் இங்கே உள்ள குறைகளை நிவர்த்தி செய்து விடாது.

அரைவைக் கட்டணம் உயர்வு

மின்சார வெட்டு காரணமாகப் பண்டங்களின் விலை ஏறியது போதாதென்று பண்டங்

களை அரைக்கும் அரைவை மில்களில் அரைவைக் கூலி பயங்கரமாக ஏறியிருக்கிறது. ஒரு மடங்கு, இருமடங்கு ஏறவில்லை. ஒரேயடியாக மூன்று மடங்குக்கு மேல் ஏறியுள்ளது. அதாவது சதவிகிதக் கணக்கில் சொன்னால் 300 சதவிகிதம் ஏறியுள்ளது என்கிறார்கள். இதில் மின்சாரப் பற்றாக்குறையால் ஏறிய ஏற்றம் எவ்வளவு, மின்சாரப் பற்றாக்குறையை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு ஏறிய ஏற்றம் எவ்வளவு என்பதைப் பிரித்துக் கண்டுபிடிப்பதற்கில்லை. மிளகாய், சீயக்காய், மஞ்சள் அரைவைக் கூலிகள் சொல்ல முடியாத அளவு அதிபயங்கரமாக ஏறியுள்ளன. மின்சார வெட்டு நடைமுறைக்கு வருமுன் ஒரு கிலோ மிளகாய் அரைக்க 75 காசு அரைவைக் கூலியாக இருந்தது. படிப்படியாக அது ஒரு ரூபாய் என்றும் 2 ரூபாய் என்றும் ஏறி இப்போது 3 ரூபாய் ஆகிவிட்டது. அரைவைக்கூலி மூன்று ரூபாய் ஆகிற ஒரு கிலோ மிளகாயின் விலை நான்கு ரூபாய்தான்! சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்கிற கதைதான். மாவு மில்லிலோ,—மிளகாய், மஞ்சள், சீயக்காய் அரைக்கும் இடங்களிலோ கூலி ஏறியிருப்பது தவிரப் பெரிய 'க்யூ'வும் நிற்கிறது. பல மாவு மில்களில் ஹோட்டல்களுக்கான மொத்த வேலைகளை மட்டுமே அரைத்துக் கொடுப்பதனால் தனிப்பட்ட சிறு வேலைகளைக் கவனிப்பதே யில்லை. யுத்த காலத்தில் கூட அநுபவிக்காத சிரமங்களை இப்போது மக்கள் அநுபவிக்கும்படி செய்து விட்டது தி. மு. க. ஆட்சி.

திண்டுக்கல்லில் நடந்தது

திண்டுக்கல் தொகுதியைச் சேர்ந்த சின்னாளப்பட்டியில் வட்டார காங்கிரஸ் பிரமுகர் ஒருவரின் தாயார் உயிருடன் இருக்கும்போதே இறந்து விட்டதாகக் குறிக்கப்பட்டு வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாகவும், அதே சமயத்தில் 17 வயது கூட நிறையாத பாலரின் வயது அதிகமாகக் குறிக்கப்பட்டு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் பரவலாகப் பேசப்படுகிறது. இத்தகைய வக்கிரமான வேலைகளைச் செய்ய ஆளும் கட்சிப் பிரமுகர்கள் முயல்வதை எதிர்த்துப் பெண்கள் புரட்சிகரமான ஊர்வலம் போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த வக்கிர வேலைகளுக்குச் சில அதிகாரிகளும் துணை இருப்பதாகச் சொல்கிறார்கள்.



இப்போதிருந்தே தேர்தலில் சாதகமாகத் தங்களிடம் நடந்து கொள்ள ஏற்றவர்களை மாற்றம் செய்து வருவதாகவும் அரசின் மேல் மக்கள் சந்தேகப்படத் தொடங்கி யிருக்கிறார்களாம். வெல்வதற்கு இவைதாம் வழிகள் என்றால் இவற்றை ஆளும் கட்சி மட்டுமே செய்ய முடியும் என்றும் பேசுகிறார்கள்.

அதிகாரம் உண்டு

மத்திய உள் துறையின் துணை அமைச்சர் பாராளுமன்ற ராஜ்ய சபையில் ஓர் உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது, ''மாநில மந்திரிகள் மீது தவறான நடத்தை அல்லது ஊழல் புகார்கள் குறித்து விசாரணை செய்யவும் விசாரணைக் கமிஷன் அமைக்கவும் எந்த விதமான தடையும் மத்திய சர்க்காருக்கு கிடையாது என்று கூறியிருக்கிறார். திரு ராம் நிவாஸ் மிர்தா (மத்திய உள்துறைத் துணை அமைச்சர்) தமிழ்நாடு முதல்வர், பிரதமர் இந்திரா காந்திக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில், ''மத்திய அரசு அமைக்கிற ஒரு விசாரணைக் கமிஷனுக்கு மாநில மந்திரி சபையைக் கீழ்ப்படுத்த முற்படுவது அரசியல் சட்ட ஏற்பாட்டிற்கும், பொறுப்பாட்சி முறைக்கும் நேர்மாறானதாக இருக்கும்'' என எழுதியிருப்பதைக் கூறிவிட்டே தம் பதிலையும் சொல்லி யிருக்கிறார் என்பது கவனிக்கத் தக்கது. இது பல பேருக்கு இருந்த — இருக்கும் சந்தேகத்தைப் போக்கும் என்பது உறுதி. நல்ல சமயத்தில் அமைச்சர் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

நீக்குவதா முக்கியம் ?

இங்கே நம்மிடையிலே எதை எதை ஆக்கலாம், வளர்க்கலாம் என்று அவ்வப்போது யோசித்து முடிவு செய்து நல்ல காரியங்களைச் சேர்ப்பதற்குப் பதில், எதை எதை நீக்கலாம் என்பதையே தமிழக அமைச்சர்கள் கவனித்து வருகிறார்கள் போலும். பஸ்களில் இந்துக் கடவுளர், ஏகநாதர், பிற மதச் சின்னங்கள் ஆகியவற்றை நீக்கிவிட வேண்டுமாம். இந்த நீக்கல் வேலையினால் நாலைக்கே ரூபாய்க்குப் பதினறு படி அரிசி கிடைத்து விடப்போவதில்லை. மழை கொட்டு கொட்டென்று கொட்டி நீர்த் தேக்கங்கள் நிரம்பி மின்சாரம் தேவைக்கு அதிகமாகப் பெருகிவிடப் போவ

ராஜாஜி சிந்தனை

ஹிந்து சமயத்தின் சாரம் என்று எதை நான் அறிந்திருக்கிறேனோ அதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். காரணமுள்ள இடத்தில் எல்லாம் காரியம் இருக்கவே செய்யும். தண்ணீருக்குள் கல்லைப் போட்டால் தண்ணீரில் ஒரு சிறு அலை உண்டாகும். அந்த அலை மற்றொரு அலையை உண்டாக்கும். இப்படியே அலைகள் உண்டாகும். கடவுள்கூட அதைத் தடுக்க முடியாது என்று கூறலாம். இரண்டோடு இரண்டைச் சேர்த்தால் நாலாகும். அதைக் கடவுள் மாற்றி அமைக்க முடியுமா? இந்த விஷயத்தை உணர்ந்து கொண்டால்தான் ஹிந்து சமயத்தின் சாரம் என்று நான் கருதுவதை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

நம்முடைய மனத்தில் தோன்றும் ஒவ்வொரு கெட்ட எண்ணமும் கடவுளாகிய நீரில் தோன்றும் துன்பகரமான அலையாகும். அதைக் கடவுளின் இதயத்தைப் பிளக்கும் குத்து என்றுகூடக் கூறலாம். அதனால்தான் சில ஞானிகள் நாம் கெட்ட எண்ணங்களை எண்ணும்பொழுது கடவுள் கண்ணீர் விடுவதாகக் கூறுகிறார்கள்.

அமெரிக்காவில் பேசுவது இங்கே கேட்கிறது. அது எப்படி என்பது நமது கண்ணுக்குப் புலனாகவில்லை. அதே போல் கெட்ட எண்ணங்களும் கண்ணுக்குப் புலனாகாவிட்டாலும் கடவுளைப் போய்ப் பாதிக்கின்றன என்று கூறலாம். ஏதோ மார்க்கோனி என்னும் ஓர் ஐரோப்பியன் கண்டுபிடித்த கம்பியில்லாத் தந்தி என்று கருத வேண்டாம். இது பண்டைக்காலம் முதல் நடந்து வரும் ஒரு காரியமேயாகும். இத்தகைய காரியங்கள் இலட்சக்கணக்கான ஆண்டுகளாக நடந்து வருகின்றன. விஞ்ஞானிகள் இப்பொழுதுதான் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

செவிடன் உலகத்தைப் பார்க்கிறான். அதில் எதையும் கேட்க முடியவில்லை. திடீரென்று காது கேட்கிறது. இதுவரை இத்தனை சப்தம் எல்லாம் எங்கிருந்தது, நான் கேட்கவில்லையே என்று ஆச்சரியப்படுகிறான். அதேபோல் உலகத்தில் உலவும் நல்ல, தீய எண்ணங்களை அறியக்கூடிய சக்தி இல்லாதபடி ஆன்மச் செவிட்டுத் தன்மையும் ஒன்றிருக்கிறது. இந்த ஆன்மச் செவிட்டுத் தன்மையை அகற்றிவிட முடியுமானால் உடனே உலகமெங்கும் பரவி நிற்கும் எண்ணங்களையெல்லாம் அறியும் சக்தியைப் பெற்று விடுவோம். அப்போது, 'ஆகா! இவ்வளவு தீமை உலகில் நடமாடுகிறதா, நாம் அறியாமல் இருந்து விட்டோமே, அதைத் தடுக்க வேண்டாமா?' என்று ஆச்சரியமுறுவோம். பகல் முழுவதும் மனத்தில் துக்கம் நின்றிருந்த போதிலும் இரவில் தூக்கம் வந்ததும் அதை மறந்து இன்பமாகத் தூங்குகிறோம். அதனால் உறக்கத்தை ஒரு வரப்பிரசாதமாகவே எண்ணுகிறோம். அதே போல் உலகில் தீய எண்ணங்கள் நிறைந்திருப்பதால் அவற்றை அறியாமலிருந்து மனச் சமாதானத்துடன் வாழ்வதற்காகவே கடவுள் நமக்கு இந்த ஆன்மச் செவிட்டுத் தன்மையை அருளியிருக்கிறார்.

இல்லை. தெய்வ நம்பிக்கையுள்ள டிரைவர்கள், கண்டக்டர்கள் ஓர் ஆறுதலுக்காகவும், 'ஸெண்டிமெண்டலா'கவும் ஒரு படம் வைத்திருப்பதைத் தூக்கி எறிவதன் மூலம் இந்த அரசாங்கம் எதைச் சாதித்து விடப் போகிறதோ தெரியவில்லை. தலையிட்டு நன்மை செய்ய வேண்டியவற்றில் தலையிடாமலே ஒதுங்கி நின்று தீமை செய்வதும், ஒதுங்கியிருந்து நன்மை செய்ய வேண்டியதில் தலையிட்டுத் தீமை புரிவதுமே இந்த அரசாங்கத்துக்கு ஒரு வழக்கமாகி விட்டது. பஸ்களில் கடவுளுக்குச் சமமான திருவள்ளுவர் படத்தை வைக்கலாம் என்று இந்த அரசே உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் திருவள்ளுவர் போற்றிய கடவுள்களை மட்டும் ஏன் நீக்க வேண்டும்? மன ஆறுதலுக்காகவும், நம்பிக்கைக்காகவும் எல்லா மதத்தினரான ஊழியர்களும் தங்கள் கடவுட் சின்னங்களை அருகில் வைத்துக் கொள்ளுகிறார்கள். இதில் தலையிட்டு அதனால் சாதிக்கப் போவது என்ன? படங்களை நீக்கியதால் அரசாங்க பஸ்கள் நாளைக்கே பிரேக் டவுன் இன்றி, தொந்தரவு இன்றிப் பிரமாதமாக ஓடிவிடுமா என்ன?

'கூட்டுறவு'க் குறைகள்

கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீது தமிழ்நாடு சட்ட சபையில் நடந்துள்ள விவாதங்களைக் கவனிக்கும்போது சில உண்மைகள் தெரிகின்றன. ''ஒரு முறை கூட்டுறவு சங்கங்களில் தலைவர், செயலாளர் போன்ற பதவிகளுக்கு வந்தவர்கள் அதிலிருந்து நீக்கப்படாமலே நிலைத்து விடுவதால் அந்தப் பழைய நிர்வாகிகளின் தவறுகளைக் கண்டுபிடிக்க ஏற்றாற்போல் புதியவர்கள் யாரும் வர முடியாமலே போய்விடுகிறது'' என்று ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர் டென்னிஸ் கூறியிருக்கிறார்.

இன்றுள்ள கூட்டுறவுத் துறை வெறும் அரசியல் முறையில் நடத்தப்படுவதாகவும், ஆளுகிற கட்சிக்கு எதிரானவர்கள் தலைவர் செயலாளராக வரும் கூட்டுறவுச் சங்கங்களை எப்படியாவது கலைப்பதிலேயே கூட்டுறவு மேலிடம் அக்கறையாக இருக்கிறது என்றும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஸ்ரீமதி அனந்தநாயகி கூறியிருக்கிறார்.

''கூட்டுறவு இயக்கத்தை வெறும் கட்சிக்காரர்களாலேயே அமைச்சர் நிரப்பிவிட்டார். ஆகவே கட்சி மனப்பான்மையில்தான் அந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் ஊழல் புரிவோர் பொதுத் துறை ஊழியர்களாகக் கருதப்பட்டு அவர்களைக் கிரிமினல் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளுக்கு உள்ளாக்க ஏற்றதாக்கும் வகையில் கிரிமினல் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்ய வேண்டும்'' என்று டாக்டர் ஹண்டே கூறியிருக்கிறார். திரு பொன்னப்ப நாடார், 'இப்போதெல்லாம் கூட்டுறவுத் துறை திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு கட்சியின் கிளை அமைப்பு போல் இயங்குவதாக'க் கூறி வருத்தப்பட்டிருக்கிறார். கூட்டுறவுத் துறை கூடி நகைப்பதற்குரியதாகி விட்டதே!

“என்னையே எனக்குக் கொடு”

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்




உண்மையான பக்தன் ஒருவன், பரமேச்வரனுக்குப் பூஜை செய்ய விரும்புகிறான். உடனேயே அவனுக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்துவிடுகிறது. ஈசுவரனிடமே கேட்கிறான்: 'ஈச்வரா! நான் உனக்கு உபசாரம் செய்வதாக நினைத்துப் பூஜை செய்தாலும், உண்மையில் அபசாரம் அல்லவா செய்வதாகத் தோன்றுகிறது? திரிலோகமும் வியாபித்த உன் திருவடியை நான் ஓர் உத்தரணி நீர்த்தத்தால் அலம்ப முடியுமா? விசுவாகாரமான உன் சரீரத்துக்கு இந்தச் சிறிய வஸ்திரத்தைக் கட்டி உடுத்த முடியுமா? உனக்கு நமஸ்காரம் பண்ணினால், என் காலை எந்தப் பக்கம் நீட்டினாலும் அங்கேயும்தான் நீ இருக்கிறாய். ஆனபடியால் உனக்கு நேரே காலை நீட்டிய தோஷம் அல்லவா எனக்கு ஏற்படுகிறது? சரி பூஜையே வேண்டாம் என்று பிரார்த்தனை செய்யப் பார்த்தால், எல்லாம் அறிந்த சர்வக்ஞனை உன்னிடம் பிரார்த்திப்பதும் அபசாரமாக அல்லவா ஆகிறது? பிரார்த்தனை என்றால் உனக்குத் தெரியாததை நான் கேட்பதாகத்தானே ஆகும்? நீ சர்வக்ஞன் என்பதற்கு என் பிரார்த்தனையே குறைவு உண்டாக்குகிறது. இருந்தாலும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற குறை உள்ளவனாக நான் இருக்கத்தானே செய்கிறேன்? அதனால் அந்தக் குறை நீங்குவதற்காக உன்னிடம் பிரார்த்திக்கிறேன். அது சரி, எல்லாமான உன்னிடம் எதைப் பிரார்த்திப்பது? எல்லாமான நீயேதான் நானாகவும் ஆகியிருக்கிறாய் என்று தெரியாமல் என்னைக் குறைவுபடுத்திக் கொண்டிருக்கிறேனே, இந்தக் குறையை நீக்கு என்றே பிரார்த்திக்கிறேன். நீ அகண்ட ஆனந்த ஸ்வரூபம்; உன்னைத் தவிர வேறில்லை என்று வேதம் சொல்கிறது. இருந்தாலும் பூரண ஆனந்தமான உனக்கு வேறாக இப்படிக் கோணலும் மாணலுமாகக் குறையோடு நான் ஒருத்தன் இருப்பதுபோல் தோன்றுகிறதே! இதை விலக்கு. விலக்கினால் நீதான் எல்லாமும், நீதான் நானும், அதாவது நான்தான் எல்லாமும் என்று ஆகும். அதாவது உன்னிடம் நான் இதைக் கொடு, அதைக் கொடு என்று வெளி வஸ்துக்களைக் கேட்கவில்லை. **என்னையே எனக்குக் கொடு** என்றே பிரார்த்திக்கிறேன்!'' — இப்படிச் சொல்கிறார் அந்தப் பக்தர். இந்த ரீதியிலேயே 'சிவ மானஸிக பூஜா' என்ற நூலில் பிரார்த்தித்திருக்கிறார் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராள்.

மஹ்ய மம் தேஹிச பகவந்
மதீயமேவ ஸ்வரூபம் ஆனந்தம்

'என் ஆனந்த ஸ்வரூபத்தையே எனக்குக் கொடு' என்கிறார்.

இப்போது நாம் எல்லோரும் நம் நிஜ ஸ்வரூபத்தை விட்டு விட்டு வேஷத்தில் இருக்கிறோம். நமக்கு வேண்டியவர்களை விட்டு விட்டால் தவிக்கிறோமே, நம்மையே விட்டு விட்டதற்கு எவ்வளவு தவிக்க வேண்டும்? நம் ஆனந்த ஆத்ம ஸ்வரூபத்தோடு, அதுவே நாமாக எப்போது கலக்கப் போகிறோம் என்கிற தவிப்பும், அதைப் பற்றிய நினைப்பும் நமக்குச் சதா இருக்க வேண்டும். பரமாத்மாவுடன் கலப்பதற்காக இப்படிச் சகிக்க முடியாமல் தவிப்பதுதான் உண்மையான பிரேமை. அந்தப் பிரேமைக்குத்தான் பக்தி என்று பெயர்.

இதற்கு முதல் படியாக வெளிப் பூஜை, கோவில் வழிபாடு எல்லாமும் வேண்டியிருக்கிறது. உலக நினைப்பே ஓயாத காரியமாக இருப்பவர்களுக்கு ஆரம்பத்தில் இவையே பரமாத்மாவை நினைக்கச் சாதனங்களாகும். இந்தக் கட்டத்தில் கோவிலில் மட்டுமின்றி எல்லா இடத்திலும் ஸ்வாமி வியாபித்திருக்கிறார், நாமும்கூட அவரேதான் என்று நாம் உணரா விட்டாலும் பரவாயில்லை. மூல விக்கிரகத்தில்தான் ஸ்வாமி இருக்கிறார் என்று நினைத்து, கோவில் தூணிலேயே நாம் சாப்பிட்ட கையைத் துடைத்துவிட்டு வந்தாலும் பாதகமில்லை. மூல விக்கிரகத்திலாவது ஸ்வாமி இருக்கிறார் என்று பயப்படுகிற அளவுக்கு வந்திருக்கிறோமல்லவா? எங்கேயோ ஓரிடத்திலாவது ஸ்வாமி இருக்கிறார் என்று பய பக்தியுடன் ஆரம்பித்தாலே போதும்—நாம் சிரத்தை குன்றாமல், அப்பியாசம் செய்து கொண்டேயிருந்தால் நாளாவட்டத்தில் ஸ்வாமி எங்கும் இருக்கிறார், எல்லாமாக இருக்கிறார் என்பது புத்திக்குப் புரியும். புத்திக்குப் புரிவது அநுபவமாக ஆவதற்கு, ''என்னையே எனக்குக் கொடு'' என்று பிரார்த்தித்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஞானாம்பிகை கிருபை செய்வாள்.




"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்...!"

கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களை-யும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்கு களில் ஊடுருவி வாயநாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

**நவீன
பல் பராமரிப்பு முறைகளே *சிக்கனமாக*
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!**

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!





TP. G. 19 TM

அலை ஓசை

அமரர் கல்கி

18. பட்டாபியின் வெற்றி

தேவபட்டணம் அல்லோல கல்லோலப் பட்டது. ''பட்டாபிராமன் வாழ்க! கறுப்பு மார்க்கெட் வீழ்க!'' என்ற கோஷம் மூலை முடுக்குகளிலெல்லாம் எழுந்தது. சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் தலை நரைத்த கிழவர்கள் வரையில் அன்று நடந்த அதிசயத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். கறுப்பு மார்க்கெட் வியாபாரத்தில் கொள்ளைப் பணம் சம்பாதித்த பழைய சேர்மன் இந்தத் தேர்தலிலும் வெற்றி பெறும் நோக்கத்துடன் முப்பதினாயிரம் ரூபாய் வாரி இறைத்திருந்ததாக ஊரெல்லாம் பிரஸ்தாபமாய் இருந்தது. வோட்டு ஒன்றுக்கு நூறு ரூபாய் வரையில் விலை கொடுத்து வாங்கப் பழைய சேர்மன் பிரம்மப் பிரயத்தனம் செய்ததாகச் சொல்லிக் கொண்டார்கள். ஆனாலும் அவருக்கு எதிராக நின்ற பட்டாபிராமன் பெரும்பான்மை வோட்டுக்கள் பெற்று வெற்றி அடைந்தான். பொதுஜன அபேட்சகராகிய பட்டாபிராமன் வெற்றியடைந்தது பற்றித் தேவபட்டணத்துப் பொது மக்கள் எல்லோரும் அளவிலாத ஆனந்தம் அடைந்தார்கள். பல விதங்களிலும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். பட்டாபிராமன் வெற்றி பெற்றதாக வோட்டு முடிவு வெளியானவுடனே ஜெயகோஷங்கள் வானளாவ எழுந்தன. பூக்கடைகளில் தொங்கிய மலர் மாலைகள் எல்லாம் அரை மணி நேரத்தில் பட்டாபிரானுடைய கழுத்தில் வந்து விழுந்தன. ''பட்டாபிராமன் எங்கே?'' என்று கேட்கும்படியாகப் பூமாலைகள் அவனுடைய தலைக்கு மேலே எழுந்து அவன் முகத்தையே மறைத்து விட்டன. முன் ஏற்பாடு ஏதும் இல்லாமலே ஊர்வலம் ஒன்று ஆரம்பமாயிற்று. திறந்த மோட்டார் வண்டி ஒன்றில் பட்டாபிராமனைப் பலவந்தமாகப் பொதுஜனங்கள் ஏற்றி வைத்தார்கள். எங்கிருந்தோ நாதஸ்வர வாத்தியமும் பாண்டு வாத்திய கோஷ்டியும் வந்து சேர்ந்தன. ஊர்வலமும் தேவபட்டணத்து வீதிகளில் எல்லாம் சாவகாசமாகச் சுற்றி வந்து கடைசியில் பட்டாபிராமனுடைய வீட்டில் அவனைக் கொண்டு வந்து விட்ட பிற்பாடு கலைந்தது.

பொதுஜனங்கள் எல்லாரும் போன பிற்பாடு ஆப்த நண்பர்களும் பிரமுகர்களும் பட்டாபிராமனைப் பின் தொடர்ந்து வீட்டுக்குள் வந்தார்கள். பட்டாபிராமனுடைய வீட்டிலிருந்த நாற்காலிகளில் எல்லாம் அவர்கள் உட்கார்ந்தும் இடம் போதாமல் பலர் ஜன்னல் விளிம்புகளிலும் உட்கார வேண்டியிருந்தது. ஒவ்வொருவரும் தனித் தனியே பட்டாபிராமனைப் பாராட்டினார்கள். ''பட்டாபிராமன் சேர்மன் ஆவது நிச்சயம்'' என்று சபதம் கூறினார்கள். சில பெரியவர்கள் வயதின் உரிமை எடுத்துக் கொண்டு ''மிஸ்ஸஸ் பட்டாபிராமன் எங்கே?'' என்று கேட்டார்கள். சந்தோஷம் ஒரு பக்கமும் சங்கோசம் ஒரு பக்கமும் பிடுங்கித் தின்ன ஸ்ரீமதி லலிதா அங்கே வந்து சேர்ந்தாள். ''இந்த வெற்றியெல்லாம் உங்களுடைய அதிர்ஷ்ட பலத்தினாலேதான்!'' என்று லலிதாவைப் பார்த்துத் தனித்தனியாகப் பலர் உபசாரம் சொன்னார்கள்.

லலிதா அங்கிருந்து போன பிறகு ஒருவர், ''அந்த அம்மாளுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார். பட்டாபிராமனுடைய முகம் சுருங்கிற்று. ''அவ்வளவாகப் பரவாயில்லை!'' என்று சொன்னான்.

''சீதா அம்மாளைப் பற்றித்தானே கேட்கிறீர்கள்? அவருடைய உடம்புக்கு என்ன வந்தது? மனசுதான்

ரொம்பவும் நொந்து போயிருக்கும்!'' என்றார் இன்னொரு நண்பர்.

''பொது வாழ்க்கை என்றால் இந்த மாதிரி எத்தனையோ தான் இருக்கும். வம்புக்காரர்களுடைய பொய்களுக்கெல்லாம் பயந்துவிடவும் கூடாது; மனசைச் சோர்வடைய விட்டுவிடவும் கூடாது!'' என்றார் எதிர் வீட்டுத் தாமோதர முதலியார்.

''மிஸ்டர் பட்டாபிராமன்! நீங்கள் தான் சீதா அம்மாளுக்குத் தைரியம் சொல்லித் தேற்ற வேண்டும்'' என்றார் அட்வகேட் அப்பாராவ்.

''என்ன இருந்தாலும் இந்த மாதிரி அயோக்கியத்தனமாகவா அவதூறு சொல்கிறது? எனக்கு என்னமோ நினைத்தாலே இரத்தம் கொதிக்கிறது'' என்றான் பட்டாபிராமன்.

''அப்பா, பட்டாபி! அப்படியெல்லாம் இரத்தத்தைக் கொதிக்கும்படி விட்டு விடாதே! நீ எலெக்ஷனுக்கு நிற்க உத்தேசித்தபோது நான் உனக்கு எச்சரிக்கை செய்யவில்லையா? எலெக்ஷன் என்றால் இப்படித்தான் குப்பை கூளம் எல்லாம் வெளியில் வரும். அதற்காக 'ஆஹா, ஊஹூ' என்று அலறுவதில் பிரயோசனமில்லை!'' என்று சொன்னார் தாமோதர முதலியார்.

''அதெல்லாம் இல்லை, ஸார்! இந்த மாதிரிக் காலிப் பயல்களைச் சும்மா விட்டு விடக் கூடாது. துண்டுப் பிரசுரம் போட்டவனைக் கோர்ட்டுக்கு இழுத்துச் சந்தி சிரிக்க அடிக்க வேண்டும்!'' என்றார் ஓர் ஆக்ரோஷக்காரர்.

''கோர்ட்டுக்குப் போவது பிசகு. அவதூறு கேஸுகளில் ருசுப் செய்வது எவ்வளவு கஷ்டம் என்பது நமக்குத் தெரியாதா என்ன? பேசாமல் 'ஸைலண்ட் கண்ட்டெம்ப்ட்' என்று விட்டு விடுவது தான் சரி!'' என்றார் அட்வகேட் அப்பாராவ்.

''அதுதான் ஸார், சரி! சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தால் சந்திரனுக்கு என்ன குறைவு வந்துவிடும்?'' என்றார் ஒரு சாந்தமூர்த்தி.

''நமக்கு அப்படித் தோன்றுகிறது. ஆனால் சந்திரனுக்கு என்ன தோன்றுகிறதோ, என்னமோ!'' என்றார் ஒரு ஹாஸ்யப் பிரியர்.


கடைசியாக, பட்டாபிராமன் அவனுடைய மகத்தான வெற்றியைக் குடும்பத்தோடு சேர்ந்து அனுபவிக்கட்டும் என்று விட்டு விட்டு எல்லோரும் போய்ச் சேர்ந்தார்கள்.

மேற்கூறிய சம்பாஷணைகளில் சீதாவைப் பற்றிக் கூறப்பட்ட அனுதாப வார்த்தைகள் வாசகர்களுக்கு அவ்வளவாக விளங்காமல் இருக்கலாம். விஷயம் என்னவென்று கேட்டால்:

வோட்டுப் போடும் தினத்துக்கு முதல் நாளைக்கு முன்னாள் பட்டாபிராமனை ஆதரித்துக் கடைசிப் பெரும் பொதுக் கூட்டம் நடந்தது. கேவலம் முனிசிபல் தேர்தல் கூட்டங்களில் சாதாரணமாகக் கண்டிராத பெரும் கூட்டம் கூடியிருந்தது. சுமார் ஐயாயிரம் பேர் இருக்கும். மேடையில் அபேட்சகர் பட்டாபிராமனோடு இன்னும் பல பிரமுகர்களும் பெண்மணிகளும் அமர்ந்திருந்தார்கள். பெண்மணிகளிலே சீதாவும் இருந்தாள். சென்ற ஒன்றரை மாதமாகத் தேர்தல் வேலை செய்ததில் சீதா பிரமாதமான பிரசங்கி ஆகிவிட்டாள். அவளுடைய பேச்சிலே தேச பக்தி ததும்பிற்று; ஆவேசம் பொங்கிற்று; வீர சுதந்திரம் தாண்டவ நர்த்தனம் செய்தது. கறுப்பு மார்க்கெட் சின்னா பின்னமடைந்தது. அக்கிரமமும் அநீதியும் அதோகதி அடைந்தன. பட்டாபிராமனை ஆதரித்த சீதாவின் வார்த்தைகள் அன்பும் ஆர்வமும் உருக்கொண்டவையாக வெளி வந்தன. எதிரி அபேட்சகரைத் தாக்கி அவளுடைய சொற்களோ இராம பாணங்களைப் போல் விர்ரென்று பாய்ந்து சென்று அக்கிரமத்தின் உயிர்நிலையில் தைத்தன.

ஆகையால் சபையோர் எல்லோரும் வீராங்கனையான ஸ்ரீமதி சீதாதேவி எப்போது பேசப் போகிறாள் என்று எதிர் பார்த்துக் கொண்டிருப்பது வழக்கமாகி விட்டது. மற்றவர்களுடைய பேச்சுக்களையெல்லாம் ஏதோ சகித்துக் கொண்டிருந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் கடைசியாக நடந்த பெரும் பொதுக்கூட்டத்தின்போது சபையோர் பெரும் ஏமாற்றம் அடையும்படி நேர்ந்தது. ஏனெனில் ஸ்ரீமதி சீதாவின் பேச்சு அன்று நடைபெறவில்லை. வழக்கம் போல் சீதா பேச எழுந்தது என்னவோ உண்மைதான். ஆனால் மூன்று நாலு வாக்கியங்களுக்கு மேல் பேசவில்லை; பேச முடியவில்லை. அந்த மூன்று நாலு வாக்கியங்களையும் சீதா விம்மலுடன் பேசினாள். பிறகு குபீரென்று பெரிய அழுகையாக வந்து விட்டது. எனவே பேச்சை நிறுத்திக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். நல்லவேளையாகக் கூட்டத்தில் குழப்பம் எதுவும் ஏற்படாமல் மேடையில் இருந்த பிரமுகர்களும் ஸ்திரீகளும் அங்கிருந்து கலைந்து போக முடிந்ததைப் பற்றியே அனைவரும் சந்தோஷப்பட வேண்டியதாயிற்று.



சீதாவின் விபரீத நடவடிக்கைக்குக் காரணமாயிருந்தது இதுதான்:

அன்று பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது ஜனக் கூட்டத்தின் ஓரப் பக்கங்களில் யாரோ ஒருவன் ஒரு துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தான். அதைக் கையில் வாங்கிப் படித்தவர்கள் எல்லோரும் மேடைமீதிருந்த சீதாவை உற்றுப் பார்க்கலானார்கள். மேற்படி துண்டுப் பிரசுரங்கள் கைமாறி மாறிக் கூட்டத்தில் பரவிக் கொண்டேயிருந்தன. அநேகருடைய கவனம் மேடையில் நின்று பேசுகிறவர்கள் மீதோ அவர்களுடைய பேச்சிலோ செல்லவேயில்லை. திரும்பத் திரும்பச் சீதாவையே அவர்கள் நோக்கிக் கொண்டிருந்தார்கள். சிலருடைய நோக்கில் பரிதாபம் இருந்தது; சிலருடைய பார்வையில் ஆத்திரம் அதிகம் இருந்தது; வேறு சிலருடைய பார்வையில் ஏளனமும் கலந்திருந்தது.

இப்படிக் கூட்டத்தில் பலர் ஏதோ ஒரு பிரசுரத்தைப் பார்ப்பதும் பிறகு தன்னைப் பார்ப்பதுமாயிருந்ததைச் சீதாவும் சிறிது நேரத்தில் கவனிக்கும்படி நேர்ந்தது. இன்னது என்று விளக்கமில்லாத கவலையும் பீதியும் அவள் மனசில் உதித்தன. அந்தப் பிரசுரத்தை வாங்கிப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வமும் உண்டாயிற்று. இந்தச் சமயத்தில் பிரசுரத்தை விநியோகித்தவன் பிரசங்க மேடைக்கு அருகில் வந்து அதை விநியோகிக்கத் தொடங்கினான். அப்படி விநியோகிக்கக்கூடாதென்று சிலர் ஆட்சேபித்தார்கள்.

அந்தப் பையன் நாலு துண்டுப் பிரசுரங்களை மேடையில் எறிந்து விட்டு ஓட்டம் பிடித்தான்.

கை மாறி மாறி ஒரு பிரசுரம் சீதாவுக்குப் பக்கத்தில் வந்து சேர்ந்தது. சீதா அதைக் கைநீட்டி வாங்கிக்கொண்டாள்; வாங்கிப் படிக்கவும் தொடங்கி

சிறுகதைச் சிறப்பு மலர்

மார்ச் 25உ

ளுள். முதல் நாலைந்து வரிகளைப் படித்ததுமே அவளுடைய நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சுவது போல் இருந்தது. மேலே படித்ததும் இதயம் வெடித்து விடும்போலத் தோன்றியது. படித்து முடித்ததும் உடம்பெல்லாம் ஆயிரம் தேள்கள் கொட்டினாற் போன்ற துன்பம் உண்டாயிற்று. துன்பத்தோடு கலந்து சொல்ல முடியாத கோபமும் ஆத்திரமும் எழுந்தன.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் சீதாவைப் பற்றி அவ்வளவு நிந்தனையாக எழுதியிருந்தது. அவளுடைய ஒழுக்கத்தைக் குறை கூறி யிருந்தது. அவள் தன் புருஷனை விட்டு விட்டு அம்மாஞ்சி சூரியாவோடு ஓடி வந்தவள் என்று எழுதியிருந்தது. அவள் தேசத் தொண்டில் சிறை புகவில்லை என்றும் ரயிலில் திருடியதற்காகத் தண்டிக்கப்பட்டவள் என்றும் கண்டிருந்தது. அப்படிப்பட்ட ஜாலக்காரியின் மாயப் பேச்சில் மயங்கும் முட்டாள்களுக்கு நன்ருக 'டோஸ்' கொடுத்து விட்டு அந்தத் துண்டுப் பிரசுரம் முடிவுற்றது.

ஒரு பெண்ணின் மனசைப் பாதித்து வேதனைக்கு உள்ளாக்குவதற்கு வேறு என்ன வேண்டும்? வேதனையிலிருந்து பொங்கி எழுந்த ஆத்திரம் காரணமாகச் சீதா பேச எழுந்தாள். அந்தத் துண்டுப் பிரசுரத்தைக் குறிப்பிட்டு அதைச் சின்னபின்னமாக்கி அதை எழுதியவனுடைய மதியீனத்தை அம்பலப்படுத்த வேண்டும் என்று ஆவேசத்துடன் பேச ஆரம்பித்தாள். அவளுடைய நோக்கம் நிறைவேறவில்லை. நாலைந்து வாக்கியங்கள் பேசுவதற்குள்ளேயே அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தபடியால் பேச்சை நிறுத்திவிட்டு, உட்காரும்படி நேர்ந்தது. அடுத்த இரண்டு நாட்களும் சீதா வெளிக் கிளம்பவே யில்லை. கேட்டவர்களுக்கெல்லாம் பட்டாபிராமன், சீதாவுக்கு உடம்பு சரியில்லை என்று பதில் சொல்லிக் கொண்டு வந்தான்.

மேற்படி சம்பவத்தினால் பட்டாபிராமனுடைய மனமும் வேதனை அடைந்திருந்தது. கோபமோ சொல்ல முடியாமல் வந்தது. எனினும் எலெக்ஷன் முயற்சியில் அவன் சோர்ந்து விடவில்லை. மேற்படி சம்பவம் தேர்தலில் வெற்றி பெறுவதில் அவனுடைய ஆத்திரத்தை அதிகமாக்கி விட்டது.

அம்மாதிரியே பட்டாபிராமனுக்கு வேலை செய்தவர்களும் அதிக ஊக்கம் கொண்டார்கள். இந்தத் தேர்தலில் ஜெயிக்காவிட்டால் தங்கள் மானமே போய்விடும் என்றும் பிறகு தேவபட்டணத்துப் பொது வாழ்க்கையில் தாங்கள் தலைகாட்ட முடியாதென்றும் அவர்கள் எண்ணி முன்னைவிட ஆவேசமாக வேலை செய்தார்கள்.

பொதுஜனங்கள் — வோட்டர்கள் — மனசில் மேற்படி துண்டுப் பிரசுரம் எந்த வித மாறுதலையும் உண்டாக்கவில்லை. பொதுஜனங்களை முட்டாள்கள் என்று சொல்லி யாராவது அவர்களுடைய ஆதரவைப் பெற முடியுமா? வேறு என்ன விதமாகத் தங்களைத் திட்டினாலும் பொதுஜனங்கள் பொறுத்துக்கொள்வார்கள். ஆனால், ''நீங்கள் முட்டாள்கள்'' என்று சொல்லி யாரும் அவர்களுடைய ஆதரவைப் பெறலாம் என்று எதிர்பார்க்க முடியாது. ''நாங்களா முட்டாள்கள்? துண்டுப் பிரசுரம் எழுதிய நீதான் முட்டாள் என்பதை நிரூபித்து விடுகிறோம்!'' என்று தேவபட்டணம் பொதுஜனங்கள் தீர்மானித்தார்கள். மேலும், கறுப்பு மார்க்கெட்டில் பணம் சேர்த்த பழைய பெருச்சாளி இப்படியெல்லாம் ஒரு பெண்ணைப் பற்றி அவதூறைக் கிளப்பி விட்டுத் தன்னுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறான் என்ற அபிப்பிராயமும் பொதுமக்களிடையே பரவியது. அந்தப் பொதுஜன அபிப்பிராயத்தையே வோட்டுக்களும் பிரதிபலித்தன. முடிவில், பட்டாபிராமன் பெரும்வெற்றியை அடைந்தான்.

அந்த மகத்தான வெற்றியானது பட்டாபிராமனுக்கு நியாயமாக அளித்திருக்கவேண்டிய ஆனந்தத்தை அளிக்கவில்லை. 'தெள்ளிய பாலில் சிறிது நஞ்சையும் சேர்த்து விட்டது' போல் அவனுடைய வெற்றிக் குதூகலத்தைச் சீதாவைப் பற்றிய அவதூறு பிரசாரம் பாதித்து விட்டது! யாருடைய தூண்டுதல் அந்த எலெக்ஷனில் அவன்



தாய்மார்களே!

அழகுள்ள, கவர்ச்சிகரமான தோற்றமுள்ள, 19 வயதுக்குமேல் 25 வயதுக்குட்பட்டு, மணமாகாத பெண் உங்களுக்கிருந்தால், இந்த அறிவிப்பு அவளுடைய வாழ்க்கையை மாற்றக்கூடும்.

ஒரு இந்தியப் பெண் என்ற முறையில் உங்கள் பெண்ணிடம் ஏதோ விசேஷத்தன்மை இருக்கிறது அது என்னவென்று விவரிக்கத் தேவையில்லை; மென்மை, இனிமை, தன்மை, உயர்குடி வளர்ச்சி என்றெல்லாம் நாங்கள் இதை சொல்லுவோம்.

ஏர்-இந்தியாவில் ஏர்-ஹோஸ்டஸ் என்று அவள் ஆகிவிட்டால், அவள் நம் நாட்டின் தூதுவராகவே ஆகிவிடுகிறாள். கவர்ச்சியுள்ள பல நாடுகளுக்கு அவள் செல்லுவாள். அவளுடைய அறிவு வளர்ச்சியடையும். உயர்குடியில் பிறந்த உயர் பண்புள்ள பலருடன் வேலை செய்வாள். மற்றவர்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்வதிலும் சமையல் துறையிலும், மது வழங்கல், அழகுக்கலை போன்றவைகளில் நல்ல தேர்ச்சி பெறுவாள். சுருங்கச் சொல்லில், அவளை ஒரு நல்ல மனைவியாகவும், பிற்காலத்தில் ஒரு சிறந்த தாயாகவும் ஆக்கவல்ல நல்ல பயிற்சியும் பெறுவாள். இதெல்லாவற்றுடன் நல்ல சம்பளமும் பெறுவாள்.

உங்கள் பெண் ஒரு ஏர்-ஹோஸ்டஸாக ஆக நீங்கள் விரும்பினால்—நிச்சயமாக நீங்கள் விரும்புவீர்கள் என்பதில் ஐயமில்லை—கீழ்க்கண்ட விலாசத்துக்கு இரண்டு பாஸ்போர்ட் சைஸ் (ஒன்று நேர்வாட்டத்திலும் மற்றொன்று பக்கவாட்டிலும் உள்ள) போட்டோக்களுடன் எழுதச் சொல்லுங்கள்.

பிரதம ஏர்ஹோஸ்டஸ், ஏர் - இந்தியா, சாண்டாகுரூஸ், பம்பாய்

உங்கள் பெண் பம்பாயில் உள்ளவராக இருந்தால், நேரிடையாக வேலை நாளான வியாழக்கிழமை அன்று சந்திக்கலாம். புது டில்லியில் உள்ளவராக இருந்தால், மாதத்தில் முதல் அல்லது மூன்றாவது திங்கட்கிழமைகளில் பிற்பகல் 2-30 மணிக்கு, கர்சான் ரோடு, ஹிமாலயா ஹவுஸில் உள்ள ஏர் - இந்தியா ஆபீசுக்கு விஜயம் செய்யலாம். நேர்முக தேர்வின்பொழுது இரண்டு போட்டோக்களைத் தவறாமல் எடுத்துச் செல்ல வேண்டும்.

உங்கள் பெண் 19 முதல் 25 வயதுக்குள் இருப்பவராகவும், மணமாகாதவராகவும், நல்ல அழகான வசீகரத் தோற்றமுடையவராகவும், கண் பார்வை நன்றாக உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். கல்வியில் குறைந்த பட்சம் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவராகவும் இந்தியன் பாஸ்போர்ட் பெற தகுதி யுடையவராகவும் இருக்க வேண்டும்.

குறிப்பு: எல்லா விதத்திலும் தகுதியுடையவராக இருப்பின், பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த மற்றும் பழங்குடி மக்களின் விண்ணப்பங்களுக்கு விசேஷச் சலுகை அளிக்கப்படும்.

ஏர்-இந்தியா

உங்கள் தேச விமானப் போக்குவரத்து ஸ்தாபனம்

'ஹார்லிக்ஸ்' பருக மறந்து விடாதீர்கள்.
குறிப்பாக இச்சமயத்தில்
நீங்கள் இரண்டு
பேருக்கான ஆகாரம்
உட்கொள்ள வேண்டும்.



அயர்ச்சியைத் தாங்கும் சக்தியை அதிகரித்து, நாள்முழுதும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.

கர்ப்பிணிகளுக்கு விசேடமான ஊட்டம் தேவைப் படுகிறது. அதை 'ஹார்லிக்ஸ்' அளிக்கிறது. ஏனென்றால் 'ஹார்லிக்ஸ்' அதிக சக்தி மற்றும் உடல் வலிமை தரும் புரதத்தை தாய்க்கும் அவள் கருவில் வளரும் சேய்க்கும் அளிக்கிறது. தவிர, அது எளிதில் செரிக்கக்கூடியது.

அதனால்தான் உலகெங்கும் சுமார் 100 வருடங்களாக டாக்டர்கள் கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இதை சிபாரிசு செய்கின்றனர்.



'ஹார்லிக்ஸ்' ஊட்டத்திற்கு முக்கிய ஆதாரமாகும்: புரதம் மற்றும் கார்போஹைட்ரேட்டின் கலவையாகிய இது செரிக்கக் கூடியது. தாய்ப்பாலின் தரத்தை உயர்த்துவதிலும் தாயின் நலத்தை ஈடு செய்வதிலும் அது பெரும் பங்கு கொள்கிறது. அதிக சக்தி, நிம்மதியான உறக்கம், மற்றும் கடின வேலை அயர்ச்சியைப் போக்குவதற்கு நாள் தோறும் இரு முறை 'ஹார்லிக்ஸ்' அருந்த வேண்டுமென்று நான் சிபாரிசு செய்கிறேன்'

முழுமையான ஊட்டம்பெற—
'ஹார்லிக்ஸ்'



'ஹார்லிக்ஸ்'
பதிவு பெற்ற ட்ரேட்மார்க்

HL-5599A

நிற்கும்படியான ஊக்கத்தை அளித்ததோ, யாருடைய மகத்தான முயற்சி அவனுடைய வெற்றிக்குக் காரணமாக இருந்ததோ, யார் அவனுக்குச் சோர்வு ஏற்பட்டபோதெல்லாம் ஆறுதல் கூறி உற்சாகமூட்டி வந்தாளோ, அத்தகைய சீதா வெற்றிக் கொண்டாட்டக் குதூகலத்தை அவனுடன் பகிர்ந்து அனுபவிக்க முடியவில்லை. இரண்டு நாட்களாக மச்சு மேலிருந்து கீழே இறங்காமலேயே இருந்து வருகிறாள். சீதாவும் சேர்ந்து கொண்டாட முடியாத இந்த வெற்றியினால் என்ன பிரயோசனம்?

இவ்விதம் பட்டாபிராமன் மனச் சோர்வுக்கு ஆளாகியிருந்தபோது லலிதா தன்னுடைய தாயாருடன் பட்டாபிராமனின் ஆபீஸ் அறைக்கு வந்தாள். பட்டாபிராமன் வெற்றியடைந்ததில் அவனுடைய மாமியாரைப் போல் சந்தோஷமடைந்தவர் வேறு யாரும் இருக்க முடியாது! முதல் தடவையாக மாப்பிள்ளையிடம் சங்கோசத்தை விட்டுச் சரஸ்வதி அம்மாள் கலகலப்பாகப் பேசினாள். சந்தோஷத்தைப் பலவிதத்திலும் தெரிவித்த பிறகு 'இந்த வைபவத்தை யெல்லாம் பார்க்க அவர் இல்லாமற் போய் விட்டாரே என்று நினைத்தால் மட்டும் மனசு வேதனைப் படுகிறது!' என்று சொல்லிக் கொண்டு இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டாள். உடனே இந்தச் சந்தோஷமான வேளையில் அசட்டுத்தனமான துக்க சமாசாரத்தைப் பிரஸ்தாபித்து விட்டதற்காக வெட்கப்பட்டவளாய் விரைந்து சமையற்கட்டுக்குள் போய் விட்டாள்.

''நீங்கள் என்ன வேணுமோ சொல்லுங்கள். அம்மாவுக்கு உங்கள் பேரில் உள்ள பாசம் வேறு யாரிடமும் கிடையாது!'' என்றாள் லலிதா.

''யார் இல்லை என்றார்கள்? உன் அம்மாவுக்கு என் பேரில் ரொம்பவும் பாசந்தான். ஆனால் அந்தப் பாசம் எனக்குப் பிராண சங்கடமாக இருக்கிறது!'' என்றான் பட்டாபிராமன்.

''அது போனால் போகட்டும். சீதா இப்படி இரண்டு நாட்களாய்ப் படுத்த படுக்கையாக இருக்கிறாள். நீங்களும் எலெக்ஷன் மும்முரத்தில் இருந்து விட்டீர்கள். இப்போது மாடிக்குப் போய் அவளுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு வரலாம், வாருங்களேன்!''

''என்ன சமாதானத்தைச் சொல்லுவது? வீண் பிடிவாதத்துக்கு நாம் என்ன செய்ய முடியும்? யாரோ வழியிலே போகிறவன் என்னமோ பிதற்றினான் என்பதற்காகக் குப்புறப் படுத்து ஓயாமல் அழுது கொண்டிருக்கிறதா? என்ன இருந்தாலும் பெண் பிள்ளை என்பது சரியாக இருக்கிறது. இப்படிப்பட்ட கோழை மனகள்ளவர்கள் பொது வேலைக்கு வரவே கூடாது!'' என்றான் பட்டாபிராமன்.

''சூரியாவும் அன்று அப்படித்தான் சொன்னான். எலெக்ஷன் தொல்லைக்குப் பெண்கள் போகக்கூடாது என்றான்.''

''சூரியா என்ன உளறினால் இப்போது என்ன? அவன் என்னை எலெக்ஷனுக்கே நிற்கக் கூடாது என்று சொன்னான். நின்றதனால் என்ன குடி முழுகிப் போய் விட்டது? இன்றைக்கு ஊரெல்லாம் 'ஜே' கோஷம் செய்கிறதோ இல்லையோ?'' என்று பட்டாபி கர்வம் ததும்பப் பேசினான்.

''அதற்கு என்ன ஆட்சேபனை? வெறுமனேயா ஜயகோஷம் செய்கிறார்கள்? 'பட்டாபிராமனுக்கு ஜே!' என்றுதான் கோஷிக்கிறார்கள்! நம்முடைய கல்யாணத்தன்று எல்லாரும் என்னைப் பிடிவாதம் செய்ததன் பேரில் 'மாமவ பட்டாபிராமா' என்று நான் பாடினேன். அது இன்றைக்குத்தான் நிஜமாயிற்று இன்றுதானே உங்களுக்குப் பட்டாபிஷேகம்?'' என்று லலிதா அன்பு ததும்பப் பதில் கூறினாள்.

''சரி சரி! நீ உன்னுடைய பழைய பெருமையைப் பீத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டாயாக்கும்! இன்னும் எனக்



பறவைகள் இறகுகளை அடித்துக் கொண்டு புழுதியை உடலில் வாரி இறைத்துக் கொள்கின்றன. உடலில் உள்ள சிறு பூச்சிகளை விலக்கவே இந்தப் புழுதி ஸ்நானம் என்று கருதப்படுகிறது. ஆனால் வேறு ஒரு பொருத்தமான காரணத்தையும் அமெரிக்க விஞ்ஞானி சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்.
ஒவ்வொரு பறவையும் தன் இறகுகள் உஷ்ணமாகவும் பறக்க வசதியாகவும் இருக்க எண்ணெயைக் கசியச்செய்கிறது. புழுதி ஸ்நானம் செய்து பறவைகள் இறகுகளில் எண்ணெய் குறிப்பிட்ட அளவில் இருக்குமாறு சமன் செய்து கொள்ளுகின்றன.

'நிமிர்ந்து நிற்கும்' மனிதன்!



நடக்க முடியாமல் ஊனமடைந்த குழந்தைகளுக்கு உதவுவதற்காக வளைந்து கொடுக்கும் ஒரு மனிதனைப் போன்று 'நிமிர்ந்து' நிற்கும் மனிதன் உலகில் யாருமே இல்லை.

லயன் - பாலி

குப் பட்டாபிஷேகம் ஆகவில்லை. இன்றைக்கு துவஜாரோகணந்தான் நடந்திருக்கிறது. சேர்மன் வேலையும் கிடைத்த பிறகுதான் பட்டாபிஷேகம் நடந்தது என்று சொல்லலாம்.''

''அதற்கு என்ன பிரமாதம்? இது ஆனது போல் அதுவும் ஆகிவிடுகிறது! என் வாக்குப் பொய்யாகாது. நீங்கள் வேணுமானால் பாருங்கள்!''

''ரொம்ப லட்சணம்தான்! உன்னுடைய திருவாக்கின் மகிமையினாலே தான் எனக்குத் தேர்தலில் வெற்றி கிடைத்தது என்று உன் எண்ணமாக்கும்! எலெக்ஷனுக்கே நான் நிற்கக் கூடாது என்று நீ முரண்டு பிடித்ததை மறந்து விட்டாயாக்கும்! அந்தச் சமயம் சீதா மட்டும் என்னுடைய கட்சியில் நின்று பேசியிராவிட்டால்...''

''அதைப் பற்றி யார் என்ன சொன்னார்கள்? சீதா அத்தங்கா இந்தத் தேர்தலில் நமக்குச் செய்த ஒத்தாசையை மறக்க முடியுமா?''

''அப்படி யொன்றும் உன் அத்தங்கா பிரமாத ஒத்தாசை எனக்குச் செய்து விடவில்லை. அவள் இல்லா விட்டால் நான் ஜெயித்திருக்க மாட்டேன் என்கிறாயா?''

''அழகாய்த்தான் இருக்கிறது! நான் அப்படிச் சொல்வேனா என்ன? உங்களுடைய தியாகத்தினாலும் செல்வாக்கினாலும் நீங்கள் ஜெயித்தீர்கள். அதைப் பற்றிச் சந்தேகமில்லை. ஆனால் சீதா அத்தங்காவும் எவ்வளவோ பாடுபட்டு ஒத்தாசை செய்திருக்கிறாள். அதை நாம் மறக்கக் கூடாது. கொஞ்சம் மேலே போய் அத்தங்காவைப் பார்த்து விட்டு வரலாம், வாருங்கள். நீங்கள் இரண்டு வார்த்தைகள், 'உன்னால்தான் ஜெயித்தேன்' என்று சொல்வதினால் மோசம் முழுகிப் போய்விடாது. அவளுக்குத் திருப்தியா யிருக்கும்.''

''அவளுடைய திருப்திக்காகவா நான் ஜென்மம் எடுத்திருக்கிறேன்? அதெல்லாம் முடியாத காரியம். ஊரெல்லாம் திரண்டு வந்து ஊர்வலம் நடத்தி எனக்கு வாழ்த்துச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள். வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டு இவளுக்கு மச்சுப் படி இறங்கி வரக்கூட முடியவில்லை! அவள் இறங்கி வந்தால் வரட்டும்; வராவிட்டால் போகட்டும். நான் போய் அவளுடைய முகவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டு கெஞ்ச முடியாது! தெரிகிறதா?''

இப்படிப் பட்டாபிராமன் ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருக்கும்போதே யாரோ மச்சுப் படி இறங்கி வரும் சத்தம் கேட்டது. உடனே அந்தத் தம்பதிகள் பேச்சை நிறுத்தினார்கள். இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் சீதா அறைக்குள்ளேயே பிரவேசித்தாள்.

''அத்தங்கா! உனக்கு நூறு வயது!'' என்றாள் லலிதா.

''வாருங்கள்! வாருங்கள்! இப்போதுதான் மாடிக்கு வந்து உங்களைப் பார்க்கலாம் என்று பேசிக்கொண்டிருந்தோம். அதற்குள் நீங்களே இறங்கி வந்து விட்டீர்கள். தலைவலி இப்போது எப்படி இருக்கிறது?'' என்றான் பட்டாபிராமன்.

''உங்களுடைய வெற்றிச் செய்தி கேட்டதும் தலைவலி பறந்து போய் விட்டது! ரொம்ப சந்தோஷம்!'' என்றாள் சீதா.

''எல்லாம் நீங்கள் கொடுத்த ஊக்கத்தினாலும் செய்த ஒத்தாசையாலும் தான். உங்களுக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்!'' என்றான் பட்டாபிராமன்.

''நான் என்ன அப்படிப் பிரமாத ஒத்தாசை செய்து புரட்டி விட்டேன்? லலிதாவின் அதிர்ஷ்டத்துக்கு எல்லாம் தானே நடக்கும்!'' என்று சீதா சொல்லி விட்டு லலிதாவின் கன்னங்களைத் தடவிக் கொடுத்துத் திருஷ்டி கழிக்கும் பாவனையாக நெற்றியில் தன் கையை வைத்து நெரித்துக் கொண்டாள்.

லலிதாவுக்கு ஆனந்தமா யிருந்தது. சீதா மலர்ந்த முகத்துடன் எழுந்து வந்ததை நினைத்துக் களிப்படைந்தாள். தன் கணவரோ சற்று முன் கடுமையாகப் பேசியதை மறந்து அவளிடம்

மரியாதையாகப் பேசுகிறார். பட்டாபி ராமனுடைய வெற்றியினால் லலிதாவுக்கு ஏற்பட்ட குதூகலம் இப்போது பூர்த்தியாகி விட்டது.

''அத்தங்கா! இந்த மனுஷருடைய பேராசையைக் கேள்! இவருக்கு இந்த எலெக்ஷனில் வெற்றி கிடைத்தது போதாதாம். சேர்மன் பதவியும் கிடைத்தால்தான் சந்தோஷப்படலாமாம்!'' என்றாள் ஸ்ரீமதி லலிதா.

''உன் அதிர்ஷ்டத்துக்கு அதுவும் தானே நடக்கிறது!'' என்று சீதா கூறினாள்.

அப்போது பட்டாபி குறுக்கிட்டு, ''இவள் சொல்கிறதை நீங்கள் நம்பாதீர்கள். இவளுக்கு 'சேர்மன் ஒய்ப்' என்று தன்னை எல்லாரும் கொண்டாட வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. அந்தப் பழியை என் தலையின் பேரில் போட்டுவிடப் பார்க்கிறாள்!'' என்று சொன்னான்.

''லலிதா அப்படி ஆசைப்படுவதில் என்ன தவறு? எனக்குக் கூடத்தான் நீங்கள் சேர்மன் ஆகிப் பார்க்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது!'' என்று பரிவுடன் கூறினாள் சீதா.

''அந்த ஆசை நிறைவேற வேண்டுமானால் நீங்கள் முன்போல் எனக்கு உதவி செய்ய வேண்டும். மாடியிலே போய்ப் படுத்துக் கொள்ளக் கூடாது.''

நடனமணிகளுக்கு நம் வாழ்த்துக்கள்!



நட்டுவனார் சுவாமிமலை திரு கே. ராஜரத்தினத்திடம் பரதம் பயின்று சமீபத்தில் அரங்கேறி, சிறப்புக்கள் பெற்ற செல்வி ராஜஸ்ரீ சென்னை பிரபல டாக்டர் ஸ்ரீ ஜே. ஆர். சங்கரனின் புதல்வி.

நல்லி சின்னசாமி செட்டி உரிமையாளர் ஸ்ரீ குப்புசாமியின் மகள் சௌ. சீதாவின் நடன அரங்கேற்றம் அண்மையில் நடைபெற்றது. ஸ்ரீமதி கௌசல்யாவிடம் நடனக் கலை பயின்ற சீதா ஆண்டாள் பாசுரத்துக்குப் பிடித்த அபிநயம் அருமை.





பாரதீய வித்யா பவனத்தில் சென்னை நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்க் திட்டப் பிரிவு அதிகாரி ஸ்ரீ சுந்தரம் அவர்களின் புதல்விகள் சுசிதா, வனிதா ஆகிய இரு நடன மணிகளின் அரங்கேற்றம் தமிழக பிரதம காரியதரிசி திரு பி. சபாநாயகம் தலைமையில் சிறப்பாக நடந்தது.

சேலம் வருமான வரி கமிஷனர் திரு ராஜன் அவர்களின் புதல்வி சௌ. சுஜாதாவின் நடன அரங்கேற்றம் கோயமுத்தூர் ஸ்ரீ குரு குஹ கான சபா ஆதரவில் விமரிசையாக நடைபெற்றது. சுஜாதாவின் நடனத்தை ரசிகர்கள் வெகுவாகப் பாராட்டினர்.



''இனிமேல் என்னால் உங்களுக்கு உபகாரம் கிடையாது. ஒருவேளை அபகாரம் நேர்ந்தாலும் நேரும். இரண்டு நாட்களாக நான் தீவிரமாக யோசனை செய்து பார்த்தேன். ஸ்திரீகள் எலெக்ஷன் முதலிய பொதுக் காரியங்களில் தலையிடவே கூடாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். பொதுஜனங்கள் ரொம்பப் பொல்லாதவர்கள்!'' என்றாள் சீதா.

''நீங்கள் சொல்வது சுத்தத் தப்பு. இன்றைக்கு என்னை வாழ்த்துக் கூற வந்தவர்கள் எல்லோரும் தங்களைப் பற்றி அன்புடன் விசாரித்தார்கள். ஒருவராவது தவறாக ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.''

''இன்றைக்கு ஒன்றும் சொல்லியிருக்க மாட்டார்கள்; ஆனால் நாளைக்குச் சொல்வார்கள்.''

''பொதுஜனங்கள் பேரில் ஏன் உங்களுக்கு இவ்வளவு அவநம்பிக்கையோ தெரியவில்லை. எவனோ ஒரு காலிப் பயல் என்னமோ பிதற்றினால் அதற்காக எல்லாரையும் சேர்த்துக் குறை சொல்லலாமா?''

''அந்த நோட்டீசை நீங்கள் பார்த்தீர்களோ என்னமோ தெரியவில்லை. பார்த்திருந்தால் உங்களுக்கும் என்னைப் போல் இரத்தம் கொதித்திருக்கும். அம்மாதிரி யெல்லாம் எழுதியவனை வெட்டிப் போட்டு விடலாம் என்று தோன்றியிருக்கும்!''

இந்தச் சமயத்தில் லலிதா குறுக்கிட்டு, ''போதும் இந்தப் பேச்சு! சந்தோஷமான சமயத்தில் அந்த அக்கிரமத்தைப் பற்றி எதற்காகப் பேச வேண்டும்? சாப்பிடப் போகலாம், வாருங்கள்!'' என்று சொன்னாள்.

மூன்று பேரும் சாப்பிடுவதற்குப் போனார்கள். சாப்பிடுகிறபோது சிரிப்பும் விளையாட்டுமாக இருந்தது.

உணவு அருந்தியதும் சீதா மச்சு அறைக்கும் பட்டாபிராமன் வாசல் திண்ணைக்கும் போனார்கள். பிறகு சரஸ்வதி அம்மாள் லலிதாவிடம், ''இந்தப் பெண் இனிமேல் இங்கே அதிக காலம் இருப்பது நன்றாயிராது. சீக்கிரம் ஊருக்குக் கிளம்பிப் போனால் நன்றாயிருக்கும்!'' என்றாள்.

''நன்றாயிருக்கிறதடி, அம்மா, நீ சொல்லுகிறது; காரியம் ஆகிறவரை காலைப் பிடி என்று சொல்வது போல அல்லவா இருக்கிறது? சீதா அத்தங்கா மட்டும் வந்திரா விட்டால் உன் மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நின்றிருக்க மாட்டார்; ஜெயித்துமிருக்க மாட்டார். நீயே எத்தனையோ தடவை அவ்விதம் சொல்லியிருக்கிறாய். இப்போது, 'சீதா சீக்கிரம் ஊருக்குப் போனால் தேவலை' என்கிறாயே?''

''அவள் செய்ததை நான் இல்லை என்று சொல்கிறேன்? ஏதோ ஒத்தாசை செய்தாள்; வாஸ்தவம்தான். ஆனால் கடைசியில் பெரிய கல்லாகத் தூக்கிப் போட்டு விட்டாளே!''

''வீணாகப் பழி சொல்லாதே! அவள் என்ன செய்தாள், பாவம்!''

''அவள் என்ன செய்தாளோ என்னமோ எனக்கு எப்படித் தெரியும்? புகை உள்ள இடத்தில் நெருப்பு இல்லாமல் போகாது. ஏதோ அவளுடைய நடத்தையில் கல்மஷம் இல்லாமல் போனால் அப்படித் துணிந்து அச்சுப் பிரசுரம் போடுவார்களா?'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.

''அம்மா! அம்மா! அத்தங்காளைப் பற்றி அவதூறு சொல்லாதே! சொன்னால் உனக்குத்தான் பாவம்!''

''நான் சொல்லவில்லையடி, அம்மா, நான் சொல்லவில்லை. என் வாயை வேணுமானால் நீ மூடலாம்; ஊர் வாயை மூட முடியுமா? அடுத்தபடி இன்னொரு பெரிய வேலை இருக்கிறதே, சேர்மன் வேலை. அது மாப்பிள்ளைக்கு ஆகவேண்டுமே என்று எனக்குக் கவலையாக இருக்கிறது. சீதா நல்ல எண்ணம் உள்ளவளாயிருந்தால் இரண்டு நாட்கள் கழித்துத் திரும்பிப் போய்விடுவதுதான் நியாயம். அவளுக்கும் ஒரு புருஷன் இருக்கிறான். ஒரு குழந்தையும் இருக்கிறாள் அல்லவா? இன்னொருவர் வீட்டிலேயே இவள் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தால், இவளுடைய குடும்பம் என்ன ஆகிறது? நீ இப்படிப் போய் இன்னொருவர் வீட்டில் இருப்பாயா? யோசித்துப் பார்!'' என்றாள் சரஸ்வதி அம்மாள். அம்மா சொல்வதிலும் கொஞ்சம் உண்மை இருக்கிறது என்று லலிதாவுக்குத் தோன்றியது. (தொடரும்)

பால் கணக்கு

ஒரு தடவை கன்று போட்ட பிறகு அடுத்த கன்று போடும் வரையில் நமது இந்தியப் பசு



கொடுக்கும் பாலின் சராசரி அளவு 200 லிட்டர். டேனிஷ் பசு 3700 லிட்டர் கொடுக்கிறது.

- இல்லஸ்டிரேட்டட் வீக்லி-பாலி

காதல்,
டூயட்டுடன்
நின்று விடுகிறது;
ஆனால் அந்தோ,
படம்
தொடர்கிறதே?

வள்ளி தெய்வானை

கதை, திரைக் கதையின் 'ஆதிவந்த' அம்சமான பணக்கார வாலிபன் ஏழைப் பெண்ணைக் காதலிப்பதுதான். அதை யொட்டி, பணக்காரக் குடும்பத்தின் அந்தஸ்து அந்தக் காதல் பாதையில் குறுக்கிடுகிறது; வழக்கம்போல் வில்லனும் குறுக்கிடுகிறான். ஆகவே, அந்தக் காதல், காதலர்களின் 'டூயட்' பாட்டுடன் நின்று விடுகிறது. (ஆனால், படம் அத்துடன் முடிந்துவிட வில்லையே! மேலும் தொடர்கிறதே!)

இரட்டைப் பிறவிகள்தான் ஒரே மாதிரியான தோற்றத்துடன் இருப்பார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் இப்படத்தில், ஒரே மாதிரி தோற்றமுள்ள இரு தோழிகளைவைத்தே கதையைப் புனைந்திருக்கிறார்கள். (ஒரு வேளை, புதுமையோ!)

பிரமீளாவுக்கு இரட்டை வேஷம் — வள்ளி, தெய்வானை. வள்ளிக்குத்தான் நிறைய 'சான்ஸ்! அருமையாக நடித்திருக்கிறார். ஆனால் தெய்வானைப் பாத்திரத்தில் சாரம் இல்லை. இரட்டை வேஷம் என்பது முற்றிலும் மாறுபட்ட இயல்புகள் கொண்ட பாத்திரமாயிருந்தால்தான் எடுபடும். இல்லையென்றால் தோல்விதான்.

'இடை வேளை'க்குப் பின் நர்ஸ் வேலையில் அமரும் வள்ளி, ஆரம்பத்தில் குமாஸ்தா வேலை பார்ப்பானேன்? அதுவும் ஒரு 'சஸ்பென்ஸ்'தானோ!

ரவிச்சந்திரன் நன்றாய் நடிக்கிறார். சண்டைக் காட்சியில் அவருக்கே உரிய 'பாணி'யில் ஜமாய்த்திருக்கிறார். அவர் இருப்பது படத்துக்கே களை யூட்டுகிறது.

ஆஸ்பத்திரியில் ஊழியர்கள் அளவுக்கு மீறிச் சத்தம் போடுவதும், முறை தவறி நடந்து கொள்வதும் கொஞ்சம் கூட நன்றாயில்லை. நகைச்சுவைக் காட்சி ஒருபுறம் அறுக்க, இன்னொரு பக்கம் ஏழு பாடல்கள் நம் பொறுமையைச் சோதிக்க, என்னவோ பே.ங்கள்!

பாரதப் பண்பும், வாக்குறுதியும் திரைக் கதையைப் பாடாய்ப்படுத்துகின்றன. சீர்திருத்தக் கருத்தைச் சொல்லுவதற்கு மனத் திண்மையும், சிந்தனைத் தெளிவும் இன்றியமையாதவை. குழப்பம் குடியைக் கெடுத்துவிடுமே!

தாயகம் பிக்சர்ஸ் தயாரிப்பான ''வள்ளி தெய்வானை'', திரைப் படத் தயாரிப்பில் நாம் எவ்வளவு பின்னணியில் நிற்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுகிறது!

— காந்தன்





நினைச்சாலே சிரிப்பு வருது. என்னைப் போய்ப் பத்திரிகைக்கு எழுதுன்னு சொல்றாரு ராஜரங்கம். அவர் எங்க ஐயா மாதிரி. அந்த மரியாதை தப்பாம நானும் சரின்னுட்டேன். பேனாவைப் புடிச்சால்ல அதிலே உள்ள கஷ்டம் தெரியுது! நான் அவருகிட்டேயும் சொன்னேன். "ஐயா, எங்க பாஷையே வேறே, அதிலே உருது, ஹிந்தி, இங்கிலீஷ் எல்லாம் தான் இருக்கும். இடையிலே தமிழும் ஒவ்வொரு வார்த்தை மிதக்கும். வேறெ யாருக்குமே புரியாது"ன்னேன்.

"பரவாயில்லே மாணிக்கம்! உன் மாதிரி அனுபவமும் தேச பக்தியும் உள்ளவங்க மனசிலே உள்ளதை மறைக்காமல் சொன்னால் அதுவே ஒரு தனி இலக்கியம். ஆனந்தரங்கம் பிள்ளை எழுதினது மாதிரி இருக்கும். நீ தவறாமல் எழுதுன்னுங்க..."

...எழுதுகிறேன். ஏனென்றால் எழுத்து ஒன்றுதான் என்னை நிராசையிலிருந்து காக்கும். மேலும் மேலும் உயிர் வாழும் நம்பிக்கையை வளர்க்கும்.

தற்போது நான் தங்கியிருக்கும் இடத்தின் பெயரை உங்களுக்குச் சொல்ல முடியாது. எனக்குக் கடிதம் எழுத வேண்டும் என்றாலும் இந்த எண்ணுள்ள தபால் ஆபீஸ் என்றுதான் வரைய வேண்டும். ஞாயிற்றுக் கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் கூட இந்தச் சேவை உண்டு. அன்றும் எங்களுக்குக் கடிதம் வரும். நாங்களும் அனுப்பலாம்.

ரயிலிலிருந்து இறங்கியதும் சிவப்புப் பட்டை அணிந்தவனிடம் நமது விவரத்தைக் கொடுக்க வேண்டும். அவர் வண்டி வரும் விவரத்தைச் சொல்லுவார். கிட் பையையும், படுக்கையையும் சுமந்து கொண்டு வரிசையாக நிற்கும் சங்கிலியில் ஒரு கணுவாகனும். சக்திமான் வண்டி — உறுமிக்கொண்டு வரும். பயமுறுத்தும் உருவம். மண்ணெண்ணெய், கல்லெண்ணெய், டீசல், எதை ஊற்றினாலும் அது ஓடும். பங்களாதேஷில் இந்த வண்டியைப் பார்த்த பாகிஸ்தானிகள் வாயைப் பிளந்தார்கள். 'எங்கள் நாட்டிலே இரும்பாணிகூடச் செய்வதில்லையே' என்று வருத்தத்துடன் கூறினார்கள். இதற்கெல்லாம் அடித்தளம் இட்டவர் கிருஷ்ண மேனன். எங்களுக்கெல்லாம் அதில் தனிப் பெருமை.

சக்திமான் வண்டி டிரான்சிட் முகாமுக்குப் போகும். அங்கே எங்களைப் பிரித்து வெவ்

வேறு 'தம்பு' அதாவது கூடாரத்துக்கு அனுப்புவார்கள். உணவின் சுவையைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். அது தனி அத்தியாயம். அந்த முகாமில் கம்மா உட்கார்ந்து வெய்யிலில் குளிர் காய முடியாது. எல்லா வேலைகளையும் நாங்கள்தான் செய்தாக வேண்டும்.

எங்கள் திசைக்கு ஆள் சேர்ந்ததும் மறுபடியும் சக்திமான் உறுமும். பழுதடைந்த பாலங்களையும், சரளைக் கல் நிறைந்த காறுகளையும், யானைகள் உலாவும் காடுகளையும் கடந்து செல்லும் எங்கள் லாரி. நிறை மாதக் கர்ப்பிணி சிரமமின்றிக் குழந்தை பெற்று விடுவாள். அவ்வளவு நிலைகளிலும் நம்மை உருட்டும் சாலையின் போக்கு. புறப்படும் போது வியர்வை கொட்டும். பகல் பதினொரு மணிக்குக் கம்பளிச் சட்டை தேவைப்படும். பிற்பகல் ஒரு மணிக்கு உணவுப் பொட்டலத்தைப் பிரித்தால் எல்லாம் வெண்ணெயாக உறைந்து கிடக்கும். பொட்டலத்தைத் தீயில் வாட்டிப் பிரித்து அந்த ரொட்டியைத் தேநீரில் தோய்த்து உண்போம். மூன்று மணிக்கு மூச்சுத் திணறும்; இருமல் வரும்; வயிறு குமட்டும்.


வயிற்றைக் காலியாக வைத்திருந்தால் இந்தத் தொந்தரவு எல்லாம் கிடையாது.

மாலை மணி ஐந்து. நாங்கள் இரண்டிரண்டு கம்பளிகளைப் போர்த்திக் கொண்டிருக்கிறோம். தலையில் கம்பளிக் குல்லாய், முகத்தில் எரிச்சல். மூக்கிலிருந்து தண்ணீர் வடிகிறது. காற்றுத் தேவன் வலுவான விசையுடன் மோதிச் சக்தி மானையே திசைமாறச் செய்கிறான்.

அவுட் போஸ்டில் நிற்கிறோம். இதற்கு மேல் இந்த வண்டி போக முடியாது. இங்கே லாரியை நிறுத்தி எங்கள் 'ராதாரியை'யெல்லாம் பரிசோதிக்கிறான் எம்.பி. ஹவல்தார். பிறகு ஏ. டி. கம்பெனிக்கு போன் செய்து கோவேறு கழுதைகளை வரவழைக்கிறான். இந்தக் குளிரிலிருந்து பாதுகாப்பளிக்க அவைகளின் மீதும் கம்பளி போர்த்தியிருக்கிறார்கள்.

பட்டாளத்தில் இது ஒரு முக்கியமான பிராணி. மிகவும் உபயோகமுள்ள விலங்கு. இவைகளுக்கும் ரேஷன் உண்டு. உடம்பு தேய்க்க ஆள், மருத்துவம் பார்க்க வைத்தியர் எல்லாம் உண்டு. இவைகளுக்குத் தனிப் பயிற்சி. ஒவ்வொரு கழுதையும் ஐயாயிரம் பெறும். யாரையாவது உதைத்தால் எலும்பு உடைந்துவிடும். இதன் டிரைவர்களின் வாழ்க்கை பரிவுக்கு உரியது.

அந்த விலங்குகள் வகுக்கும் ஒற்றையடிப் பாதையில் நடந்து செல்லுகிறோம். வெள்ளைப்



பாதை வழுக்குகிறது. காலை ஊன்றி நடக்கிறோம். ஆங்காங்கே சிறு சிறு பங்கர்கள் எதிர்ப்படுகின்றன. அவைகளில் புகை போக்கிகள். அவற்றிலிருந்து வெளிப்படும் கரும் புகை இந்தப் பிரதேசத்தின் எழிலையே கெடுத்து விடுகிறது.

பங்கர் என்று சொன்னால் உங்களுக்குப் புரியாது. பாறைகளை அடுக்கி மேலே தகரத்தை வேய்ந்து அதன் மேல் மண்ணையும் கல்லையும் கிட்டித்திருக்கும். தரையிலே கித்தான், கயிற்றுப் பாய், தார்ச் சீலைத் துண்டுகள். நடுவில் ஒரு புக்காரி இருக்கும். புக்காரி என்பது பெரிய பீப்பாய் அடுப்பு. அதற்குள் எண்ணெயை ஊற்றித் தீ வைப்போம். புகை

வெளியே போகும். சூடு பக்க வாட்டில் பரவும். அதன் விளைவாகக் குளிர் குறையும். டியூட்டி நேரம் தவிர மற்ற பொழுதெல்லாம் அங்கேதான். லங்கரிலிருந்து உணவை வாங்கிக் கொண்டு வந்து புக்காரியின் அருகில் உட்கார்ந்து சாப்பிடுவோம்.

வெளியே தகரக் கதவு ஓசைப்படுகிறது. 'சார்' என்று யாரோ கூப்பிடுகிறார்கள். நான் காகிதங்களை மடித்து வைத்துவிட்டு, 'உள்ளே வா' என்று குரல் கொடுக்கிறேன். ஹவல்தார் மேஜர் முத்துக்கண்ணன் வருகிறார். தலையில் கனமான பனிக்குல்லாய், கம்பளி ஓவர் கோட், காலிலே ஸ்னோ பூட்ஸ். இந்தக் குளிரில் எவ்வளவு சுமந்தாலும் தெரிவதில்லை. கூடவே எலும்புக் குருத்தையும் குடைகிறது. குதிகால்களை இணைத்து வலது கையை உயர்த்தி வணங்குகிறார்.

''வணக்கம் மேஜர், இப்படி உட்காரும்'' புக்காரிக்குப் பக்கத்தில் உள்ள மடக்கு ஸ்டூலைக் காட்டுகிறேன். அவர் உட்கார்ந்து குறிப்பேட்டைப் பிரிக்கிறார். ''எல்லாம் 'டீக்' சார்.'' எனக்குச் சிரிப்பு வருகிறது.

''இன்று கான்வாய் வரும் நாளாச்சே?''

''ஆமாம் சார், பதினாறு பேர் வந்திருக்காங்க. எட்டு 'கட்டி' ஆளுங்க. நாலு பேர் சென்டரிலிருந்து. இரண்டு பேர் கோர்ஸ் ரிட்டர்ண்ட.'' 'கட்டி' என்று வருடாந்திர விடுமுறைக்குப் பெயர்.

''லான்ஸ் நாயக் தைலப்பன் வந்துவிட்டானா?''

''இன்னும் இல்லே ஸார்.''

''அவன் என்னைக்குக் கெடு?''

முத்துக்கண்ணன் குறிப்பேட்டைப் புரட்டுகிறார். ''இன்னிக்கு வந்திருக்கணும். ஒரு வேளை டிரான்சிட் காம்பிலேயே இருக்கானோ என்னவோ.''

''மத்தவங்களைக் கேட்டீரா?''

''இல்லே சார், மறந்திட்டேன்.''

''அப்படி மறந்திடக் கூடாது மேஜர். அந்தப் பையனை முக்கிய காரியமாய் லீவிலே அனுப்பிச்சோம். அவன் தனக்குப் பிரமோஷன் காடர் கூட வேண்டாம், லீவிலே போகணும்னான். சொந்தச் செலவிலே போயிருக்கான். அவன் குறிச்ச நாளிலே திரும்பி வந்தானான்னு பார்க்க வேண்டாமா?''

''லீவிலே யிருந்து வந்தவங்க ளெல்லாம் லோனுபங்கரில்தான் இருக்கிறார்கள். நானே அவங்களுக்கு மெடிகல். அவங்களைப் போய்க் கேட்டு வந்து தகவல் சொல்றேன்.'' முத்துக்கண்ணன் பணிவுடன் கூறினார்.

''நீ இதற்காக இந்தக் குளிரில் திரும்பி வர வேண்டாம். காலையிலே ஞாபகமாய்ச் சொன்னால் போதும். ரம் ரேஷன் எல்லோருக்கும் கிடைச்சுதா? மண்ணெண்ணெய் வந்துதா?''

''ரேஷன் கான்வாய் வந்தது சார். உங்களுக்கு ஒரு கடுதாசி கூட..... இந்தக் குளிரிலே எல்லாமே மறந்து போகுது.'' அவர் தம் ஓவர் கோட்டிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுக்கிறார். அதை வாங்கிப் பத்திரமாக நோட்டுக்குள் வைக்கிறேன்.

''சரி மேஜர். காலையிலே ஒரு ஸ்க்வாட் கிரனேட் த்ரோயிங்குக்குப் போகணும். மீதிப் பேர் ரோஸி பங்கரைக் கட்டணும்.''

ஹவல்தார் மேஜர் எழுந்திருந்து வணங்கி விட்டுத் திரும்பி நடந்தார். அவருடைய முதுகில் வெண் துகள்.

எங்கள் பங்கருக்கெல்லாம் பெயர் உண்டு. மங்களம், ராணி, குயிலி, லீலா, இப்படிப் பல பெயர்கள். அண்மையில் ஜெனரல் சந்தோக் வந்திருந்தார். அவருடன் கூட அவரது கடைசிக் குழந்தை ரோஸியும் வந்திருந்தது. குறுகுறுப்பான பெண். எல். எம். ஜி. போஸ்டிலே போய்ச் சைகைக்காரன் பங்கருக்குக் குறி வைக்க ஆரம்பித்து விட்டது. சந்தோக் தாராள மனதுடையவர். இரண்டு கூடை நிறைய மிட்டாய்கள் கொண்டு வந்திருந்தார். ஆனால் எல்லாம் உறைந்து போயிருந்தன. ரைபிள் பட்டியால் உடைத்து உண்டோம்.

ஹவல்தார் மேஜர் சென்ற பிறகு என் மனம் லான்ஸ் நாயக் தைலப்பனைச் சுற்றியே வட்டமிட்டது. நல்ல துடியான பையன். மதுரை மாவட்டம். தேவர் பையன்களுக்கே உண்டான நிதானப் போக்கு. பணிவான உரையாடல். 'அவசியமாய் லீவில் போகணும் சார்' என்றான். 'அப்படி என்ன தம்பி. அவசரம்?' என்று கேட்டேன். அடுத்த பிரமோஷன் காடரிலே உன் பேர் இருக்கு. தவிர இந்த வருஷம் லீவும் உனக்கு முடிஞ்சுபோச்சு. இவ்வளவு பணம் செலவழித்துக் கொண்டு நீ ஏன் போக வேண்டும்?' என்றேன்.

அவன் தயங்கி நின்றான்.

'திருமணம் ஆனவனா?' நான் வினவினேன்.

'இல்லே சார், பரிசம் போடணும். இப்போ போகலேன்னா...' அவன் அதற்கு மேல் பேசவில்லை.

'சரி தம்பி. நீ போகலாம்'னுட்டேன்.

தனி மனிதனின் சுக துக்கங்களுக்கு இந்த மனிதக் கடற் பரப்பில் அதிக முக்கியத்துவம் தர முடியாதுதான். ஆனால் அந்தத் தனி மனிதர்களின் தொகுப்புதானே இந்தப் படை அமைப்பு?' எனக்கு என் வாழ்க்கை நிகழ்ச்சிகளே நினைவுக்கு வந்தன. சிரமப்பட்டுக் கண்ணீரை அடக்கிக் கொண்டேன். நெஞ்சு கனத்து வந்து அடைத்தது.

1965ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், எனக்குக் கல்யாணம் நிச்சயமாகிப் பத்திரிகை கூட அச்சடித்து விட்டார்கள். என்னுடைய ரெஜிமண்ட் ஊரி செக்டரில் இருந்தது. நான் செக்ஷன் ஹவல்தார். விடுமுறையில் புறப்படுவதற்காக ஆப்பிள், அக்ரோட் எல்லாம் பெட்டி பெட்டியாக வாங்கி வைத்திருந்தேன். எட்டு ரம் பாட்டில்கள் வேறு. அம்மாவுக்குச் சால்வை. பொன்னுவுக்கு ஒரு காஷ்மீரப் பட்டுச் சேலை. புறப்பட வேண்டிய அன்றைக்குச் சிக்னல் வந்தது: யாரும் விடுமுறையில் போகக் கூடாதென்று!

கமாண்டரிடம் மல்லுக்கு நின்றேன். மன்றாடினேன். ஊருக்குப் போய்த் தாலியைக் கட்டிவிட்டு மறுநாளே திரும்பி விடுகிறேன் என்று உறுதி கூறினேன். யாரும் கேட்கவில்லை. போர் என்ற இயக்கத்தில் படை வீரன் வெறும் கருவி. முதலில் வீட்டுக்கு

ஓடிப்போய் விடுவோமா என்று யோசித்தேன். அதற்குள் எங்கள் நிலைகளிலேயே மார்ட்டர் குண்டு விழுந்தது. வீட்டுக்குப் போகும் எண்ணம் நெஞ்சை விட்டு நீங்கி விட்டது. 'வெற்றி வேல்—வீரவேல்' — அதுதான் எங்கள் படையினரின் போர்க் கூவல்.

ஹாஜிபீர் போஸ்ட்டைப் பிடித்த வீரச் செயலைப் பாராளுமன்றமே பாராட்டிற்று. ஆனால் என் வாழ்க்கைப் போஸ்ட் கலகலத்து விட்டது. பொன்னு என் வாழ்க்கையிலிருந்தே விலகிவிட்டாள்.

பொங்கல் சமயத்தில் விடுமுறையில் போனேன். பொன்னு எங்கள் வீட்டில்தான் இருந்தாள். எனக்கு வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஆனால் அவள் அங்கே என் தாய்க்கு மருமகளாக இருந்தாள்--என் அண்ணனுக்கு மனைவியாகி யிருந்தாள். நான் ஊரிலே பதினைந்து நாள் கூடத் தங்கவில்லை.

அது கிராமத்து வழக்கம். குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற அந்த முறையில் திருமணம் நடந்தே ஆக வேண்டும் என்று பஞ்சாயத்துக் கூடித் தீர்ப்புச் செய்தார்களாம். விளைவு? என் பொன்னு என் வாழ்க்கையிலிருந்தே விலகிவிட்டாள்.

பெண்களால் எப்படித்தான் உணர்ச்சிகளை அடக்கி வைத்துக் கொள்ள முடிகிறதோ, தெரியவில்லை. இதே பொன்னு எனக்கு எவ்வளவு கடிதங்கள் எழுதியிருப்பாள்! ஒரு முன்னிரவில் காவலையெல்லாம் கடந்து அவள் அறைக்குள்ளேயே போய் விட்டேன். 'நீ இங்கே வந்திருக்கக் கூடாது' என்றாள். 'நமக்குத்தான் கல்யாணம் நிச்சயம் ஆகிவிட்டது. கடிதம் கூட எழுதிக் கொள்ளுகிறோம். தனியே சந்தித்தால் என்ன' என்று ஆவலோடு ஜிவ்வென்று உதிரம் தலைக்கேற....

அவள் அப்போது சொன்ன வார்த்தை! ஆண்டவனே' அது அப்படியே இப்போது பலித்து விட்டதே!

ஹாட்கேஸிலிருந்து பூரியை எடுத்துத் தேநீரில் தோய்த்து விழுங்குகிறேன். தினமும் இந்த ஒரே வகை உணவை உண்ணும்படி இருப்பது பெரிய கொடுமை. விடுமுறையின் போது அம்மா எனக்காகத் தேங்காய் ஆப்பம் சுடச் சொல்லுவார்கள். பொன்னுவின் கைக்கே தனி மணம் உண்டு. தொட்டுக் கொள்ளச் சட்டினி, பழங் குழம்பு. இந்த நினைவுகளிலிருந்து விடுபடும் பொருட்டு வெளியேறி நடக்கிறேன். கிரனேட் பயிற்சிக்காகச் செல்லும் பன்னிரண்டு பேர்கள் ரேஞ்சுக்கு நடக்கிறார்கள். பின்னாலேயே போகிறது கோவேறு கழுதை, கைக்குண்டு பொதியைச் சுமந்து கொண்டு.

நான் ஒற்றையடிப் பாதை வழியாக உத்தர் கந்தாவுக்கு நடக்கிறேன். பாதையிலே கண்ணாடியைப் போல் பனிக்கட்டி பளபளக்கிறது. எதிரே சாம்பல் நிறப் பாறை. அதிலே பள்ளங்களில் பனித்தூள். சுருண்ட கான்ஸெடீனாக் கம்பிகள். அவைகளில் தகர டப்பாக்கள் தொங்குகின்றன. வலது புறமும் சாம்பல் நிறப் பாறை. — சீனப் பங்கர்கள். அவைகளில் இப்போதெல்லாம் பெரிஸ்கோப் பொருத்தி யிருக்கிறார்களாம்.

மாலினி காவல் சாவடிக்குள் நுழைகிறேன். செந்த்ரி துப்பாக்கியை நேராக்கிக் குதிகாலை இணைக்கிறான். மற்றவர்கள் கம்பளியின் மேல் உட்கார்ந்து சீட்டாடிக் •கொண்டிருக்கின்றனர். தமிழனின் தேசிய விளையாட்டு—இருபத்தெட்டு. மதுரை வீரனின் காதில் ஒரு ராணிச் சீட்டு. அவன் பெரிய மக்கு. எப்போதும் அவன் காதில் சீட்டு ஏறிவிடும்.


என்னைக் கண்டதும் எழுந்து நிற்கிறார்கள். ''வணக்கம் சார்'' முறை வைத்த குரல். ''ஸார் களிக்குதோ'' ஹவல்தார் சங்கரகுருப் கேட்கிறான். அவர்களை உட்காரும்படி கையமர்த்திவிட்டு அடுத்த சாவடிக்குப் போகிறேன். சாதாரணமாயிருந்தால் நானும் ஒரு கை சேர்ந்துகொள்ளுவது வழக்கம்தான். ஆனால் அன்று என் மனநிலை சரியில்லை.

அடுத்த போஸ்டில் சற்று மாறுதலான காட்சி. முத்தையன் தனது கச்சையைச் சரி செய்து கொண்டிருந்தான். சிங்காரம் துப்பாக்கியின் போல்ட்டுக்குள் கம்பியை விட்டு அழுக்கு நீக்கிக் கொண்டிருந்தான். கவரிலுள்ள பீரை இடுக்கில் தமிழ், மலையாளச் சஞ்சிகைகள். தமிழ்ப் பத்திரிகையின் அட்டையில் தனது இடுப்பையும் அக்குளையும் மட்டும் காட்டிக் கொண்டு நின்றாள் ஒரு பெண். இந்த இடத்தில் இது நிச்சயமான போதைப் பொருள். பக்கத்திலே ஒரு சிறிய கையடக்கப் புத்தகம். முகப்பில் கரும்பை ஏந்திய ஒரு சாமியார். அதைப் புரட்டுகிறேன்.

'எத்தனை பேர் நட்ட குழி'...

மனசில் ஒரு வகைப் பாரத்துடன் அதைக் கல்லிடுக்கிலேயே வைக்கிறேன். அங்கே ஒரு பால முருகனின் படம். சோப்புத் துண்டில் குத்தி வைத்த ஊதுவத்தியின் அடி முனை, நைஸ் சாம்பல் — 'முருகா! நீயும் எங்களுடன் உன் அப்பாவின் ஊருக்கே வந்து விட்டாயா!'

''முத்தையா! என் பங்கரிலே நிறையப் பத்திரிகைகள் கிடக்கின்றன. அவைகளைக்





கொண்டு வந்து இங்கே போடு.'' அந்தச் சாவடியை விட்டும் வெளியேறுகிறேன்.

உயரத்தில் பல வண்ண ஆகாயம். எதிர்த்தாற்போல் உள்ள ஏரியைப் பார்க்கிறேன். அதிலே வானத்தின் வண்ணங்களைக் காணோம். அதன் நீர் ஒரே கறுப்பு. ஆனால் வாளியில் சேந்தினால் நிறம் இராது. இங்கே இப்படி ஒரு புதுமை.

தொலைவில் யாரோ நடந்து வருகிறார்கள். அவன் முதுகில் ஒரு பயணப் பை. அவனுடைய வாயிலிருந்து வெளிப்படும் மூச்சுக்கூட நீராவி நிறத்தில் வருகிறது. உற்றுக் கவனிக்கிறேன். -லான்ஸ் நாயக் தைலப்பன். என் நெஞ்சு ஏனோ காரணமின்றிப் படபடக்கிறது.

கீழேயிருந்து மலை ஏறி வருவதால் அவன் முகத்தில் வியர்வை. மூச்சு வாங்குகிறது.

''வணக்கம் சார்!''

''வணக்கம் தைலப்பன். இப்போதுதான் வருகிறாயா?'' என் குரலில் ஏனோ கடுகடுப்பு மிகுந்திருந்தது.

''மன்னிக்கணும் சார், கான்வாயைத் தவற விட்டு விட்டேன். பின்னால் டோக்ரா ரெஜிமெண்டின் ஜோங்கோ ஒன்று வந்தது. அதில் தொற்றிக் கொண்டேன்.''

இருவரும் சேர்ந்தாற்போல் சிறிது தூரம் நடக்கிறோம்.

''போன காரியம் என்ன ஆச்சு?''

''நல்ல செய்திதான் சார், அடுத்த வைகாசி மாதம்...''

''வாழ்த்துக்கள்.'' புன்முறுவலுடன் அவன் முதுகைத் தட்டுகிறேன். அதில் பனித் துகள்கள்.

''சார்..!'' அவன் தொடர்கிறான். ''அந்தச் சுப காரியத்துக்கு உங்கள் ஊர்க்காரரும் வந்திருந்தார். கடிதம்கூடக் கொடுத்திருக்கிறார்.''

''யாரது?'' பரபரப்புடன் கேட்கிறேன்.

''ராஜரங்கம் சார். பத்திரிகைக்காரர் என்று சொன்னார்கள்.''

தைலப்பன் கொடுத்த கடிதத்தை வாங்கிக் கொண்டு பாசறையை நோக்கி நடக்கிறேன். தூய வெள்ளை நிற இறகுள்ள பறவை ஒன்று என் பங்கரை வட்டமிடுகிறது. புக்காரியின் கறுப்புப் புகையினிடையில் ஓர் எதிர் மறை வண்ணம். கடிதத்தைப் பிரிக்கிறேன்.

''...உன் அண்ணன் வீட்டுக்கே வராமல் மடத்திலேயே தங்கி யிருந்தது உனக்குத் தெரிந்திருக்கும். 'இனி என்னைத் தேட வேண்டாம்' என்று காகிதம் எழுதிவிட்டு வடக்கே போய் விட்டார். கங்கோத்ரிக்குப் போனவர்கள் அவருடைய சாயலில் ஒரு துறவியைப் பார்த்ததாகச் சொன்னார்கள்.... நான் பொன்னுவைக் கண்டு பேசினேன். மிகவும் உத்தமமான பெண். அதிகம் கல்வியறிவு இல்லாதவள்தான். என்றாலும் தாய்மையான பெண்...

'''இருந்த ஒரு விலங்கும் விட்டுப் போச்சம்மா! சந்தர்ப்ப வசத்தினால் சமுதாயத்தின் கட்டுப்பாட்டுக்காக உன் கழுத்தில் தாலி கட்டினான் அவன். கல்யாணமான பிறகும் அவனைத் தெய்வப் பித்து விடவில்லை...இன்னும் சொல்லப் போனால் அவன் உன்னைத் தீண்டவே இல்லை.... உனக்கும், தம்பிக்கும் இடையே உள்ள நேசமும் பாசமும் நான் அறியாததில்லை பொன்னு; நீ உன் கொள்கையை மாத்திக்கணும். உலகத்திலே சமுதாய மதிப்புக்கள் மாறிப்போய் விட்டன. அரிச்சந்திரன் காலத்தது கிருஷ்ணாவதாரத்தில் இல்லை. மகாபாரத சம்பிரதாயம் அசோகன் காலத்தில் மாறிவிட்டது. நாமும் கொஞ்சம் வளைந்து கொடுக்கணும்'னு வெகு நேரம் அவளுடன் பேசிக் கொண்டிருந்தேன். 'இரண்டு நாள் அவகாசம் கொடுங்கள்' என்று கேட்டாள். ஒரு வாரம் கழிச்சு அவளை மறுபடியும் போய்ப் பார்த்தேன். ஏதோ பெரிய புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள். விரித்த கூந்தல், பழுக்காச் சேலை, நெற்றியில் செந்தூரம்.

'''என்னம்மா முடிவு செய்தாய்?' என்று கேட்டேன்.

'''அண்ணாச்சி, கலிப் பகைக்கும், திலகவதியாருக்கும் கல்யாணமா ஆச்சு?' — அவள் கேட்டாள். அவளிடமிருந்த புத்தகத்தைப் பார்த்தேன். சைவத் திருமுறை. பல இடங்களில் அடிக்கோடு இடப்பட்டிருந்தது.

'''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்.'

''மேலே ஏதும் பேச வகையில்லாமல் திரும்பி விட்டேன்....''

தொலைவில் வெடிகுண்டு வீசும் பயிற்சி நடக்கிறது. குண்டு தாக்கிய இடத்திலிருந்து கனலும் கரும் புகையும் எழும்பிப் பாறைகளைச் சிதறடிக்கின்றன. இடை விடையே பழுப்பு நிறத் தீப்பொறி.

ஹவல்தார் மேஜர் ஊதலை ஒலிக்கிறார். ஜவான்கள் பங்கர் கட்டும் வேலையை நிறுத்தி விட்டு வெண் குவளைகளுடன் லங்கரை நோக்கி நடக்கிறார்கள். ஆவி பறக்கும் தேநீர்.

நான் என் பங்கருக்குள் சென்று புக்காரியைத் திறந்து அந்தக் கடிதத்தை அதனுள் போடப் புகுந்தவன், தயங்கிப் பின்வாங்கி அதை மடித்து மார்புப் பக்கத்து ஜேபியினுள் வைத்துக் கொள்கிறேன்.

LIFE INTERNATIONAL

'லைப்' பத்திரிகை நிறுத்தப்பட்டபோது அதன் விற்பனை - வாரம் 85 லட்சம் பிரதிகள். விளம்பர வருமானம் பத்திரிகைக்கு இல்லாமல் டெலிவிஷன் விழுங்கிக் கொண்டிருந்ததால் பிரதி ஒன்றுக்கு நிகர நஷ்டம் இரண்டு சென்ட். விற்பனை அதிகமாக ஆக நஷ்டம் அதிகமாகியது. ஆகவே மூடிவிட்டார்கள்!

-ஸயன்ஸ் டுடே - பாலி

அலுமினியத் தொழிலகம் அரசுடைமையாவது அவசியமா?

நமது விசேஷ நிருபர்

'மால்கோ' எனப்படும் மதராஸ் அலுமினியம் கம்பெனி அரசுடைமை ஆக்கப்படுவதற்குத் தமிழக அரசு கூறும் காரணம்:

''உற்பத்தியாகும் அலுமினியத்தை இப்போதுள்ளதைவிட நியாயமான முறையில் சமமாகப் பலருக்கு விநியோகிக்கப் போகிறோம்.''

இந்தக் காரணம் எவ்வளவு அபத்தமானது என்பதைத் தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் 'சித்ரா' திரு எஸ். நாராயணசாமியிடம் சற்று நேரம் பேசினால் உணர்வோம்.

''அரசு அலுமினிய மார்க்கெட்டை ஆராயவில்லை என்றே தோன்றுகிறது'' என்று ஆரம்பித்து அவர் கூறுகிறார்: ''மால்கோவில் தயாராகும் அலுமினியத்தின் பெரும் பகுதி மத்திய அரசாங்கத்தின் உத்தரவுப்படி அவர்கள் குறிப்பிடுகிற நிறுவனங்களுக்கே வழங்கப்படுகின்றன. 'கேபிள்' தயாரிப்பாளர்களுக்கும் அலுமினியத்தைக் கச்சாப்பொருளாகக் கொண்டுள்ள இதர பல தொழிலகங்களுக்கும் விநியோகமாகின்றன. எஞ்சியுள்ளவை பாத்திரம் தயாரிப்பு போன்ற சிறு தொழில்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் இந்தியா இன்னும் சில ஆண்டுகளில் தனக்குத் தேவையான அளவுக்கு அதிகமாகவே அலுமினியம் தயாரித்துக் கொண்டிருக்கும். இப்போதுள்ள தாற்காலிகப் பற்றாக்குறைக்குக் காரணம் தமிழகத்தில் உள்ளது போலவே வேறு பல மாநிலங்களிலும் மின்வெட்டு இருப்பதுதான்.''

'மால்கோ' எத்தனை பலத்த போட்டிக்கிடையில் எவ்வளவு பாடுபட்டதால் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது என்பதைத் திரு நாராயணசாமி விவரித்தார்: ''திரு ஆர். வெங்கடராமனுக்கு நேருஜியிடம் இருந்த அபாரமான செல்வாக்குடன் ஸ்ரீ டி. டி. கே.யின் வற்புறுத்தலும் சேர்ந்து கொண்டதுதான் இத்தொழிலகம் நமக்குக் கிடைக்கக் காரணம். வேறு ஓரிரு மாநிலங்கள் இதைத் தட்டிக் கொண்டு போவதில் மிகவும் தீவிரமாக இருந்தன. அப்போது அவர்கள் வெளியிட்ட முக்கிய வாதம் என்ன தெரியுமா? 'ஓர் அலுமினியத் தொழிலகம் இருபத்தையாயிரம் டன் உற்பத்தியை எட்டும்போது அதற்குத் தேவைப்படக் கூடிய மிக அதிகமான மின்சாரத்தைத் தமிழ்நாடு வழங்க முடியாது' என்பதுதான். அப்போது தமிழக அரசு, மின்சாரம் மிக அதிக அளவில் தேவைப்படும் தொழிலானாலும் அது தமிழகத்திலேயே அமைய வேண்டும் என்றும் மின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், குறைந்த கட்டணத்துக்கு அதை வழங்குவதாகவும் ஒப்புக்கொண்டது. இதனால் மற்ற மாநில அரசுகளின் கோரிக்கைகள் அடிபட்டுப் போயின.''

இவ்வாறிருக்க இப்போது திடீரென்று மின்வாரியம் மால்கோவுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதால் ரொம்ப நஷ்டமாகிறது என்று மூக்கால் அழுதால் விஷயமறிந்த மற்ற மாநிலப் பிரமுகர்கள் எள்ளி நகையாட மாட்டார்களா? மேலும் அலுமினியத் தொழிலகம் அரசுடைமையாகி விட்டால் மின் வாரியத்தின் நஷ்டம் குறைந்து விடுமா? மின் கட்டணத்தை அதிகரித்தால் உற்பத்தியாகும் அலுமினியத்தின் விலை உயர்ந்து தேக்க நிலையும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்படாதா? முகத்தின் மீது கோபப்பட்டு மூக்கை அறுத்துக்கொண்ட கதைதான்!

அன்றைய அரசை இந்த ஓர் ஏற்பாட்டுக்காகக் குறை கூறியும் பயனில்லை. ஏனெனில் மின்கட்டண விகிதத்தில் இந்தச் சலுகை காட்டப் படாதிருந்திருந்தால் இன்று மால்கோ தொழிலகமே இராது!

இத்தனை சிரமங்களுக்கிடையில் தோன்றிய 'மால்கோ' நிறுவனம் எவ்வளவு நன்றாக வளர்ச்சியுற்றிருக்கிறது என்பதைத் திரு நாராயணசாமி விவரிக்கிறார்.

''அதன் பங்குகளின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. தமிழக அரசாங்கமே தன்னிடமிருந்த நூறு ரூபாய் பங்குகளை நூற்று எழுபத்தைந்து ரூபாய்க்கு விற்றது. முப்பத்தைந்து லட்சம் ரூபாய்க்குச் சமீபத்தில் விற்றது. தொழிலகம் பொருளாதாரரீதியில் ஸ்திரப்பட்டிருக்கிறது. தவணைத் தொகைகளையும் வட்டிகளையும் ஒழுங்காகக் கொடுத்து வருகிறது. ஊழியர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் திருப்தி அளித்து வந்திருக்கிறது. நன்றாக நிர்வகிக்கப்பட்டு வருவதால் இதனைத் தொடங்கப் பெருமளவு முதலீடு செய்தும் தொழில் நுணுக்கம் நல்கியும் ஒத்துழைத்த இத்தாலிய மான்டிகாடினி நிறுவனம் மிகவும் திருப்தியடைந்திருக்கிறது. அதன் மூலம் இத்தாலிய நாட்டின் முக்கியஸ்தர்களுக்கிடையே நல்ல பெயர் சம்பாதித்திருக்கிறது. தங்கு தடையின்றி விஸ்தரிப்புத் திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றி வருகிறது.''

இத்தனைக்கும் சேலராய் பகுதியில் கிடைக்கும் கச்சாப் பொருள் 'பாக்ஸைட்' இரண்டாந்தரமானதுதான். அவ்வாறிருந்தும் நல்ல

விதமாக நிறுவனம் நடந்து வருகிறதென்றால் அதில் பணியாற்றும் விஞ்ஞானிகள், பொறி இயலாளர்கள், ஒத்துழைப்பு நல்கிய அந்நிய நிறுவனத்தினர் ஆகியோரின் திறமையேதான் காரணம்.

இந்தத் திறமைக்கெல்லாம் தண்டனை அளிப்பது போல் இப்போது காரியம் பண்ணியிருக்கிறது தமிழக அரசு. மால்கோவுக்கும், இருபத்து ஏழரை சதவீதம் முதலீடு செய்துள்ள மாண்டிகாடினி ஸ்தாபனத்துக்கும் ஏற்படுகிற அதிர்ச்சி ஒருபுறமிருக்கட்டும். 'இந்தியாவில் முதலீடு செய்யுங்கள், குறிப்பிட்ட சில துறைகளில் தொழிலகங்களை ஆரம்பியுங்கள்' என்று அயல் நாட்டவர் பலரை நாம் வருந்தி வருந்தி அழைக்கிறோமே அவர்கள் இனித் தயங்க மாட்டார்களா? ஏன் 'தமிழ் நாட்டில் முதலீடு செய்யுங்கள்; வசதி பண்ணித் தருகிறோம்' என்று பிற மாநிலத்தவரை நாம் அழைக்கிறோமே, அவர்கள் இனி உஷாராகி யோசிக்க ஆரம்பிக்க மாட்டார்களா?

''தமிழக அரசு இந்த நிறுவனத்தில் 115 லட்சம் முதலீடு செய்திருக்கிறது என்பது இதனை அரசுடைமையாக்க அரசுக்குப் போதிய தகுதியைத் தந்து விடாது'' என்று கூறி நாராயணசாமி தொடர்கிறார்: ''மின் விசையைப் பயன்படுத்துவதில் சில தவறுகள் நடந்திருந்தால் எச்சரிக்கவும் அபராதம் விதிக்கவும் போதிய அதிகாரங்கள் அரசிடம் உள்ளன. அதற்கு அரசுடைமையாக்குவது பரிகாரமாகாது. 'பணமில்லை; பணமில்லை; மேலும் தொகை ஒதுக்குங்கள்' என்று மத்திய அரசிடம் சதா முறையிட்டுக் கொள்ளும் தமிழக அரசு, இந்த மால்கோ நிறுவனத்தை ஏற்க ஐந்து கோடி ரூபாய் மூலதனம் தேடவேண்டும். இந்தத் தொகையை வைத்துக்கொண்டு இரண்டு புதிய தொழிலகங்களைத் தொடங்கினால் தொழில் வளமும் பெருகும். மேலும் புதிதாக ஐயாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் ஆகும். அதை விடுத்து நன்றாக நடந்துகொண்டிருக்கும் ஒரு தொழிலகத்தை அரசுடைமையாக்குவது பொருளாதாரராஜதந்திரமல்ல.''

இவ்வாறு கூறும் சித்ரா திரு எஸ். நாராயணசாமி பொருளாதார வல்லுநரானாலும் மால்கோவில் ஒரு பங்குதாரர்கூட இல்லை. அதனால்தான் தயங்காமல் மனம் விட்டுப் பேசுகிறார்.

தமிழக அரசு மனம் திறந்து கேட்குமா?

வாழ்ந்த ஆண்டுகள் எண்பது; எழுதிய நூல்களும் எண்பது!



நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பெண் எழுத்தாளர் பர்ல் எஸ். பக். பரிசு கிடைத்தபோது அவருக்கு வயது 46தான்.

இருபத்தெட்டு வயதில் எம். ஏ. பட்டம் பெற்றவர். சீனாவில் நான்கிங் பல்கலைக் கழகத்தில் பத்தாண்டு காலம் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

சிறு வயதிலேயே எழுத்தாளராக வேண்டும் என்று கனவு கண்டாள் பர்ல். சீனாவில் கிறிஸ்துவ மதப் பணிபுரிந்து வந்த பெற்றோருடன் வாழ்ந்தபோது இளமையில் அம்மாவிடம் ஆங்கிலம் கற்பாள். மாலையில் சீன குரு ஒருவரிடம் சீன மொழியும் கலாசாரமும் கற்பாள். விளையாட்டெல்லாம் சீனக் குழந்தைகளுடன்தான். இரு வேறு பண்பாடுகளையும் பூரணமாக, விருப்பத்துடன் அறிந்ததே அவரது எழுத்து சிறந்து விளங்க வாய்ப்பளித்தது.

எண்பதாண்டு காலம் வாழ்ந்த இந்த எழுத்தாளர் எழுதிய நூல்களும் எண்பது. அவற்றுள் பல சீனப் பின்னணியில் படைக்கப்பட்ட மானுட காவியங்கள். குறிப்பாக 'குட் எர்த்' புகழ்பெற்ற நாவல். படமாக்கப்பட்டுப் பல பரிசுகளும் பெற்றது.

புனைபெயர் வைத்துச் சில நூல்களை எழுதியபோது தோல்வியே கண்டார் பக். ஆசிரியர் யார் என்பதை அவர் நடையும் கருத்தும் காட்டிக் கொடுத்துவிடவே, புனைபெயர் வழக்கத்தைக் கைவிட வேண்டியதாயிற்று!


குழந்தைகளுக்குப் பல நல்ல சிறு நூல்களைப் படைத்தவர் பர்ல் பக். ஆதரவற்ற பல குழந்தைகளை, முக்கியமாக ஆசிய நாடுகளில் தங்கும் அமெரிக்கர் வழியாகப் பிறந்த ஆசிய–அமெரிக்கக் குழந்தைகளைப் பராமரிக்கும் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தினார். தாமே அப்படிப்பட்ட ஐந்து குழந்தைகளைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டார்.

மதபோதகரான டாக்டர் ஜான் பக்கை தமது இருபத்தைந்தாவது வயதில் மணந்து சீனக் கிராமங்களில் வாழ்ந்தபோது கண்டவையும் கேட்டவையும் பின்னர் அவருடைய நாவல்களுக்குக் கருப்பொருளாயின.

ஆனால் பதினெட்டு ஆண்டு கால மணவாழ்க்கைக்குப் பின் இவரை ஒதுக்கிவிட்டுத் தமது பதிப்பாளரான ரிச்சர்ட் வால்ஷ் என்பவரை மறுமணம் செய்துகொண்டு விட்டார்!

— தம்பி சீனிவாசன்

கும்மி கோலாட்டம் தொன்றுதொட்டுப் பல நூறு ஆண்டுகளாகவே தமிழ் நாட்டுக் கிராமங்களில் இருந்து வரும் நடன முறையாகும். இது பற்றி ஒரு சமயம் ராஜாஜிக்கும் காந்திஜிக்குமிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. ராஜாஜி கும்மி கோலாட்டம் பண்டைய காலம் முதற்கொண்டே தமிழகத்தில்தான் இருந்து வந்தது என்றார். காந்திஜி தாம் பிறந்த மாநிலமான குஜராத்தில்தான் தொன்மையான காலம் முதல் இருந்து வந்தது என்றார்.



ராஜாஜி தக்க ஆதாரங்களைத் திரட்டித் தாம் கூறியதை ஸ்தாபிக்க முயன்றார். 'ஹரிஜன்' சாஸ்திரி என்பவர் அப்போது 'கலைமகள்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அவரிடம் ராஜாஜி இப்பொறுப்பை ஒப்படைத்தார். அவர் திரு பெ. நா. அப்புசாமி அய்யரையும் திரு வையாபுரி பிள்ளை



கும்மி கோலாட்டம்

யையும் தக்க ஆதாரங்களைத் திரட்டி ராஜாஜியிடம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அவர்கள் இருவரும் பண்டைய நூல்கள், லெக்ஸிகன் முதலியவற்றை யெல்லாம் புரட்டினார்கள்.

பண்டைய நூல்களில் 'கொம்மை' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. 'கும்மி' என்ற சொல் பின்னர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இத்தகவலை அவர்கள் ராஜாஜியிடம் தெரிவித்தனர். ராஜாஜி இத்தகவல்களைக் காந்திஜிக்கு அனுப்பிவிட்டார்.

இதற்கு காந்திஜி அனுப்பிய பதிலில், 'கும்மிகுஜராத்தைச் சேர்ந்தது தான் என்று நிரூபிக்க என்னிடம் எவ்வித ஆதாரமும் இல்லை. ஆகவே கும்மி தமிழ் நாட்டைச் சேர்ந்ததாகவே இருக்கட்டும்' என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கும்மியாட்டம்தான் கேரளத்தில் கைகொட்டிக் களி என்று அழைக்கப்படுகிறது.

நம் தமிழ் நாட்டில் திருமண வைபவங்களின்போது கும்மி, கோலாட்டம் நடைபெறும். இப்போது இது மிகவும் அரிதாகி விட்டதே? - நஜன்

தமிழ் நாட்டைச்
சேர்ந்தது என்றார்
ராஜாஜி!

குஜராத்தைச்
சேர்ந்தது என்றார்
காந்திஜி!

பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டுக்குப் போக வேகமாக நடந்தேன். மணி பார்த்துக் கொண்டேன். இரவு மணி ஏழரை இருக்கும்.

அம்மா கேட்டால் என்ன சொல்வது? வழக்கம் போல் அலுவலகத்தில் இன்று வேலை அதிகம் என்று தான் சொல்ல வேண்டும். அம்மா நம்பிவிடுவாள். அண்ணனைக் கேட்பாள். அவனும் 'ஆமாம்! அப்படித்தான் இருக்கும்!' என்பான். ஏனென்றால் அவனும் வீட்டுக்குச் சரியான நேரத்தில் வந்து சேருவதில்லையே!

எனக்கும் என் அண்ணாவுக்கும் இந்த ஏற்பாடு பல காரியங்களுக்குச் சௌகரியமாயிருந்தது.

எங்கள் வீட்டு வராந்தாவில் கால் வைத்தேன். கூடத்தில் அம்மா நெற்றி நிறையத் திருநீறு அணிந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். பக்கத்து நாற்காலியில் அண்ணா குமார் உட்கார்ந்திருந்தான்.

அம்மாதான் கேட்டாள்: "என்ன காஞ்சனா, இவ்வளவு நேரம்?"

நான் பதில் சொல்லுமுன் குமார் சொன்னான்: "அவளுடைய பிரண்டோடு அரட்டை அடித்துவிட்டு வந்திருப்பாள்!"

"என்னது?" என்றேன் நான்.

"நான் என்ன சொல்லிவிட்டேன்! உன்னுடைய 'கேர்ல் பிரண்'டோடு ஊர் சுற்றிவிட்டு வந்திருப்பாய் என்றுதான் சொன்னேன்!" என்றான் அண்ணா.

"அதுதானே பார்த்தேன்!" என்றேன்.

சில விநாடிகள் மௌனம் நிலவியது. நானும் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்துவிட்டேன். எழுந்து போன அம்மா காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். வாங்கிக் கொண்டேன். மெல்லப் பேச்சைத் தொடங்கினேன்.

"அண்ணா! விஜயாவைப் பற்றி என்ன முடிவு செய்தாய்?"

அம்மா சொன்னாள்: "அவனுக்கு விஜயாவைப் பிடிக்கவில்லையாம்!"

"ஏன்?" என்று கேட்டேன்.

"எனக்கு அவளைப் பிடிக்கவில்லை" என்றான் அண்ணன்.

"காரணம்?"

"இன்று உன் அலுவலகத்துக்கு வந்து விஜயாவுக்குத் தெரியாமல்



அவளைப் பார்த்தேன். என் மனத்துக்குப் பிடிக்கவில்லை. விட்டுவிடு.''

''அவளைப் பார்த்துவிட்டு எந்த ஆண் பிள்ளையும் வேண்டாம் என்று சொல்ல முடியாதே ! அவள் என்ன அழகாயில்லையா ?'' என்று கேட்டேன் நான்.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்!'' என்றான் அண்ணன்.

'' என்னது ? அவள் அழகாயில்லையா ? என்னைப் பார்த்துச் சொல் அண்ணா..... சே ! உனக்கு அழகு என்றால் என்னவென்றே தெரியாது போலிருக்கிறதே !'' என்றேன் நான் கோபமாக.

'' அம்மா! காஞ்சனாவுக்கு எவ்வளவு கோபம் வருகிறது பாரேன் ! அவளுடைய தோழியை அழகில்லை என்று சொன்னதற்காகப் பெருமைப்படாமல் சண்டைக்கு வரும் முதல் பெண் இவளாகத்தான் இருக்க வேண்டும் !''

'' பின் என்ன ? என்னைவிட அவள் எவ்வளவு அழகு. நானே என்னை மறந்து அவளை எத்தனை முறைகள் பார்த்திருக்கிறேன்.....'' என்றேன் நான்.

அம்மா குறுக்கிட்டுச் சொன்னாள்: ''உன் அண்ணா குமார் விஜயாவை வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் அவள் அடக்கமாகத் தெரியவில்லையாம்.... என்றுதான் !''

'' அண்ணா ! என்னை நேராகப் பார்த்துச் சொல். மறைந்திருந்து சில நிமிஷங்களே பார்த்துவிட்டு வந்து ஏதாவது என் தோழி விஜயாவைப் பற்றிச் சொல்லிவிடுவதா ? அவளோடு எப்போதும் அலுவலகத்தில் கூடவே இருக்கும் நான் சொல்வதில் அவ்வளவு அவநம்பிக்கையா ?''

'' எப்போதும் கூடவே இருக்கிறவளுக்குத் தெரியாத குறைகளும் திடீரென்று பார்க்கும் வேற்று மனிதனுக்குத் தெரிந்துவிடும் !'' என்றான் அண்ணா.

'' அப்படி என்ன குறையைத்தான் கண்டாய் ?''

''அவள் ஆடை உடுத்தியிருக்கும் கோலமே போதாதோ ?''


''என்ன சொன்னே ? இந்தக் காலத்தில் யார்தான் அப்படி 'டிரஸ்' செய்து கொண்டு வரவில்லை ?''

'' அது என்னவோ எனக்குப் பிடிக்கவில்லை !''

எனக்குக் கோபம் பொங்கியது. ''அண்ணா! என்னைப் பார். நன்றாகப் பார் ! நான் எப்படி 'டிரஸ்' செய்து கொண்டிருக்கிறேன். என்னைவிடவா மோசமாக அவள் தெரிந்தாள்? ஒருத்தி 'டிரஸ்' செய்திருக்கிற கோலத்தைப் பார்த்துவிட்டு முடிவு செய்துவிடும் காலமில்லை இது! சரி, நானும் எப்படி 'டிரஸ்' செய்து கொண்டிருக்கிறேன், பார்த்தாயா ? ஏன் இது உன் கண்களை உறுத்தவில்லை? சொந்தத் தங்கை. ஒரே வீட்டில் வளர்ந்து வருபவள். இதெல்லாம்தான் காரணம். என்னையும் பெண் பார்த்துவிட்டு யாராவது உன்னைப் போலவே சொல்லிவிட்டுப் போனால்.......''

அம்மா குறுக்கிட்டாள். ''நானும் அவனுக்குச் சொன்னேன், காஞ்சனா. 'நாளைக்கு அவள் உன் மனைவியாக வந்ததும் நீயே அவளை நவநாகரிகமாக உடுத்தும்படி சொல்வாய் ! காலத்துக்கு ஏற்ற பிள்ளைதானேடா நீ' என்று.''

''அம்மா....! அண்ணா சொல்வதும் ஒருவிதத்தில் நல்லதுதான். வெளியார் கவர்ச்சியாக இருந்தால் கண்ணுக்கு விருந்து. வேண்டியவர்கள் இருந்தால் குறைதானே? நானே இனி மேல் ஒழுங்கா, அம்மாமி கோலத்தைக் கொஞ்சம் எடுத்துக்க வேண்டியதுதான். விஜயாவை அப்படியே மாறச் சொல்லி விடுகிறேன்...... என்ன அண்ணா ?''



ஏன் இந்த நாடகம்?

வள்ளிமுருகன்

மழையில் டென்னிஸ்!



டென்னிஸ் ஆட்டக்காரர்கள் இனி மழையிலும் ஆடலாம். டென்னிஸ் கோர்ட்டுக்குக் கூரை பத்தொன்பது நிமிஷங்களில் தயாராகி விடுகிறது. இந்தக் 'கோர்ட் கவர்' பிளாஸ்டிக்கினால் ஆனது. காற்றடித்தால் கூரையாகும். பிரித்து மடித்து வைக்க வேண்டுமானால் ஒரு ஜிப்பை இழுத்தால் போதும். காற்று வெளியேறிவிடும். கூரையை மடித்து வைத்துவிடலாம். தனியார் ஆட்டத்துக்கென்றும் இரட்டையர் ஆட்டத்துக்கென்றும் தனித் தனியே கூரைகள் உள்ளன. - பி. எஸ்.

'' நீ என்னவாவது செய். எனக்கென்ன? அவளை எனக்குப் பிடிக்கவில்லை.... விட்டு விடு !'' என்றான் குமார்.

''அண்ணா...! அவள் என்னுடைய நெருங்கிய சிநேகிதி. நீ எனக்கு அண்ணனாக உரிமை கொண்டிருப்பது போல் அவள் விஷயத்தில் எனக்கும் உரிமை உண்டு. அதனால் அவளைக் குறை சொல்லும்போது காரணத்தை வெளிப்படையாகச் சொல்லாமல் மழுப்பினால், கோழை என்பேன்!''

'' காஞ்சனா... என்னையா கோழை என்கிறாய் ! விஷயத்தைச் சொல்ல வேண்டாம் என்றுதான் பார்த்தேன். உன் அலுவலகத்தில் அஸிஸ்டெண்ட் மானேஜராக இருப்பவனுக்கும் உன் உயிர்த் தோழி விஜயாவுக்கும் இடையே ஏதோ.....''

''அண்ணா....!'' என்று கத்தினேன். ''ஒரு பெண் மீது இந்த ஆண்களுக்கு அபாண்டமாகச் சொல்லுவதை மட்டுப்படுத்திக் கொள்ளவே முடியாதா ?''

''மற்றவங்க, அதாவது உன் அலுவலகத்திலேயே வேலை செய்பவர்கள் பேசிக் கொள்வதாகக் கேட்டதைத்தானே சொன்னேன்....''

'' அண்ணா ! அவளைப் பற்றிக் குறை சொன்னவர்கள் அதற்கான காரணத்தையும் சொன்னார்களா? அவர்கள் சொல்லியிருக்க முடியாதே...''. என்று அண்ணனைப் பார்த்தேன்.

''சொன்னார்கள்.''

'' என்ன ?''

'' 'அந்த அஸிஸ்டெண்ட் மானேஜருக்கு உன்னுடைய தங்கை காஞ்சனா, விஜயா இரண்டு பேர் ஸ்டெனோக்களாக — செகரெட்டரிகளாக இருக்கிறார்கள்.... அப்படி இரண்டு பேர் இருக்கும்போது எப்போது மணியடித்தாலும் விஜயாதான் அவன் அறைக்குள் நுழைகிறான்' என்றார்களே....''

'' அந்தச் சொற்களில் என்ன குற்றத்தைக் கண்டாய் அண்ணா ? அவள் என்னைவிட வேலை செய்வதில் திறமை உள்ளவள். அதனால் அவர் விஜயாவைக் கூப்பிடுகிறார். அவள் வெளியே வந்தால் வேலையை இரண்டு பேருமாகப் பங்கு போட்டுக் கொண்டு செய்வோம். இந்தக் கால நாகரிக உலகத்தில் இது தவறாக ஒரு பெண்ணான எனக்கே தோன்றாதபோது நீ நினைப்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது'' என்றேன் நான்.

'' நீ ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, நான் சொன்னது சொன்னதுதான் ! அவள் மோசமானவள் தான் !'' என்றான் அண்ணன் குமார்.

''அண்ணா!... நீ போகிற போக்கைப் பார்த்தால்..... அவளுக்கு அடுத்தபடி அவரையுமே மோசமானவராகச் சொல்லி விடுவாய் போலிருக்கிறதே...''

'' சொல்லித்தான் தெரிய வேண்டுமா ? அவனும் மோசமானவன்தான் !''

''அண்ணா....!'' என்றேன் கோபமாக. ''இன்னொரு முறை அவரைப் பற்றி அப்படிச் சொல்லாதே. எனக்குக் கோபம் வரும்.''

''ஊரில் யாரைப் பற்றியாவது சொன்னால் உனக்கேன் கோபம் வரவேண்டும் காஞ்சனா?''

'' ஊரில் அவர் யாரோ இல்லை. என் விருப்பத்துக்குரியவர். என் மனம் கவர்ந்த ஒருவரைப் பற்றிக் குறை சொன்னால் எனக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்?'' நாக்கைக் கடித்துக் கொண்டேன்: 'ஐயோ, என்ன இது? இப்படி உளறிக் கொட்டிவிட்டேனே!'

ஆனால் அண்ணா குமார் எழுந்து ஒரு குதி குதித்தான். ''அம்மா... நான் சொல்லவில்லை ! சரியாகப் போய்விட்டதா? இந்தக் காலத்துப் பெண்கள் யாரையாவது மனத்தில் நினைத்துக் கொண்டிராமல் இருக்க முடியாது என்றேனே. என்னைப்போய் இவளுக்கு மாப்பிள்ளை தேடு என்றாயே..... 'இந்தக் காலத்தில் மாப்பிள்ளை தேடுவது அவ்வளவு சுலபமில்லை. அவளே யாரையாவது தன் மனத்தில் தேடி வைத்திருப்பாள். அவனையே அவளுக்கு மாப்பிள்ளை ஆக்கிவிடுவோம்' என்றேனே.... அது பலித்து விட்டது பார்த்தாயா? என் தங்கை தேர்ந்தெடுத்திருக்கும் பிள்ளையும் சாதாரணமானவன் இல்லை..... எப்படி அவளுடைய செலக்ஷன்?'' என்றான்.

''காஞ்சனா...! விஜயாவைப் பற்றியும், உன்னுடைய 'அவரை'ப் பற்றியும் குமார் சொன்னதெல்லாம் பொய். சும்மா ஒரு நாடகமாடினோம், உன்னைத் தெரிந்து கொள்ள. 'இப்போதைக்கு எனக்குக் கல்யாணம் வேண்டாம்' என்று நீ சொல்லிக் கொண்டிருந்தாய்.' 'காஞ்சனாவுக்கு முன்னால் எனக்கா?' என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தான். இதற்கு ஒரு நல்ல முடிவை நீங்களாகவே தேடிக் கொண்டு விட்டீர்கள். இனி ஒரே மேடையில் இரட்டைக் கல்யாணம் தான்!'' என்றாள் அம்மா.

சக்தி, அத்துடனே வளர்ச்சி

இரண்டையும் அளிப்பது ஃபெர்ராடால் மட்டும் தான்

- ஃபெர்ராடாலில் உள்ள இரும்புச் சத்தும், இன்சுவையுள்ள மால்ட்டும் வற்றாத சக்தியை வரம்பின்றி வழங்குகின்றன.
- அதிலுள்ள வைட்டமின்களின் சரிவிகிதக் கலவை— ஆரோக்கியமான திட வளர்ச்சிக்கு வழிவகுத்திடுகிறது.


ஃபெர்ராடால்®

இரும்புச் சத்து, வைட்டமின் டானிக்.
சுவைத்திட இனியது.

பார்க்-டேவிஸ் தயாரிப்பு

*ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க், ரிஜி. யூஸர்ஸ்—
பார்க்-டேவிஸ் (இந்தியா) லிட்., பம்பாய்-72AS.





முன்னேற்றப் பாதையில் கார்பொரேஷன் பாங்க்

இரண்டே ஆண்டுகளில் டிபாசிட்டுகள் இரண்டு பங்கு அதிகரிப்பு

இன்றைய
டிபாசிட்டுகள்
ரூ. 42 கோடிக்கு
மேல்





முதல் வகுப்பு வங்கியாக புதிய தோற்றம்

இந்தப் பெரிய சாதனையை அடைந்ததில் எங்களுக்குப் பெருமகிழ்ச்சி. மேலும் உற்சாகத்துடன் உழைக்கவும், எங்களிடம் நீங்கள் கொண்டுள்ள நன்மதிப்பைப் பேணிக் காக்கவும், கண்ணயராமல் பாடுபடுவோம்.

கடந்த ஆண்டில் நாங்கள் கடன் வழங்கிய தொகை முந்திய ஆண்டைவிட 74 சதவிகிதம் அதிகம். சிறிய போக்குவரத்து சாதன நிலையங்களுக்கு 250 சதவிகிதமும், பின்தங்கியவர்களுக்கு 200 சதவிகிதமும், சுய தொழில் செய்பவர்களுக்கு 1600 சதவிகிதமும் அதிகமாக கடன் வழங்கப்பட்டிருக்கிறது. தவிர 50 சதவிகிதம் கிளை ஸ்தாபனங்களை அதிகமாகத் துவக்கி வைத்திருக்கின்றோம்.

உங்களது நன்மதிப்பையும், எங்களிடம் உள்ள நம்பிக்கையும் எங்களது முன்னேற்றத்துக்கு பெருமளவு காரணம் என்று நாள்தோறும் நினைவு படுத்திக்கொள்கிறோம்.

— சிநேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி

கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்

ESTD. 1906

பதிவு அலுவலகம்: உடுப்பி

நிர்வாக அலுவலகம்: மங்களூர்-1

mas CBL/157 Tam

இரண்டாம் முடிச்சு

1

வாழ்வின் ஒவ்வொரு முடிச்சிலும் ஒவ்வொரு பரிணாமதத்துவம். முடிச்சுக்களைப் போடுவதும் அவிழ்ப்பதும் இயற்கை. யுகத்தின் தொடக்கத்தில் விழுந்த முதல் முடிச்சு இப்போது சந்தியாகி இரண்டாம் முடிச்சுள் சுழல்கிறது! இறுதியாக ஒரு முடிச்சு விழுகிறபோது அது ஊழியாக முடிகிறது என்கிறார்கள்!

தத்துவங்களுக்கு நீட்டலளவையோ நிறுத்தலளவையோ ஏது?

பிறவித் தத்துவத்துக்கே ஒரு புதிய சஞ்சாரமாக விளங்கும் சீதாவையும் லட்சுமியையும் கண்டு வியக்காதார் யார்? இந்த அபூர்வப் பிறவிகள் இரட்டைப் பிறவிகளா? இல்லை; இரு பிறவிகள்! ஆனால் அவர்கள் வரை ஒரே பிறவி! யாரும் தங்களை இரண்டாகப்

மூன்று முடிச்சுக்கள்

கே. பாலசந்தர்



பிரிக்கச் சம்மதியாமல் — தங்களையே 'தானா'க்கிக் கொண்டு வாழ்கிற சின்னஞ்சிறு அகல் விளக்கு! அன்பையே எண்ணெயாக ஊற்றிப் பாசத்தைத் திரியாக்கி எரியவிட்டு அந்த ஒளியில் வழி தடுமாறாமல் நடந்து வருகிற அற்புதத்தை என்ன சொல்ல? இல்லையென்றால் இந்த அபூர்வப் பெண்மணிகளைத் தமது மாளிகைக்குக் காவலாக வைத்து ரசித்துப் பாதுகாத்து வருவாரா டேவிட்ஸன் துரை? அவரும் இன்னும் ஓரிரு தினங்களில் இங்கிலாந்துக்கே சென்றுவிடும்படியான நிலை ஏற்பட்டு விட்டது! இந்தச் சீதாலட்சுமி விஷயத்தில் என்ன முடிவு காண்பது என்கிற சிந்தனை வேறு அவரை அலைக் கழித்துக் கொண்டிருந்தது.


சென்னை மாநகரம் தேர்தல் பிரசாரத்தால் அல்லோல கல்லோலப் பட்டு ஓய்ந்திருந்தது. வெவ்வேறு அரசியல் கட்சிகளின் பிரசாரம் நின்று, குடைந்து கொண்டிருந்த மக்கள் மண்டைகளுக்கு ஓய்வை ஏற்படுத்தியது. பொழுது விடிந்ததும் விடியாததுமாகத் தேர்தலுக்குரியவர்கள் கார்களையும் ரிக்ஷாக்களையும் ஏவி, வாக்காளர்களை வலை போட்டுப் பிடிக்க முனைந்து விட்டனர்.

எந்தக் கட்சி வென்றாலும் யாருக்கு என்ன லாபம் வரப் போகிறது என்பது போலத் தம்முடைய கடமைகளில் மூழ்கி யிருந்தார் டேவிட்ஸன் துரை. மாளிகையின் வாசலில் சீதாவும் லட்சுமியும் முத்தான முடிச்சுக்களுடன் அமர்ந்து காணப்பட்டனர்.

திருப்பதி, ஆண்டாள் குறிப்பிட்ட அதே இரு பெண்மணிகள்தாம் இவர்கள்! உண்மையிலேயே அப்படிப் பட்ட ஒரு ஜோடி இருக்கத்தான் செய்தது.

இந்தப் பிறவிகளின் அபூர்வத்துக்கான காரணங்கள் இரண்டு முடிச்சுக்களில் அடங்கிக் கெட்டியாக இருக்கின்றன. இருவருமே என்றைக்குமே எக்காரணத்தை முன்னிட்டும் இணைபிரியாமல் வாழத் தங்களுக்குள் ஒரு சங்கல்பத்தை நிர்ணயித்துக் கொண்டு, சேலைகளின் தலைப்பு! முனைகளைக் கொண்டு இரண்டு முடிச்சுக்களைப் போட்டுக் கொண்டிருந்தனர். விழிப்பது முதல் உறங்குகிற வரைக்கும் மட்டுமல்லாமல் கனவு காண்கிற நேரத்திலும்கூட அந்த முடிச்சுக்கள் அவிழாமல் கெட்டியாக இருக்கும்; இருக்க வேண்டும்! சேலைகளைத் துவைக்கிறபோதும் கூட இரண்டு முடிச்சுக்களுடன் ஒன்றிணைந்தே அழுக்கைப் போக்குவார்கள்.

தங்களை யாரும் சீதா என்றும் லட்சுமி என்றும் பிரித்துப் பெயரிட்டு அழைப்பதையே விரும்பாதவர்கள். டேவிட்ஸன் துரைகூட 'சீதாலட்சுமி' என்றே ஒற்றைப் பெயரிட்டு அழைப்பார். இதில் வேடிக்கை என்னவென்றால் சீதா ஒரு குருடி; லட்சுமியோ பிறவி ஊமை. ஒருத்திக்கு இந்த உலகமே கறுப்பானது என்கிற நினைவு; இன்னொருத்திக்கு இந்த உலகம் எத்தனை நிசப்தமாக இருக்கிறது! அடைபட்ட வாயும் தடைபட்ட செவிகளும் இல்லாமல் போனது ஒரு குறையாகவே தென்பட வில்லை. சீதாவுக்குக் கண்களாய் விளங்கினாள் லட்சுமி. லட்சுமிக்கோ வாயும் காதுகளுமாய் நின்றாள் சீதா!



இருவருமே தங்கள் ஸ்பரிசங்களை அந்த இரண்டு முடிச்சுக்களில் அடக்கி வைத்திருந்தனர்.

வியப்பாக இருக்கிறதல்லவா? இப்படி வியக்கத் தக்க எத்தனையோ காரண காரியங்கள் இந்தப் பரந்த உலகில் இழை பிரிந்து கிளை விரித்திருக்கின்றன. பலருடைய கண்களில் அவை படுவதில்லை. அவ்வளவே!

மாளிகை வாசலில் ஓட்டையும் உடைசலுமாக ஒரு கார் வந்து நின்றது. அது ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரருடையது. வெள்ளைத் துரையான டேவிட்ஸனை அழைத்துச் செல்ல இருவர் உள்ளே நுழைந்தனர்.

செய்தியறிந்த டேவிட்ஸன் தம்முள் சிரித்துக் கொண்டார். அழகிய 'பென்ஸ்' கார் அவருக்காக 'ஷெட்'டில் காத்திருக்கிறது. வாக்குச் சேகரிப்பாளர்களுக்கு இது தெரிய வேண்டுமே! எப்படியோ ஒரு வாக்கு (வோட்டு)த் தவறிவிடக் கூடாதே என்கிற துடிப்பு அவர்களுக்கு!

தம்முள் எழுந்த பொருள் புதைந்த புன்னகையுடன் ''எனக்குக் கார் இருக்கிறது; நானே வோட்டுச் சாவடிக்கு வந்து விடுகிறேன்'' என்று தெளிவான ஆங்கிலத்தில் கூறினார் டேவிட்ஸன்.

வந்தவர்கள் வாசற்படியில் அமர்ந்திருந்த சீதாலட்சுமியை நோக்கி, ''நீங்கள் வோட்டுப் போட வரலாமே?'' என்று அழைத்தனர்.

சீதா சொன்னாள்: ''வோட்டுப் போட நானே வருகிறேன். இந்தப் பங்களாவுக்குக் காவல் காத்தாலும் எனக்



குன்னு ஒரு கொள்கை இருக்கும். அதை உங்கள் காரில் ஏறி விபத்தாக்க விரும்பலே. வாக்காளர்கள் அவர்களாக வந்து தங்களோட வோட்டைப் போடறது தான் சுத்தமான ஜனநாயகம். மன்னிச்சுக்குங்க!''

வந்தவர்கள் வாயடைத்துத் திரும்பினர். சீதாலட்சுமியின் இந்த விளக்கத்தைக் கேட்டு அரைகுறையாகத் தமிழ் தெரிந்த டேவிட்ஸன் துரை பெரிதாக வியந்து போனார். அடடா! ஊமையும் குருடியுமாக இருக்கிற இந்த இரட்டையர்களிடம்தான் கொள்கைகள் எவ்வளவுக்கு விழித்தும், உரையாடியும் மகிழ்கின்றன! நினைக்க நினைக்க அவருக்கு அதுவரையில் படித்து வந்த இந்தியக் கலாசார மேன்மைகள் உண்மை என்றே உறுதியாயிற்று.

சற்றைக்கெல்லாம் சீதாலட்சுமி இருவரும் வோட்டுச் சாவடி நோக்கிப் புறப்பட்டனர்.

'கியூ' வரிசை எக்கச்சக்கமாக இருந்தது. காலை வேளையாதலால் பெண்கள் வரிசை மிகவும் குறைவாகக் காணப்பட்டது. சீதாலட்சுமி முறைப்படி வரிசையில் நின்று நகர்ந்தனர்.

ஏறத்தாழ ஒரு மணி நேரத்துக்குப் பிறகு சீதாலட்சுமி, பெயர்ப் பட்டியல் சோதிப்பாளர் அருகே சென்று நின்றனர்.

''ஒருத்தருக்குப் பின்னால் ஒருத்தர் வரணும்மா! ரெண்டு பேருமா சேர்ந்து வந்துட்டீங்களே!'' என்றார் பெயரைச் சோதித்து அனுப்புகிறவர்.

''நாங்கள் இருவரல்ல; ஒருவர்!'' என்றாள் சீதா.

அனைவருமே ஆச்சரியத்தால் கண்களை அகல விரித்து நோக்கத் தொடங்கினர்.

''சீதா, லட்சுமின்னு தனித் தனியா பேரு இருக்குதேம்மா!''

''அது குறிச்சுக்கிட்டுப் போனவங்க தப்பு! இதோ பாருங்க! எங்க ரெண்டு பேருக்கும் ஒரே பெயர்தான். சீதாலட்சுமின்னு இருக்கணும். ரெண்டு பேருமாச் சேர்ந்துதான் ஒரே வோட்டுப் போடுவோம். கேவலம் இந்த வோட்டுக்காக நாங்க ஒருத்தரையொருத்தர் பிரிச்சுக்க முடியாது! தயவுசெய்து பிரிச்சிடாம எங்களை அனுமதியுங்க!''

கூடியிருந்த மக்களிடையே இந்த ஆச்சரியமான தகராறினால் 'கசமுச' வென்ற பேச்சு எழுந்தது. அத்துடன் பலர் இது என்ன வேடிக்கையான காட்சியாக இருக்கிறதே என்று வியந்து நோக்கினர். இதற்குள் தேர்தல் அதிகாரி அங்கு வந்து விட்டார். நடந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு என்ன

ராஜா ராணி

இந்தியத் திரை உலகில் 'கிஸ்மத்' என்று ஒரு படம் வந்தாலும் வந்தது, திருட்டுக் கதைகளுக்கு அதாவது திருடர்களைக் கதாநாயகர்களாகக் கொண்ட கதைகளுக்கு யோகம் அடிக்கலாயிற்று.

சம்பிரதாயப்படியே ராஜேஷ் கன்னா, 'ராஜா — ராணி'யில் வெறும் திருட்டோடு நிறுத்திக் கொள்ளாமல் உள்ளத் திருட்டையும் புரிந்து விடுகிறார்.

வடநாட்டுத் திருமண முறை மணமகனும், மணமகளும் ஒருவரையொருவர் பாராமலே கரம் பிடிக்கும் வாய்ப்பை நல்குவது கதையைச் சிக்கல் இல்லாமல் கொண்டு செல்வதற்கு உதவுகிறது. ஆனால் அப்புறம்தான் அவர்கள் வாழ்க்கையில் சிக்கலும் சிடுக்கும் தொடங்குகின்றன.


ராணி (ஷர்மிலா டாகூர்) ஆடலழகி, பாடலரசியாகக் கவர்ச்சி கூட்டுகிறாள். ரசிகர்களின் நாடி பிடித்து எடுக்கப்பட்ட படமாதலால், 'யூ' சான்றிதழ் பெற்ற படமானாலும் பலாத்காரக் காட்சி தத்ரூபமாகக் காட்டப்படுகிறது. ராஜ்மெஹ்ரா வெறி உணர்வை முக பாவத்தாலேயே திறம்படச் சித்திரித்துக் காட்டுகிறார். கலையம்சம் தெறிக்க நல்ல உத்தியோடு எடுக்கப்பட்ட படங்கள் 'ஏ' சர்டிபிகேட் பெறுவதும், அப்பட்டப் படங்கள் 'யூ' சர்டிபிகேட் பெறுவதும் — சிதம்பர ரகசியமா, இல்லைவெளியா? தெரியவில்லை.

ராணியைக் கற்புநெறி தவறாதவளாகக் காட்டிக் கணவனோடு இணைத்திருக்கும் முறை பாரதப் பண்பைக் காக்கிறது! கதையை முடித்து வைப்பதற்கு ஓ ஹென்றியும் மாப்பஸானும் வெகுவாக உதவி யிருக்கிறார்கள். நன்றி நாம் கூறிவிட்டால் போகிறது! 'நான் ஒரு திருடன், நீ என் ராணி' என்னும் பொருள் தரும் 'மைன் ஏக் சோர், தூ மேரீ ரானீ' பாடல் செவிக்கு இன்பம் பாய்ச்சுகிறது. ரா.வி.



மாதம் ஒன்று. இரண்டு. மூன்றுமெல்ல கவிழ்ந்து படுக்கும் நன்று
மாதம் நான்கு. ஐந்து. ஆறு மெதுவாத் தவழ்ந்து உதைக்கும் பாரு

மாதம் ஏழு. எட்டு. ஒன்பது நன்கு உட்காரும் குழந்தை என்பது



மூன்றாவது மாதத்திலிருந்து உங்கள் குழந்தைக்குப் பால் மட்டும் போதாது. சீரான உடல் வளர்ச்சிக்கு உங்கள் குழந்தைக்குத் தேவை பாரெக்ஸ்...அதன் முதலாவது திட உணவு. குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு ஏற்ற சரியான புரதச் சத்து கொண்டது பாரெக்ஸ்.

தாய்ப்பால் குடிப்பதை குழந்தை எவ்வளவு சீக்கிரம் விட்டுவிடுகிறதோ அவ்வளவு நல்லது என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். குழந்தையின் சீரான வளர்ச்சிக்கு வேண்டிய சரியான புரதச் சத்துடன் கார்போஹைடிரேட்டுகள், கால்ஷியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் மற்றும் தாது உப்புகள் யாவும் அடங்கியது பாரெக்ஸ். பாரெக்ஸ் புத்தகத்தை இலவசமாகப் பெற 25 பைசா தபால் தலையை இணைத்து, டிபார்ட்மெண்ட், K-I-P தபால் பெட்டி 16558, பம்பாய்-18 டபிள்யூ பீ. என்னும் முகவரிக்கு எழுதுக. (எந்த மொழியில் வேண்டுமென்று தெரிவிக்கவும்.)



சீரான உடல் வளர்ச்சிக்குக் குழந்தையின் முதலாவது திட உணவு.

பாரெக்ஸ்® - க்ளாக்ஸோ தயாரிப்பு

CMGF-228-202 Tam


சந்திரிகாவுடன் மட்டுமே
அழகு நிறைவு பெறுகிறது
சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லட் சோப்
CHANDRIKA
AYURVEDIC SOAP
சந்திரிகா பிராடக்ட்ஸ் கோயம்புத்தூர்-2 சென்னை-10

சொல்வது, என்ன செய்வது என்றே புரியாமல் தவித்தார். பிறகு சீதா லட்சுமியை நோக்கி அவர் எவ்வளவோ எடுத்துச் சொன்னார். சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று மிகவும் தாழ்மை யாகவும் கூறிப் பார்த்தார். சீதா லட்சுமி கேட்க வேண்டுமே!

''உங்க சட்டம் இடம் கொடுக்காத தைப் பற்றி எனக்குக் கவலே இல்லே. 'ஒரு' வோட்டு தேவைன்னு அனுமதி யுங்க! இல்லேன்னு நாங்க போகிறோம். எங்க திட்டம் இதுக்கு இடம் கொடுக்க வில்லே. எங்க ரெண்டு பேரையும் இந்த வோட்டு பிரிக்கும்னு, இந்த வோட்டு தேவையே இல்லே!''

சீதாலட்சுமி வந்த வழி நோக்கித் திரும்பினர். அந்த ஆச்சரியமான இரட்டையர்களை வரிசை கட்டி நின்ற மக்கள் வாய் பிளந்து நோக்கினர். இந்த யுகத்தில் இப்படி ஒரு காட்சியா? நட்புக்கு இப்படி ஒரு புதிய விளக்கமா? அன்பு, காதல், தருமம் அது இது எல்லாம் வெறும் ஏட்டளவு தான் இக்காலத்தில் என்பது போக, இப்போது எடுத்துக் காட்டுகிற அள வுக்கு இரண்டு இதயங்கள் ஒரே அடிப் படையுடன் நடந்து கொள்கின்றனவே!

தேர்தல் அதிகாரி பிரமை பிடித் தவர் போல் சீதாலட்சுமி செல்வதை நின்று கவனித்தார். தமிழறிவு நிறைந்த அவருக்குக் காளமேகப் புல வர் காலத்தில் வாழ்ந்த இரட்டைப் புலவர்களுடைய நினைவு எழுந்தது. ஒரு புலவன் குருடன், இன்னொரு புலவன் முடவன்! முடவனைத் தோளில் சுமந்து கொண்டு குருடன் நடப்பான். முட வன் வெண்பாவின் இரண்டு அடி பாடு வான்; குருடன் மீதி இரண்டு அடியைப் பாடிப் பரிசில் பெறுவான். அந்தப் புலவர்கள் வாழ்க்கை நம்பத் தகுந்ததா என்று சந்தேகிப்பவர்களுக்கு, இந்தப் பெண்கள்கண்கூடாகவிளங்குகிறர்களே.

சட்டத்தை மீறி எதையும் செய்ய முடியாத அவரால் வேறு என்ன செய்ய முடியும்?

மறுநாள் செய்தித் தாள்களில் இந்த அபூர்வ நிகழ்ச்சி கொட்டை எழுத்தில் பிரசுரமாகி யிருந்தது. படிக்கப் படிக்க டேவிட்ஸன் மலைத்துப் போனர். இப் பேர்ப்பட்ட அற்புதப் பிறவிகளை இங்கி லாந்துக்கே அழைத்துச் சென்றுவிட் டால் என்ன என்கிற எண்ணம் வலுத் தது. அவர்களை விட்டுப் பிரிந்து செல் வதற்கு டேவிட்ஸனுக்கு இப்போது மனம் வரவில்லை.

இரவு பூத்தது. வானில் நட்சத் திரங்கள் கிளித் தட்டு விளையாடிக் கொண்டிருந்தன. நிலவுக் கதாநாயகி ஒளிநகை புரிந்தாள்!

மாடியை விட்டு இறங்கி வந்தார், டேவிட்ஸன் துரை. வெளிநாட்டு பெட்ரோல் கம்பெனிகள் பல மூடப் பட்ட காரணத்தால் அவர் தாயகத் துக்குத் திரும்ப வேண்டிய நிலை ஏற் பட்டது.

எசமானைக் கண்டதும் சீதாலட்சுமி எழுந்து நின்று கொண்டனர்.

''சீதாலட்சுமி! உங்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசணும்னு வந்தேன்.''

டேவிட்ஸன் அவருக்கே உரித்தான உடைபட்ட தமிழில் உருக்கமாகப் பேசினர்.

''என்ன எசமான்?'' — சீதா மிகவும் பவ்யமாகக் கேட்டாள்!

''ஒண்ணுமில்லே! நான் இன்னும் இரண்டு நாள்ளே இங்கிலாந்துக்குப் போறேன்.''

''தெரியும் துரை!''

''நான் போயிட்ட பிறகு நீங்க என்ன செய்வீங்கோன்னு நினைக்கிறப்ப வேதனையா இருக்கு!''

''இதுலே வேதனைப்பட என்ன இருக்கு எசமான்! ஆண்டவன் நித்திய சந்தோஷி! அவனை நம்பி யிருக்கிற யாருக்குமே வேதனை கிடையாது!''

''காட் (God)'' என்று பெருமூச் செறிந்தார் டேவிட்ஸன்.

''சீதாலட்சுமி! பேசாமல் நீங்க என் னோடை இங்கிலாந்துக்கு வந்துடுங் களேன்! எனக்கும் ஒரு நிம்மதி! உங் களை எங்க நாட்டுக்கு அழைச்சிக்கிட்டுப் போனு எங்க நாட்டுக்கே ஒரு பெருமை கிடைக்கும். என்னோட வருவீங்கோன்னு எதிர்பார்க்கிறேன்.''

பார்வையற்ற சீதாவின் கண்கள் அகல விரிந்தன. லட்சுமி பதுமை போல் எதுவும் புரியாமல் இமைகள் துடிக்க நின்று கொண்டிருந்தாள். துரை தன்னிடம் சொல்லியதை லட்சுமிக்குப் புரிய வைக்க வேண்டுமே! அது சீதா வின் முதல் கடமையாக இருந்தது. தனியாக அழைத்துச் சென்றுள். ஊமையும் செவிடியுமான லட்சுமிக்கு எப்படித்தான் இதைப் புரிய வைக்கப் போகிறுள்? ஆனல் அவர்களுக்கென்று ஒரு பாஷை இருக்கிறதே! பேசிக் கொண்டனர்!

லட்சுமி புரிந்து கொண்டு விட்டாள்; கீழிருந்து ஒரு கைப்பிடி மண்ணை எடுத் தாள்! பே...பே...பே... என்ற வார்த் தைகள்தான்! கையிலுள்ள ஒரு பிடி மண்ணும் இந்த ஒற்றெழுத்து வார்த்தை களும்தான் அவளுடைய பதில்!

இருவரும் திரும்பி எசமானரிடம் வந்தார்கள்.

''மன்னிக்கணும் எசமான்! எந்த மண்ணிலே பிறந்தோமோ, அந்த மண்ணிலேயே வாழ்ந்து முடியத் தீர்மானிச்சிட்டோம். இந்த மண்ணிலேயே வளர்ந்த மல்லிகைச் செடியானாலும் அதைப் பிடுங்கி எடுத்துக் கிட்டுப் போய் மேல் நாட்டிலே நட்டு வச்சா வாசனையை இழந்துடறது. இது மண்ணோட மணம். நாங்க இங்கேயே இருந்துடறோம்!'' சீதா எசமானரிடம் கூறினாள்.

டேவிட்ஸன் கண்களில் நீர் துளித்தது. ''லட்சுமி! நீ என்ன சொல்லறே? மறுபடியும் யோசனை செய்து சொல்லு!''

பதற்றம் கண்டவள் போல் அண்ணாந்து பார்த்தாள் லட்சுமி. அவளால் பேச முடியவில்லை. உதடுகள் துடியாய்த் துடித்தன.

மௌனத்தைப் பாஷையாகக் கொண்ட அந்த ஊமைப் பெண், தாறுமாறான குரல் ஒலிகள் மூலம் எதையோ கூறுகிறாள்! கைகள் சமிக்ஞை செய்கின்றன. அவளுடைய அந்தப் பாஷை டேவிட்ஸனுக்குப் புரிகிறது. கிட்டத்தட்ட ஐந்தாண்டுகளுக்கு மேலாக அந்தப் பங்களாவைக் காவல் காத்து வருகிறார்களே, சீதாலட்சுமி!

'எங்களைப் பிரிக்க உங்களுக்கு எப்படி மனம் வந்தது? சீதா சொன்னதுதானே லட்சுமி சொன்னது? என்னுடைய நாக்கு சீதாவிடம் இருக்கிறது; சீதாவின் கண்கள் என்னிடம் இருக்கின்றன. இப்படிப் பிரித்துக் கேட்கலாமா?' —லட்சுமியின் பாஷையைப் புரிந்து கொண்ட டேவிட்ஸன் துரை ''ஐயாம் ஸாரி, சீதாலட்சுமி!'' என்றார். அவரால் கண்ணீரை அடக்கிக் கொள்ள முடியவில்லை. ''இட்ஸ் ஆல் ரைட்!''

இரு தோள்களையும் குலுக்கிக் கொண்டு பங்களாவினுள் சென்றார்.

வான வீதியில் நிலவு இரு முறை பயணமானது.

பயணத்துக்கான ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு வெளியே வந்தார் டேவிட்ஸன்.

வாசற்படியில் சீதாலட்சுமி, பிரிவாற்றாமை தாளாமல் நின்று கொண்டிருந்தனர். இரண்டு கண்களில் நீர் மாலையிட்டது.

''சீதா!''

''எசமான்!''

''உங்களை விட்டுப் பிரிய எனக்கு மனசு வரலே. ஆண்டவன் உங்களைக் காப்பாத்தணும்!'' என்று கூறிக் கொண்டே ஒரு கட்டுக் கரன்ஸியை எடுத்து நீட்டினார். அத்தனையும் நூறு ரூபாய் நோட்டுக்கள்.

பெற்றுக் கொண்ட லட்சுமி உற்றுக் கவனித்தாள். பிறகு அவற்றைச் சீதாவிடம் நீட்டினாள். சீதா தடவிப் பார்த்தாள். '' எதுக்கு எசமான் இது? இனாம் தர்றீங்களா? எங்களுக்கு வேண்டாம். இதுவரையில் நீங்கள் எங்களுக்கு எந்தக் குறையும் வைக்காம காப்பாத்தினீங்க. அதுக்கு நாங்க எத்தனை ஜன்மத்துக்கு வேண்டுமானாலும் நன்றி சொல்லலாமே!''

கண்களில் நீரும் உதடுகளில் சோகமுமாகக் கவனித்த டேவிட்ஸன், ''சீதா லட்சுமி! இது நான் இனாமாத் தர்ற பணம் இல்லே! உங்க உழைப்பிலே சேர்ந்த பணம். மாசா மாசம் நூறு நூறாக உங்க பேரிலே சேமிச்சு வைச்ச பணம். இதோ ஆறாயிரத்து மூந்நூறு ரூபாய் இருக்கு. இந்தப் பங்களாவைப் பாதுகாத்த நீங்க, இந்தப் பணத்தைத்தானா பாதுகாக்க மாட்டீங்க? நம்பிக்கையோடு வாழுங்க!'' என்றார்.

''எசமான்!''

சீதாலட்சுமி மிகுந்த நன்றியறிதலுடன் தங்களை மறந்த மனவெழுச்சியின் காரணமாகக் கரங்களைக் கூப்பினர். பின்னர் காலில் விழுந்தனர்.

டேவிட்ஸன் கண்கள் குளமாயின. நீர்ச் சொட்டுக்கள் சீதாலட்சுமியை ஆசிர்வதிப்பன போலத் தலைகளில் விழுந்து வழிந்தன!

பிரியா விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார் டேவிட்ஸன்!

அந்தப் பங்களாவின் படிக்கட்டுகளில் வெகு நேரத்துக்கு வெகு நேரமாய் அமர்ந்த வண்ணம் கடந்த கால நிகழ்ச்சிகளை அசை போட்டுப் பார்த்தனர் சீதாலட்சுமி! அவர்களால் பிரிவாற்றாமையைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. வேறு என்ன செய்ய?

எங்காவது ஒரு குடிசையில் தங்கி வாழ்ந்து முடிகிற எண்ணங்களுடன் பாதை நோக்கி நடந்தார்கள்.

மடியில் பணம் வேறு கனத்துக் கொண்டிருந்தது. அதனைத் தபால் நிலையத்தில் கட்டிவிட்டால் நல்லதென்று அவர்கள் மனத்தில் பட்டது!

பக்கத்திலிருந்த தபால் நிலையம் நாடிச் சென்றனர். சேவிங்ஸ் கவுண்டரை நாடி முறைப்படி கணக்கு வைத்துப் பணம் கட்டுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபடுகிறபோது—

கூர்மையான இரு கண்கள் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தன!

(தொடரும்)


ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: "ராஜு"
24
கள்ளக் கடத்தல் வைரங்களில் அப்பண்ணாவும் கப்பண்ணாவும் விளையாடுகிறார்கள் என்ற சந்தேகம் தட்டியதுமே ஜக்கு ஒரு சமயத்துக்கு உதவும் என்பதால் போலிக் கண்ணாடி வைரங்கள் கொஞ்சம் வாங்கி, பாக்கெட்டிலேயே வைத்திருந்தான். பி.க.பி.ம.விடமிருந்து தட்டிக் கொண்டு வந்த பையை உதறி வைரங்களை வேறு ஒரு பாக்கெட்டில் போட்டுக் கொண்டு.....
...அதே சுருக்குப் பையில் போலி வைரங்களை வைத்து, கப்பண்ணாவிடம் தந்துவிட்டேன். அவனும் ஏமாந்துவிட்டான்!
ஒண்டர்ஃபுல்!
ஜக்கு நீ பலே ஆள். 'ஜாங்கோ ஜக்கு' என்பது பொருத்தம் தான்!
தப்பு, தப்பு! ஜாங்கோ வெறும் கண்ணாடி. ஜக்கு அசல் வைரம். கண்ணாடியை வைரமாக்கி ஏய்க்கலாமே ஒழிய வைரம் ஒரு நாளும் கண்ணாடி யாகாது!
அடடா! உன்னை மீண்டும் உயிரோடு பார்த்தது கூடப் பெரிசில்லே; உன் பொன் மொழியைக் கேட்ட பிறகு தான் நிம்மதி ஆச்சு....
...தொகுத்துப் புத்தகமாகவே போடலாம்; ஆனால் நல்ல நூல்களை இந்தக் காலத்தில் யார் வாங்கறாங்க?
ஜக்கு என்னதான் வைரமாக ஜொலித்தாலும் அதைப் பொன்னிலே பதித்துப் பார்த்தால் தான் அழகு, அப்பா! அதாவது.... என் பெரியவ பொண் இருக்கிறாளே...
...ஆசீர்வாதம் பண்ணுங்க அப்பா!
'டிட்டோ' மாமா!
வேறு வழி? தலைக்கு மேலே வெள்ளம் போனப்புறம் தடுத்தா நிறுத்த முடியும்?
இதற்கிடையில் உயர் அதிகாரியிடம் டெலிஃபோனில் பேசி முடித்தார் அனந்தாச்சாரி.
எஸ் ஸார்! சரி ஸார்! ஓகே ஸார்! ஆகட்டும் ஸார்!
என்ன முகம் அழுக்குவடியறது? பிரமோஷன் கிடைக்கலையா?



(அடுத்த இதழில் முடிந்தே தீரும்)

இட்லி, காப்பி, மற்றும் **விம்க்ரான்**	முட்டைகள், டோஸ்ட், பழச்சாறு, மற்றும் **விம்க்ரான்**	சப்பாத்தி, பால் மற்றும் **விம்க்ரான்**	சொஜ்ஜி தேநீர் மற்றும் **விம்க்ரான்**



காலைச் சிற்றுண்டி நேரம்

விம்க்ரான்

சாப்பிடும் நேரம்

Shilpi-HPMA 47A/72 Tam

நீங்கள் உண்ணும் காலைச் சிற்றுண்டி, பகலுணவு அல்லது இரவுணவு எதுவாக இருப்பினும் உங்கள் உடலுக்குத் தேவையான அத்தனை வைட்டமின்களையும் தாதுப் பொருள்களையும், அந்த உணவு தருமென்று கூற முடியாது. ஆகையால் அவற்றை உறுதியுடன் பெறுவதற்கு நாள்தோறும் காலைச் சிற்றுண்டியின்போது ஒரு விம்க்ரான் மாத்திரை சாப்பிடுங்கள்.

சிற்றுண்டி சமயம் நீங்கள் சாப்பிடும் ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது. விம்க்ரானில் 11 அத்தியாவசிய வைட்டமின்களும், 8 இன்றியமையாத தாதுப் பொருள்களும் அடங்கியுள்ளன. எனவே நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் திட ஆரோக்கியத்துடன் சுறுசுறுப்பாய்த் திகழ தினமும் விம்க்ரான் சாப்பிடுங்கள்— ஒரே ஒரு விம்க்ரான்!



விம்க்ரான்®

11 வைட்டமின்கள் + 8 மினரல்கள் அடங்கியது.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது



SQUIBB®

SARABHAI CHEMICALS



கைதிகளைக் கொண்டு சிறையில் காய் கறிகள் பயிர் செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கும் புளி நீரில் போடுவதெல்லாம் முள்ளங்கி இலையும் தண்டும்தான். இதுவும் ஒரு நாளா, இரண்டு நாட்களா? வருஷம் முழுவதும் இதேதான். இதை என்னென்று கூறுவது? கொடூரமாய் நடத்தும் வித்தை என்று தான் கூற வேண்டும். பயிராகும் காய் கறிகள் என்ன ஆகின்றன? உத்தியோகஸ்தர்கள் தங்களுக்காக வைத்துக் கொள்கிறார்களா, அல்லது உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு விற்று விடுகிறார்களா என்று தெரியவில்லை. சாதாரணமாகக் குழம்புக்குத் தோல் நீக்கிய பருப்பை உபயோகிப்பது எங்கும் வழக்கம். ஆனால் இங்கோ தோலுடன்தான் பருப்பைப் போடுகிறார்கள். இதுதான் உடம்புக்கு நல்லதென்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் கைதிகளோ அதைக் குதிரைத் தீனியைவிடக் கேவலமாகவே கருதுகிறார்கள். ஆரோக்கியத்தை உத்தேசித்து இவ்விதம் செய்யவில்லை என்றும், பொருள் மிச்சத்தை உத்தேசித்தே இவ்விதம் செய்யப்படுகிறது என்றும் நான் எண்ணுகிறேன்.

நாங்கள் அறைக்கு வெளியே ஐந்து மணி நேரம் இருப்பதாகச் சிறைத் தலைமை அதிகாரி கணக்குப் போட்டிருப்பது முற்றிலும் தவறு. மூன்று மணி நேரமே எங்களை வெளியே செல்ல விடுகிறார்கள். ஆனால் இந்த நேரத்தில் பெரும் பாகம் சாப்பிடுவதிலும் தட்டுகளைக் கழுவுவதிலும் கழிந்து விடுகிறது. அறைக் கதவைத் திறந்து வைப்பதாலும் அதிக நன்மை கிடையாது. காற்றும் வருவதில்லை. கைகால்களுக்கு வேலையும் கிடைப்பதில்லை. பூட்டி வைக்கவில்லை என்ற ஒரு திருப்தி மட்டும்தான் உண்டு.

1922 ஜனவரி, 26உ

வியாழக்கிழமை: இப்பொழுது என்னுடைய வயிற்றுக் கோளாறு ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குப் போய்விட்டது போல் தோன்றுகிறது. மலச்சிக்கலுக்குப் பதில் வயிற்றுப் போக்காக இருக்கிறது. இரவில் எழுந்திருக்க வேண்டியிருக்கிறது.

சிறைத் தலைமை அதிகாரியும் இரண்டு சின்ன டாக்டர்களும் இன்று என் அறைக்கு வந்து என்னுடைய தேகத்தைப் பற்றி விசாரித்தார்கள். என் வயிற்றுக் கோளாற்றைக் குறித்துத் தலைமை அதிகாரி கவலைப்பட்டார். பிஸ்மத் என்னும் மருந்தைக் கொடுக்கும்படி சின்ன டாக்டரிடம் சொன்னார். வேக வைக்காத தக்காளிப் பழம் கொடுக்கும்படியும் சொன்னார். ரொட்டியில் வெண்ணெய் தடவித் தக்காளித் துண்டுகளுடன் உண்ணும்படி யோசனை கூறினார். அவர் கூறிய மாதிரியைப் பார்த்தால் அவர்களுக்கு அதில் அதிகப் பிரியம் போல் தோன்றுகிறது. தலைமை அதிகாரி முன்போல் காணப்படவில்லை. கொஞ்சம் தயவுதாட்சிண்யம் பிறந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் அதிகாரத்தில் விட்டுக் கொடுத்துப் பேசுவதில்லை. அதிகாரி என்ற அச்சம் இருக்க வேண்டும் அல்லவா? இதில்



ரொம்ப வேடிக்கை என்னவென்றால் பெரிய டாக்டர் ஆங்கிலத்தில் கூறியதை அவ்வப்போது சின்ன டாக்டர் தமிழில் மொழி பெயர்த்து எனக்குச் சொன்னது தான். எனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதையே மறந்துவிட்டார் போலும்!

ஈக்களை என்னுடைய சுற்றுப்புறத்திலிருந்தும் நீக்க முடியவில்லை; மனத்திலிருந்தும் நீக்க முடியவில்லை. ஈக்களும் எறும்புகளும் சின்னஞ் சிறு வயதிலிருந்தே என்னுடைய இரண்டு நண்பர்களாக இருந்து வந்திருக்கின்றன. இவைகளில் எதைப் பார்த்தாலும் சிறுபிராயத்து நினைவுகளும் அப்போது என் தாயார் எவ்விதம் இருந்தாரோ, அதுவும் என்னுடைய ஞாபகத்துக்கு வந்து விடுகின்றன. நான் குழந்தையாயிருந்த பொழுது கொஞ்ச காலம் இடைவிடாமல் அவைகளைக் கவனிப்பதில் அதிகமாக ஈடுபட்டிருந்தேன். அதன்பின் பல வருஷங்கள் அவை பற்றி என்ன நினைத்தேன் என்ற ஞாபகமே இப்போது

இல்லை. இக்கட்டத்துக்குப் பிறகு எறும்புகள் என்னைக் கடித்தாலும் என் இனிய பண்டங்களில் வாய் வைத்தாலும் எனக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகி வந்தன.

ஆனால் ஈக்கள் விஷயத்தில் எனக்கு அதிகம் கோபம் உண்டாகவில்லை. நான் சிறு குழந்தையாய் இருந்த காலத்தில் அவைகளிடம் நான் குறைவற்ற அன்பு வைத்திருந்தேன். பிற்காலத்தில் விஞ்ஞானிகள் வந்து என்னுடைய மனத்தை அவைகளுக்கு விரோதமாக மாற்றிவிட்டார்கள். என்னுடைய தாயார் எனக்கு அழகான கொள்கையைக் கற்பித்தார். ஆன்மாவுக்கு அழிவில்லை, அது ஓர் உடலை விட்டுப் பிரியும்போது வேறு ஒரு தேகத்தை நாடுகிறது என்ற இந்தக் கொள்கை எல்லா உயிர்களிடத்தும் அன்பையும் அனுதாபத்தையும் வளர்க்க வல்லது. ஆயினும் தாயார் இறந்தபின் அந்தக் கொள்கை என்னுடைய மனத்திலிருந்து அகன்று விட்டது. அதனிடத்தைச் சந்தேகங்களும் தர்க்கவாதங்களும் குழப்பங்களும் ஆக்கிரமித்தன. ஆனால் இளைஞர்களை இந்தக் கொள்கையைத் தர்மமாகக் கருதும்படி செய்வோமானால் உலகத்தில் காணப்படும் பகைமையும் கொடுமையும் பன்மடங்கு குறைந்து போகும்.

என்ன காரணமோ, இன்று என்னுடைய தாயாரின் ஞாபகமாகவே இருக்கிறது. அதனால் என் மனத்தில் இன்பம் சுரந்து கொண்டிருக்கிறது. தம்முடைய அருமைப் புதல்வன் சிறையில் அடைபட்டுக் கிடப்பான் என்று அவர் ஒரு நாளும் எண்ணியிருக்கமாட்டார். அவர் உயிருடன் இருந்தால் அவரிடம் இந்தப் போராட்டத்தின் அவசியத்தையும் மேன்மையையும் விளக்கிக் கூறுவேன். நான் சிறை புகுவேன் என்று எண்ணியே பார்க்கமாட்டாத மற்றோர் ஆன்மாவும் மண்ணுலகத்தை விட்டுப் போய்விட்டது. அவள் இருந்த பொழுது எத்தனையோ பேரைச் சிறைக்குப் போகாதபடி காப்பாற்றியிருக்கிறேன். அதை எல்லாம் கேட்டு ஆனந்தமும் பெருமையும் அடைந்தாள். அப்படிப் பல பேரைக் காப்பாற்றிய நானே இங்கு வந்து சேர்வேன் என்பதை அவளும் எண்ணியிருக்க மாட்டாள்.


இப்பொழுது சில நாட்களாக ஸ்நானம் செய்த பிறகு மத்தியான வேளைகளிலும் என்னுடைய ஆஸ்துமா வந்து மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த வேதனையை ஆற்றுவதற்காக இந்த எண்ணங்களில் இறங்கினேன். இரவு வேளைகளில் ஆஸ்துமா வராவிட்டாலும் என்னுடைய உடல் பலவீனமாகிவிட்டபடியால் அதை முழுமையாகத் தூக்கி எறிய முடியவில்லை என்பதைக் காண்கிறேன். அதனால்தான் பகலில் சிறிதளவு சிரமம் ஏற்பட்டாலும் உடனே ஆஸ்துமா வந்து சேர்ந்து விடுகிறது.

பரீட்சை சீசன்! சிரிப்பிற்கில்லை ரேஷன்!

"'நீ பெரிய மானேஜரா யிருந்தால்...' என்று ஒரு கட்டுரை எழுதச் சொல்லியிருந்ததே, எப்படிடா எழுதினாய்?"

"அதுவா. 'என் செக்ரடரிக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். அவன் வராததால் 'டிக்டேட்' செய்ய முடியவில்லை — மானேஜர்'ன்னு எழுதிட்டேண்டா!"





"'விலைவாசி கூடிப்போச்சு, வீட்டுச் செலவு கூடிப்போச்சு! கூடிப்போச்சு'ன்னு எப்போதும் சொல்றிங்களே, அப்பா! 'குறைஞ்சு போச்சு! குறைஞ்சு போச்சு'ன்னு நீங்க சொல்வதற்கு நான் ஒரு வழி செய்திருக்கேன்!"

"என்னதுடா! என்னதுடா?"

"இதோ பாருங்க என்னோட மார்க்குகளை!"

-நீலகந்தரம்


40 மணி நேரம்
ஒளிசுடரும்
பல்பை எடிஸன்
கண்டுபிடித்தார்
1,360 மணி நேரம் கூடுதலாக ஒளிசுடருபவை
ஜி. இ. ஸி.-ஆஸ்ரம் பல்புகள்
உயர்தர ஜி. இ. ஸி. தொழில்நுட்பத்திலே உருப்பெற்ற வெண்சுடர் பல்புகளோ...பல்பு ஆயுளுக்கும்
ஆற்றலுக்குமான இந்திய மற்றும் பிரிட்டிஷ் தர நிர்ணயத் தேவைகளையும் மிஞ்சி விடுகின்றன.
தேர்ந்தெடுக்கப் பலரகமானவை ஆஸ்ரம் பல்புகள் : இல்லத்திற்கான 15–100 வாட் பல்புகள் •
200–1500 வாட் வணிகத்துறை–தொழில்துறை பல்புகள் • விடி விளக்கு பல்புகள் •
விசேஷ F பல்புகள் • சிறு பல்புகள் • வர்த்தி வடிவ பல்புகள் • அலங்காரப் பல்புகள்.
GEC Osram Mazda
உலகத் தொழில்நுட்பத்தை உங்கள் தேவைக்கேற்பப் படைத்திடுவோர்
GEC
Trade Mark GEC Osram and Mazda Permitted User—The General Electric Company of India Limited.
லின்டாஸ்-GEC/OL 3-140TM



SISTA'S/INC/959 TAM



சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

முப்பத்தேழாம் அத்தியாயம்

பல்கலைக் கழக விடுமுறையில் மாணவர் மகாநாடு நடந்து முடிந்தபோதே பொருமையும் கடுங் கோபமும் அடைந்திருந்த மல்லை இராவணசாமியின் கட்சியினர் பழி வாங்கிவிடத் துடித்துக்கொண்டிருந்தனர். மகாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைத்த பின்பும் அவர்கள் சினம் ஆறவில்லை. மகாநாடு பிரமாதமாக நடந்து முடிந்த பின்புதானே பந்தலுக்குத் தீ வைக்க முடிந்தது என்று மனத்தாங்கலுடனும் அதைவிட அதிகமாகப் பழி வாங்கும் சினத்துடனும் காத்திருந்தார்கள் அவர்கள். மல்லை இராவணசாமி கட்சியினரின் எல்லாக் கோபமும், ஆத்திரமும் அண்ணாச்சியின் மேல் திரும்பியிருந்தன. எப்படியாவது அண்ணாச்சியைப் போலீஸ் கேஸ் எதிலாவது மாட்டி வைத்து உள்ளே தள்ளிவிடத் துடித்தார்கள் அவர்கள். மகாநாடு முடிந்து இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் மணவாளனும், பாண்டியனும் கூட மதுரை சென்று விட்டவுடன் இராவணசாமியின் ஆட்கள் அண்ணாச்சியைப் பழி வாங்கச் சமயம் வாய்த்தது. மேலிடத்திலிருந்து ஏற்பாடு செய்து கதிரேசன் குழுவினரோடு தொடர்பு படுத்திப் பொய்யாக ஏதோ குற்றம் சாட்டிப் பொங்கல் பண்டிகை தினத்தன்று மாலை அண்ணாச்சியைக் கைது செய்து ரிமாண்டில் வைத்திருந்தார்கள் போலீஸார். அமைச்சர் கரியமாணிக்கம் டாக்டர் விருது பெறுகிற பட்டமளிப்பு விழா வருவதற்கு முன்னரே முக்கியமானவர்களை யெல்லாம் கைது செய்து உள்ளே தள்ளிவிடும் ஏற்பாட்டின் முதற் படியாக அண்ணாச்சியை உள்ளே தள்ளி யிருந்தார்கள். முதலில் பூதலிங்கத்துக்குத்தான் அண்ணாச்சி கைதான செய்தி தெரிந்தது. அவரே தந்தி கொடுத்து மணவாளனையும், பாண்டியனையும் வரவழைப்பதற்காக மல்லிகைப்பந்தல் தந்தி அலுவலகத்துக்குப் போனபோது அங்கே தமக்கு முன்பாகவே தேசியத் தோட்டத் தொழிலாளர் யூனியன் செயலாளர் தந்தி கொடுக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து யாராவது ஒருவர் தந்தி கொடுத்தால் போதும் என்ற எண்ணத்தில் தாம் தந்தி கொடுப்பதை நிறுத்திக் கொண்டார். பூதலிங்கமும் தேசியத் தோட்டத் தொழிலாளர் யூனியன் செயலாளரும் தந்தி அலுவலகத்திலிருந்து திரும்பும்போது காரணமில்லாமல் சும்மா மிரட்டுவதையே நோக்கமாகக் கொண்டு அண்ணாச்சியைக் கைது செய்திருப்பது பற்றி வருத்தப்பட்டுப் பேசிக் கொண்டே ஒரு வக்கீல் வீட்டுக்குப் போய் அண்ணாச்சியை ஜாமீனில் விடுவிப்பது பற்றிக் கலந்தாலோசித்தார்கள். வக்கீல் விடிந்ததும் அந்த முயற்சியைச் செய்து பார்க்கலாம் என்றார்.

மறுநாள் காலையில் விடிந்ததும் எட்டு எட்டரை மணிக்கு மணவாளன் மல்லிகைப்பந்தலுக்கு வந்து சேர்ந்துவிட்டார். அண்ணாச்சி கைதானது பற்றிய விவரத்தைத் தமக்குத் தந்தி மூலம் அறிவித்திருந்த தொழிலாளர் யூனியன் செயலாளரையே முதலில் தேடிச் சென்றார் மணவாளன். அவர் தேடிச் சென்றபோது யூனியன் செயலாளர் வக்கீல் வீட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். மணவாளனும் அவரோடு சேர்ந்து பேசிக் கொண்டே போக வேண்டியதாயிற்று. இவர்கள் இருவரும் வக்கீல் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது அங்கே ஏற்கெனவே பூதலிங்கம் வந்து காத்துக் கொண்டிருந்தார். மணவாளனைச் சந்தித்ததும் பூதலிங்கம் நடந்ததைச் சொல்லி வருத்தப்பட்டார். ''என்ன காரணத்துக்காக அரெஸ்ட் பண்ணினாங்க? 'கிரவுண்ட்ஸ்' என்னென்னே தெரிஞ்சுக்க முடியலே. சும்மா மிரட்டி வைக்கணும், அலைக்கழிக்கணும் என்கிறத்துக்காகவே கூட அரெஸ்ட் பண்ணி யிருப்பாங்க போல இருக்கு'' என்றார் வக்கீல். போலீஸாரின் போக்கைப் பார்த்தால் 'பெயில்' கிடைக்குமா கிடைக்காதா என்பதே சந்தேகமாக இருந்தது. ரிமாண்டில் இருப்பவரைக் காணவும் பேசவும்கூட அனுமதி பெற முடியவில்லை. இதற்குள் அண்ணாச்சி கைதான செய்தி மெல்ல



மெல்லப் பரவி உள்ளூர் மாணவர்களும், அக்கம் பக்கத்து மாணவர்களும், விடுமுறைக்கு எங்கும் போகாமல் தங்கிவிட்ட மாணவர்களுமாக, நானூறு, ஐந்நூறு பேர் கடை வாசலில் கூடிவிட்டார்கள். மாணவர்களைத் தவிர தேசியத் தொண்டர்களும், ஊழியர்களும் வேறு கூடியிருந்தார்கள். அண்ணாச்சி கைதான செய்தி அவர்கள் அனைவரையும் கொதிப்படையச் செய்திருந்தது. இப்படிக் கூட்டம் கூடும் என்பதை எதிர்பார்த்தே வந்து நிற்பது போல் அண்ணாச்சி கடை வாசலில் இரண்டு லாரி போலீசும் வந்து நின்றது. கடைப் பையன்கள் கடையைத் திறந்து வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். காலை பதினொரு மணியளவில் சுமார் மூவாயிரம் பேருக்கு மேல் கூடிவிடவே, போலீஸார் லாரிகளிலிருந்து இறங்கி வந்து கூட்டத்தைக் கலைந்து போகுமாறு வேண்டினார்கள். கூட்டம் அந்த வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல், மேலும் மேலும் அதிகமாகி அங்கேயே நின்று கொண்டிருந்தது. பதினொன்றே முக்கால் மணிக்கு மணவாளனும், தொழிலாளர் யூனியன் செயலாளரும் அங்கே வந்தபோது அண்ணாச்சியை ஜாமீனில் விடப் போலீசார் மறுத்துவிட்டதாகவும் ரிமாண்டில் இருப்பவரைக் காணவும் அனுமதி கிடைக்கவில்லை என்பதாகவும் தெரிவித்தபோது, கூட்டம் கட்டுக்கடங்காமல் கொதிப்படைந்து போலீஸாரின் அடக்குமுறையை எதிர்த்துக் கோஷங்களை முழக்க ஆரம்பித்தது. போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைக்கும் முயற்சியில் இறங்கினார்கள். முன்னறிவிப்பின்றி இது நடக்கவே கூட்டத்தின் கோபம் அதிகமாகியது. அப்போது அந்தப் பாதையாகச் சென்ற மல்லை இராவணசாமியின் பஸ் ஒன்றைக் கல் எறிந்து நிறுத்தினார்கள் அவர்கள். யூனியன் செயலாளரும் மணவாளனும் கூட்டத்தினரை அமைதியாகக் கலைந்து போகச் சொல்லி வேண்டிக் கொண்டிருந்தபோதே போலீஸார் கண்ணீர்ப் புகை பிரயோகத்தில் இறங்கினார்கள். மூன்று ரவுண்டுகள் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் முடிந்து கூட்டம் கலைந்து தறி கெட்டு ஓடத் தொடங்கியிருந்தபோது கூட்டத்தின் நடுவே சிக்கியிருந்த மல்லை இராவணசாமியின் அந்த பஸ் தீப்பற்றி எரிவதைப் பார்த்தார் மணவாளன். ஆத்திரம் அடைந்த கூட்டத்தினரில் யார் அதைச் செய்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாமலிருந்தது. கூட்டத்தை அப்படி வன்முறையில் ஈடுபடத் தூண்டும் அளவுக்குப் போலீஸார் எல்லை மீறிக் கொடுமை செய்துவிட்டார்கள் என்பதுதான் காரணம் என்றாலும் அந்த பஸ் தீப்பிடித்து எரிவதைக் கண்டு மணவாளன் மனப்பூர்வமாக வருந்தினார். ஒருவேளை அநாவசியமான தங்கள் தடியடிப் பிரயோகத்தையும் கண்ணீர்ப் புகைப் பி யோகத்தையும் நியாயப் படுத்துவதற்காகப் போலீஸாரே பஸ்ஸுக்கு நெருப்பு மூட்டியிருக்கலாமோ என்று கூட அவருக்குத் தோன்றியது அப்போது.

இப்படி மணவாளனும், தொழிலாளர் யூனியன் செயலாளரும் நடந்துவிட்ட நிகழ்ச்சிகளுக்காக வருந்தியபடி அண்ணாச்சி கடை முகப்பில் நின்று கொண்டிருந்தபோது முற்றிலும் எதிர்பாராத விதமாக ஓர் இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளுமாக வந்து 'பஸ்ஸுக்கு நெருப்பு மூட்டத் தூண்டிய குற்றத்துக்காக அவர்கள் இருவரையும் அரெஸ்ட் செய்வதாகச்' சொல்லிக் கைது செய்தார். 'மக்களை அமைதியாகக் கலைந்து போகுமாறு வேண்டிக்கொண்டதைத் தவிரக் கடை வாயிலிலிருந்து தாங்கள் நகரக்கூட இல்லை' என்று அவர்கள் கூறிய விளக்கத்தைப் போலீசார் கேட்டுக் கொள்ளக்கூடத் தயாராக இல்லை. கைதாகிப் போலீஸ் வானில் ஏறு முன், ''பட்டமளிப்பு விழா வருவதற்குள் அநேகமாக எல்லாரையுமே இப்படி உள்ளே தள்ளிவிடுவதுதான் அவர்கள் நோக்கம்! பிரிட்டிஷ் ஆட்சியில் கூட இவ்வளவு எதேச்சாதிகாரம் இருந்திராது'' என்றார் யூனியன் செயலாளர். ''மக்களின் உரிமைகளை மதிக்கத் தெரிந்தவர்கள் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள். பரிந்துணர்வும், புரிந்துணர்வும் உள்ளவர்களின் சர்வாதிகாரத்தையாவது எதிர்த்துப் போரிடலாம். முரட்டுச் சர்வாதிகாரத்தில் எதிர்ப்பதற்கும் போரிடுவதற்கும்கூட முடியாமற் போய்விடும். அப்படி ஒரு சர்வாதிகாரத்தின் கீழேதான் இன்று நாம் இருக்கிறோம்'' என்றார் மணவாளன். பகல் உணவு நேரத்துக்குள் அவர்கள் இருவரும் சிறைச்சாலைக்

குக் கொண்டு போகப் பட்டு விட்டார்கள்.

* * *

பாலவநத்தத்தில் தந்தி கிடைத்து அவசரம் அவசரமாக மதுரை வந்து மணவாளனின் வீட்டில் போய் விசாரித்து அவர் இரவே வாடகைக் காரில் மல்லிகைப் பந்தலுக்கு விரைந்திருப்பதை அறிந்து கொண்டு கண்ணுக்கினியாளுக்குத் தகவல் தெரியுமோ தெரியாதோ என்ற சந்தேகத்துடனேயே பஸ் நிலையத்துக்கு வந்த பாண்டியன் அங்கு கண்ணுக்கினியாளை வழியனுப்ப வந்திருந்த தந்தை சகிதம் மல்லிகைப்பந்தல் பஸ் அருகே தயாராக நின்றுகொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். அவளும் எதிர்பாராத விதமாக அவனைக் கண்டு ஆச்சரியம் அடைந்தாள். ''தெரியுமா? அண்ணாச்சியை....'' என்று அவள் தொடங்கிய வாக்கியத்தை, ''தெரியும். தந்தி வந்துதான் நான் உடனே புறப்பட்டேன்...... உனக்கு எப்படித் தெரியும்?'' என்று பதில் கேள்வியால் எதிர்கொண்டான் பாண்டியன்.

''எனக்கும் தந்தி வந்தது! உடனே மணவாளன் அண்ணன் வீட்டுக்கு நாயினா ஆள் அனுப்பி விசாரிச்சுக்கிட்டு வரச் சொன்னாரு. அவரு ராத்திரியே புறப்பட்டுப் போயிட்டாருன்னு தெரிஞ்சுது'' என்றாள் அவள்.

''ஒரு தப்பு தண்டாவுக்குப் போக மாட்டானே; அவனைப் போலீஸ் பிடிச்சிருக்குன்னா ஆச்சரியம்னு சொல்றதா, அக்கிரமம்னு சொல்றதா?'' என்பதாகப் பாண்டியனிடம் அண்ணாச்சி பற்றி வருத்தப்பட்டார் கந்தசாமி நாயுடு.

''நானே கூடப் புறப்பட்டுப் போகலாம்னு இருந்தேன். நல்ல வேளையா நீ



வந்திட்டே தம்பீ...'' என்று கூறிக் கண்ணுக்கினியாளையும் அவனோடு பஸ் ஏற்றி அனுப்பினார் நாயுடு. அவர்கள் பஸ் மதுரையிலிருந்து புறப்படும் போதே பகல் பன்னிரண்டு மணி ஆகி விட்டது. பஸ்ஸில் போகும்போது, தன்னை வழிப்படுத்தி மயக்க வந்த மல்லை இராவணசாமி கட்சியைச் சேர்ந்த சென்னைப் பிரமுகர் பற்றி அவளிடம் கூறினான் பாண்டியன். ''ஏன் இப்பிடி நாயா அலையறாங்க...?'' என்று கேட்டாள் அவள்.

''அதுதான் அவங்க குணம்! மலிவான விலைக்குத் தங்களை விற்று விற்றுப் பழகியவர்கள் பல வேளைகளில் பிறரையும் அப்படி மலிவான விலைகளில் வாங்க முயல்வதுதான் இயல்பு. உன்னதமான மனித குணங்களையும் ரூபாய் அணாக் கணக்கில் பேச அவர்கள் கூச மாட்டார்கள். அவர்கள் அறிந்த கணக்கு அது ஒன்று மட்டும்தான்.''

''அவர்களுக்கு இல்லாமற் போய் விட்ட கூச்சம் மற்றவர்களுக்கும் இல்லாமல் போய் விட்டதாக அவர்கள் எப்படி நினைக்க முடியும்? வெட்கமாக இராதோ?''

''வெட்கமின்றி நினைத்துத்தானே இவ்வளவும் செய்கிறார்கள்? கூச்சம் இருந்தால் இதெல்லாம் செய்வார்களா?''

நடுவில் நின்ற ஒரு பெரிய ஊரின் பஸ் நிலையத்தில் அவர்கள் கீழே இறங்கிச் சிற்றுண்டி காப்பி அருந்தினார்கள். பஸ் நிலக்கோட்டையைக் கடந்தபோது கதிரேசன், பிச்சைமுத்துவைப் பற்றி நினைவூட்டிப் பேசினாள் அவள்.

''இதே கொடுமை நீடித்தால் நான் கூட ஒரு நாள் கதிரேசன் ஆக வேண்டியிருக்கலாம். ஒரு படுமோசமான சர்வாதிகாரம் அதைவிடப் படுமோசமான பல விளைவுகளை உண்டாக்கிவிடும். அன்பினாலே காரியங்களைச் சாதிக்க முயல்கிறவர்கள் தோற்கத் தோற்க ஆத்திரத்தோடு காரியங்களைச் சாதிக்கிற வீரர்கள்தான் உருவாக முடியும். நமது நியாயங்களும், நீதிகளும் அறவே புறக்கணிக்கப்படும்போது நாம் பலாத்காரங்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு விடுகிறோம்.''

''போதும்! விளையாட்டுக்காகக்கூட இப்படிப் பேசாதீர்கள்'' என்று தன் பூப்போன்ற வலது கரத்தினால் அவன் வாயைப் பொத்தினாள் அவள். அண்ணாச்சியைக் கைது செய்திருப்பதால் பாண்டியனின் உள்ளம் எவ்வளவுக்குக் குமுறிப் போயிருக்கிறது என்பதை அவள் அவன் பேச்சுக்களிலிருந்து அப்போது புரிந்துகொள்ள முடிந்தது.

அவர்களுடைய பஸ் மல்லிகைப்பந்தலை அடையும்போது, பிற்பகல் ஐந்தரை மணியாகி விட்டது. பஸ் நிலையத்தில் இறங்கியதுமே காலையில் அண்ணாச்சி கடை முன்பு நடந்த நிகழ்ச்சிகளும், அவை தொடர்பாக மணவாளனும், தொழிலாளர் யூனியன் காரியதரிசியும் பஸ்ஸுக்கு நெருப்பு வைக்கக் கூட்டத்தினரைத் தூண்டியதாகப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டுக் கைதான விவரமும் அவர்களுக்குத் தெரிந்தன. பஸ் நிலையத்திலிருந்து வெளியேறும் முன்பே நிறைய மாணவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். ''நீ உன் தோழி சிவகாமியின் வீட்டிலாவது பத்மாவின் வீட்டிலாவது போய்த் தங்கிக்கொள்! நேரே ஹாஸ்டலுக்குப் போக வேண்டாம். நான் நாளைக் காலையில் உன்னைச் சந்திக்கிறேன்'' என்று சொல்லிக் கண்ணுக்கினியாளை ஒரு ரிக்ஷாவில் அனுப்பிவிட்டு மாணவ நண்பர்களோடு தோட்டத் தொழிலாளர் யூனியன் மாடிக்குப் போய்க் கலந்தாலோசித்தான் பாண்டியன். யூனியன் கட்டிட வாயிலில் நாலைந்து சி. ஐ. டி.க்கள் இருந்தார்கள். ''பஸ் ஸ்டாண்டிலிருந்தே உன்னை சி. ஐ. டி.க்கள் பின் தொடருகிறார்கள்'' என்றான் ஒரு மாணவன். ''நானோ நீங்களோ கொலை செய்துவிட்டோ, அல்லது கொள்ளையடித்துவிட்டோ இங்கே வந்து கூடிப் பேசவில்லையே? நமக்கு ஏன் இவ்வளவு பயப்படுகிறார்கள்?''

''கொலை செய்பவர்கள், கொள்ளையடிப்பவர்களுக்குக் கூட அவர்கள் பயப்படவில்லை. நல்லவர்களுக்குத்தான் அவர்கள் பயப்படுகிறார்கள். ஒரு மந்தையை ஆள்வது போல் மக்களை ஆள நினைக்கிறார்கள். அவர்கள்.... மந்தையில் சேராதவர்களைத் துன்புறுத்த அவர்கள் தயங்க மாட்டார்கள்!''

''அண்ணாச்சியும், மணவாளனும், யூனியன் செயலாளரும் என்ன பாவம் செய்தார்கள்?''

''மந்தையில் சேர மறுத்தார்கள். மந்தைக்கு எதிராகச் செயல்பட்டார்கள். அதுவே போதுமானது.''

''மனிதர்களால் எப்படி மந்தை போல் இருக்க முடியும்?''

''இருக்க முடியுமோ முடியாதோ, அவர்களுக்கு ஒரு மந்தை வேண்டும். மக்களை மக்களாக நடத்தி ஆள்வதை விட மந்தையாக நடத்தி ஆள்வது ஒருவேளை அவர்களுக்குச் சுலபமாக இருக்கும் போலிருக்கிறது....''

கலந்து பேசியபோது எல்லா மாணவர்களுமே மிகவும் ஆத்திரமாக இருந்




மைக்ரோஃபைன்ட்

ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனால்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது—

சாதாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.







சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன.

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • உடல் வலி • ஜலதோஷம் • ஃப்ளு • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.

நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.57 TM

தார்கள். அன்றிரவு பாண்டியனும் வேறு நாலைந்து மாணவர்களும் பேரா சிரியர் பூதலிங்கத்தைச் சந்திக்கச் சென் றார்கள். அவர் வீட்டு வாசலிலும் கூட சி. ஐ. டி. நடமாட்டம் இருந்தது. ''நான் முன்பே உன்னிடம் எச்சரித்தது நினைவிருக்கிறதா பாண்டியன்? இப்படி எல்லாம் கொடுமைகள் நடக்கும் என் பதை முன்பே நான் அநுமானித்திருந் தேன். பட்டமளிப்பு விழா நெருங்க நெருங்க இது அதிகமாகுமே ஒழியக் குறையாது. உணர்ச்சி வசப்பட்டு நீயும் உள்ளே போய் மாட்டிக் கொள்ளாதே! கொஞ்சம் சாதுரியமாக நடந்து கொண்டு அண்ணாச்சியையும் மணவாள னையும், தொழிலாளர் யூனியன் காரிய தரிசியையும் முதலில் விடுதலை செய்யப் பாடுபடலாம். அப்புறம் மற்றதைக் கவனிக்கலாம்'' என்றார் அவர். பாண் டியனுக்கும் அவர் சொல்வதுதான் சரி என்று பட்டது. அவரே ''வி.வி. யைப் போய்ச் சந்தித்துப் பேசு! ஆத்தி ரப்படாமல் நடந்து கொள். அவரைப் பார்க்காமல் புறக்கணித்தீர்களாயின் அவரது கோபம் இன்னும் அதிகமாகும். கைது செய்திருப்பவர்களைப் போலீசார் விடுதலை செய்யா விட்டால் பட்ட மளிப்பு விழாவின்போது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாண வர்கள் மல்லிகைப் பந்தலுக்குப் புறப் பட்டு வந்து பெரிய அளவில் போராட நேரிடலாம் என்று அவரிடம் சொல்லிப் பார். வி. சி.யிடமிருந்து அந்த விஷயம் உடனே அமைச்சர் காது வரையில் போகும். 'இவர்களை வெளியே விட்டு விட்டால் பெரிய போராட்டம் இராது' என்பது போல் நீ சாதுரியமாகப் பேசி னால் மறு நாளே விட்டு விடுவார்கள் என்று நினைக்கிறேன். 'சார்ஜ்ஷீட்' கொடுக்கவோ, ருசுப்பிக்கவோ ஒரு குற்றமும் இல்லாமல் இவர்களை அதிக நாட்கள் லாக்கப்பில் வைத்திருக்க முடி யாது. தானாக விட்டு விடுவார்கள்' என்றுதான் நாங்கள் கலந்து பேசிய வக்கீல் எங்களிடம் கூறினார். சும்மா மிரட்டுகிறார்கள். இந்த மிரட்டலை மிகவும் கௌரவமாகச் சமாளிக்க வேண் டும்'' என்று மேலும் கூறினார் பூத லிங்கம். மாணவர்களுக்கு வெளிப்படை யாக எந்த உதவியும் செய்ய முடியா மல் இரகசியப் போலீசார் மூலம் தம் மைக் கண்காணிக்க ஏற்பாடு செய்து விட்ட வி. வி.யின் கொடுமை பற்றியும் அவர் மாணவர்களிடம் வருத்தப் பட்டார். மாணவர்களுக்கு அவர் நிலைமை புரிந்தது. 'பட்டமளிப்பு விழா நாளன்று எந்தப் போராட்டமுமே நடக் காது' என்பது போல் துணை வேந்தரே நம்பும்படி ஒரு நாடகம் நடிக்க மனத் துக்குள்ளேயே ஒத்திகை பார்த்துக் கொண்டு அவன் நண்பர்களோடு அன் றிரவே துணைவேந்தர் மாளிகையில் அவ ரைச் சந்தித்தான்.

''பீஸ்ஃபுல்லா இருந்து பட்டமளிப்பு விழா நல்லா நடக்க ஒத்துழைக்க ணும்னு நீங்களே பல தடவை சொல்லி யிருக்கீங்க சார்! இப்ப அதை மறந்து செயல்பட நாங்களும் தயாராயில்லே. நீங்களும் தயாரா யிருக்க மாட்டீங் கன்னு எனக்குத் தெரியும். அண்ணாச்சி யைக் கைது செய்தது, மணவாளனையும் தொழிலாளர் யூனியன் காரியதரிசியை யும் சிறை வைத்திருப்பது எல்லாமாகச் சேர்ந்து மாணவர்கள் மனத்திலே கொதிப்பை உண்டாக்கி யிருக்கிறது, சார்! அவங்களை யெல்லாம் நிபந்தனை

சத்திய வெள்ளம்

நமது நியாயங்களும் நீதி களும் எல்லாம் அறவே புறக்கணிக்கப்படும்போது வேறு வழியில்லாத கார ணங்களால் நாம் பலாத் காரங்களுக்குக்கூட நிர்ப் பந்திக்கப்பட்டு விடுகி றோம்.




யின்றி ரிலீஸ் பண்ணாட்டி என்னாலே கூட நிலைமையைக் கண்ட்ரோல் பண்ண முடியாது.''

துணைவேந்தர் அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். அப்புறம் கேட் டார்: ''ரிலீஸ் பண்ணினால் மட்டும் என்ன ஆகிவிடப் போகுது? மறுபடியும் 'போராட்டம்'னு எல்லாருமாகச் சேர்ந்து என் பேரைச் சொல்லி ஒழிக கோஷம் போட்டுக்கிட்டு நடு ரோட் டிலே ஊர்வலம் போவீங்க? அப்படித் தானே?''

''அப்படி யில்லே சார்! அவங்களை ரிலீஸ் பண்ணாட்டி இது நாடு தழுவிய போராட்டமாகி விடுமோ என்றுதான் நான் பயப்படுகிறேன்.''

''நான் எப்படி இதிலே தலையிட முடி யும்ப்பா? போலீஸ், ஆர். டி. ஓ. எல் லாருமே பையங்க மேலே ரொம்பக்



தவறாமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, ஈறுகளைத் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்.



ஈறுகளை உறுதியுடனும் ஆரோக்கியத்துடனும் வைத்திருக்க அவற்றைத் தினமும் தவறாமல் தேய்த்துக் கொடுப்பது சிறந்த வழி என்று பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள். அது போலவே, பற்சிதைவைத் தடுக்கும் சிறந்த வழி, இரவிலும் காலையிலும், ஒவ்வொரு முறை உணவருந்திய பின்னும், தவறாமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, பற்சிதைவைத் தோற்றுவிக்கும் உணவுத் துகள்களை அகற்றுவது. போர்ஹென்ஸ் பற்பசையால் தவறாது பல் துலக்க உங்கள் குழந்தைக்குக் கற்பியுங்கள்: ஏனெனில் போர்ஹென்ஸ், பல் வைத்தியர் ஒருவரால் விசேஷமாக உருவாக்கப்பட்ட பற்பசை. அதோடு போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் ஜூனியர் டூத் பிரஷ் கொண்டு ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்கவும் கற்பியுங்கள்.

போர்ஹென்ஸ் பற்பராமரிப்பு பற்றிக் கற்பிக்க இதுவே தக்க வயது

போர்ஹென்ஸ்

பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம்.* இப் புத்தகத்தைப் பெற (தபால் செலவுக்காக) 25 பைசா தபால் தலையுடன், இக் கூப்பனை, "மானெர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய்-1" என்னும் முகவரிக்கு அனுப்புக.

பெயர் ______________________ வயது ______________ K.6

விலாசம் ______________________________________

____

*எந்த மொழியில் வேண்டுமோ அதன் கீழ் கோடிட்டுக் காட்டவும்: ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, பங்காளி, மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம்.

113 F 172 TM

கோபமா யிருக்காங்க. சும்மா இருக்காமே பசங்க அந்த இராவணசாமியோட பஸ்ஸுக்கு வேறே நெருப்பு வைச்சிருக்காங்களே. அதென்ன நியாயம்?''

''பையன்கள் பேரைக் கெடுக்க விஷமிகள் யாராவது அப்படிச் செய்திருக்கலாம் சார்! உங்க ஸ்டூடண்ட் ஆன மிஸ்டர் மணவாளன் எப்படிப்பட்டவர்னு எங்களை விட உங்களுக்கு நன்ருகத் தெரியும் சார்! அவர் அப்படி வன்முறைகளைச் சகித்துக்கொள்கிறவர் இல்லை என்பதை நீங்களே மனசாரத் தெரிஞ்சுக்கிட்டிருந்தும் எங்களைக் கேட்கிறீங்களே சார்...''


''இப்ப நான் என்ன பண்ணணும் இறே நீ? அதைச் சொல்லு.''

அவன் மீண்டும் தன் வேண்டுகோளைச் சொன்னுன். வி. சி. வேண்டா வெறுப்பாய் ஆர். டி. ஓ. வுக்கு ஃபோன் செய்வதற்காக டெலிபோனை எடுத்தார்.

''....பட்டமளிப்பு விழாச் சமயத்திலே பீஸ்ஃபுல்லா இருக்கிறதா அஷ்யூர் பண்ருங்க....'' என்றும், ''கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம்'' என்றும் துணைவேந்தர் ஆர். டி. ஓ.விடம் பேசிய தொனியைக் கேட்ட பின் அவரும் இதில் சர்க்காரின் ஏஜெண்டாக இருப்பது அவர்களுக்குப் பச்சையாகப் புரிந்தது. தங்கள் முன்பு வெளிப்படையாக அவர் ஆர்.டி.ஓ.வுடன் பேசிய பேச்சின் தொனி பாண்டியனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவனும் உடனிருந்த மற்ற மாணவர்களும் துணைவேந்தரின் சுயரூபத்தை அப்போது நன்ருகப் புரிந்து கொண்டார்கள். பூதலிங்கம் சார் செய்து வைத்திருந்த கணிப்பும் அநுமானமும் நூற்றுக்கு நூறு சதவிகிதம் சரியா யிருந்தது. ஆர்.டி.ஓ. விடம் வி. சி. குழைந்த குழைவைப் பார்த்தால் இருவருக்கும் உள்ள நெருக்கத்தை அவர்கள் புரிந்து கொள்ள முடிந்தது. பல்கலைக் கழகம் சம்பந்தமாகப் போலீஸ் எடுக்கும் நடவடிக்கையும், துணைவேந்தர் கூறும் இரகசிய யோசனையின் பேரில்தான் நடக்கிறது என்பது அப்போது அவர்கள் கண் முன்பே நிரூபணமாகி யிருந்தது. பஸ் நிலையத்திலிருந்து தன்னைப் பின்தொடரும் சி.ஐ.டி.க்கள், பூதலிங்கம் சார் வீட்டு முன் உள்ள இரகசியப் போலீஸ் எல்லாமே துணைவேந்தர் யோசனையின் பேரில்தான் என்பது பாண்டியனுக்குப் புரிந்தபோது அவன் கோபம் அதிகமாயிற்று.

(தொடரும்)

மோதிரக் கையால் குட்டு!



சென்னை நகரசபை இண்டோர் ஸ்டேடியத்தில் இளம் ஜப்பானிய டேபிள் டென்னிஸ் வீரர்கள் இரண்டாவது டெஸ்ட்பந்தயம் ஆடினுர்கள். உலக டெஸ்ட் வீரர்களுக்கெதிரே இந்திய ஆட்டக்காரர்களான மீர் காஸிம் அலி, பஜாஜ், மஞ்ஜித் துவா முதலியோர் ஆடிச் சமாளிக்க முடியுமா? ஜப்பானிய கோஷ்டிக்கு ஐந்து டெஸ்ட்களில் நேரிடை வெற்றி. இந்திய ஆட்டக்காரர்கள் அவர்களைச் சமாளித்ததே பெரிய காரியம்.

''அவர்கள் இளம் வயதிலேயே கடும் பயிற்சிகளில் ஈடுபட்டுத் தங்கள் உலக ஸ்டாண்டர்டைக் காப்பாற்றிக் கொள்கிருர்கள். நாம் இப்போதுதான் இதில் உலக நாடுகளிடையே பதின் மூன்ருவது இடத்தைப் பற்றி யிருக்கிறேம்! ஆட்டத் திறமை, பயிற்சி, நுணுக்கம் எல்லாம் 'மோதிரக் கையால் குட்டுப் பட்டால்தானே' வரும்?'' என்கிருர் நெடுநாளைய டேபிள் டென்னிஸ் பயிற்சியாளர் ஸ்ரீமதி வி.கே.கே பிள்ளை. ஆக இந்தத் தோல்வியும் நன்மையே.




டெட்சுயோ இனோ

'யானையோடு யானை மோதினுல்?' ஆம்! முன்னுள் உலக சாம்பியன் ஷிகியோ இட்டோவும், டெட்சுயோ இனோவும் ஆடிய எக்ஸிபிஷன் ஆட்டம் ரசிகர்களுக்கு, 'கொடுத்த காசு வீண் போகவில்லை!' என்ற திருப்தியைக் கொடுத்தது. பந்து 'பிங்பாங்' என்று மேஜையில் இனிய ஒலி எழுப்பிப் பறந்து ரசிகர்களை ஆரவாரம் போட்டுக் கரவொலி எழுப்ப வைத்தது! டேபிள் டென்னிஸின் அத்தனை நகாசு ஆட்டங்களையும் இவ்விரு மன்னர்களும் சளைக்காமல் ஆடி நம்மை அயர வைத்தனர்!

இந்த ஜப்பானிய வெற்றி வீரர்களுக்கு 'யானை'ப் பரிசு (மர யானைப் பொம்மை) கொடுத்தது மிகப் பொருத்தம்!

- குண்டுமணி


1. இந்திய காப்டன் மீர்காஸிம் அலி
2. ஜப்பான் சாம்பியன் ஷிகியோ இட்டோ



இது என்ன பார்வை?

ஜோதிர்லதா கிரிஜா

ஞானப்பிரகாசம் வீட்டுக்குப் போனதன் பின்னரும் அமைதியாக இல்லை. அவன் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது என்றால் மிகை இல்லை. அவன் உடை மாற்றிக் கொள்வதற்கு முன்னால் தன் அறையில் இருந்த ஆளுயரக் கண்ணாடிக்கு முன்னால் நின்று தன்னைத் தானே ஒரு முறை நெடுமையாகப் பார்த்துக் கொண்டான். அன்று தான் அணிந்திருந்த கருநீலக் கால்சராயும் வெளிர் நீல முழுக் கைச் சட்டையும் கனகச்சிதமாகத் தனக்குப் பொருந்தி யிருந்ததாக அவனுக்குப் பட்டது. தன் முன்



தோற்றத்தைச் சில விநாடிகள் ரசித்ததன் பிறகு அவன் தன் முதுகுப்புறத் தோற்றத்தை ஓரளவேனும் காணும் நிமித்தம் திரும்பி நின்று கொண்டு கழுத்தை முறுக்கிச் சாய்த்துப் பார்த்தான். உடல் அளவுகளோடு கச்சிதமாகப் பொருந்தும்படி உடைகளைத் தைத்த தையற்காரரை மனத்துள் வாழ்த்திய வண்ணம் அவன் அவற்றைக் களைந்து விட்டு லுங்கியையும் பனியனையும் அணிந்து கொண்டு காப்பி குடிக்கத் தயாரானான்.

தலையைப் படிய வாரி விட்டுக் கொண்டு அவன் சமையலறையை நோக்கி நடக்கத் தொடங்கியபோது அவன் மனைவி பத்மா ஆவி பறக்கும் காப்பியுடனும் சிற்றுண்டியுடனும் அவன் முன் எதிர்ப்பட்டாள். அவன் புன்னகையுடன் அவற்றை வாங்கிக் கொண்டு சாப்பிடலானான். பத்மா தானும் அடுக்களைக்குச் சென்று வழக்கம்போல் சிற்றுண்டியையும் காப்பியையும் எடுத்துக் கொண்டு வந்து அவன் எதிரில் அமர்ந்தாள்.

சாப்பிட்டுக் கொண்டே எதையாவது பேசும் வழக்கமுள்ள ஞானப்பிரகாசம் ஒன்றும் பேசாமல் ஏதோ சிந்தனை வயப்பட்டவனாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு பத்மா வியப்படைந்தாள். வீட்டுக்குள் நுழையும்போதே அவன் கேட்கும் முதல் கேள்வி, 'லீலா எங்கே?' என்ற தங்கள் ஒரே மகளைப் பற்றிய கேள்விதான். அவன் அலுவலகத்திலிருந்து திரும்பும்போது லீலா கண்டிப்பாக வீட்டில் இருந்தாக வேண்டும். இல்லாமல் அக்கம்பக்கம் எங்கேயானும் விளையாடப் போயிருந்தால், பத்மா உடனே போய் அவளை அழைத்துக் கொண்டு வர வேண்டும். அவள் வந்ததன் பிறகுதான் அவன் சிற்றுண்டி அருந்துவான். இன்று எதனாலோ அவன் லீலாவைத் தேடாததையும் ஒன்றுமே பேசாமல் சாப்பிட்டுக்

கொண்டிருந்ததையும் கண்டு பத்மா கவலையுற்றாள். 'அலுவலகத்தில் ஏதேனும் தகராறோ?' என்று எண்ணிக் கலக்கமுற்றாள். சாப்பிட்டு முடிக்கும் வரையில் பொறுமையைக் கடைப்பிடிக்க இயலாதவளாய், ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள் ? தலையை வலிக்கிறதா? இல்லாவிட்டால் ஆபிஸில் ஏதேனுமா?'' என்று அவள் கேட்டதும், ஏதோ தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டவனுக்குரிய பதற்றத்துடன் அவன் சற்றே பேந்த விழித்துவிட்டு அசட்டுச் சிரிப்பு சிரித்து வைத்தான்.

''ஒன்றுமில்லை, பத்மா! அலுவலகத்தில் இன்று வேலை சக்கைப் போடு போட்டுவிட்டது. அதோடு தலைவலி வேறு.... காப்பி சாப்பிட்டால் சரியாய்ப் போய்விடும்'' என்று அவன் சமாளித்துக் கொண்டாற்போன்ற குரலில் சொன்ன பதிலை முற்றும் நம்பாதவள் போல் அவள் அவனைக் கூர்ந்து பார்த்தாள்.



''நீங்கள் எதையோ மறைக்கிறீர்கள். உங்களால் என்னிடம் பொய் சொல்ல முடியாது'' என்றாள் பத்மா. அவன் மறுபடியும் ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

''என்ன சிரிக்கிறீர்கள்? என்ன நடந்தது? உண்மையைச் சொல்லுங்கள்'' என்று அவள் வற்புறுத்தவும் அவன் தன்னையும் அறியாது தன் முகத்தில் பரவிய அசட்டுக் களையை மறைத்துக் கொள்ள முயன்ற வண்ணம், ''எதுவும் நடக்கவில்லை, பத்மா. வேலை ரொம்ப அதிகம். இலேசாகத் தலைவலி வேறு. வேறே எதுவும் இல்லை. என்னை நம்பு'' என்று கூறினான்.

பத்மா பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவனை முற்றிலும் நம்பாதவள் போன்று ஒரு பார்வை பார்த்துவிட்டு எழுந்து உள்ளே போனாள். தான் செய்த தவறு சட்டென்று ஞாபகம் வரப்பெற்றவனாய், ''லீலா எங்கே?'' என்று அவன் கேட்டான். பத்மா திரும்பி நின்று அவனை ஆழமாக நோக்கிவிட்டு, ''குழந்தையின் ஞாபகம்கூட வராத அளவுக்கு அப்படி என்னதான் நடந்தது ?'' என்று கேட்டாள்.

''என்னை நம்பு, பத்மா. ஒன்றும் நடக்கவில்லை. மனிதனுடைய 'மூட்' எப்போதும் ஒரே மாதிரியாக இருக்குமா....? அது சரி.... லீலா எங்கே?'' என்று அவன் சற்று எரிச்சலான குரலில் கேட்டான்.

''எதிர்வீட்டுக்குப் போயிருக்கிறாள்.....'' என்று பதில் கூறிவிட்டுப் பத்மா அடுக்களைக்குள் புகுந்து தன் வேலைகளில் ஈடுபட்டாள்.

ஞானப்பிரகாசம் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து வார இதழ் ஒன்றைப் புரட்டலானான். அதன் பக்கங்களுடன் அவன் சிந்தனையும் புரண்டது. ஒரு வாரத்துக்கு முன்னால் தன் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்த சுஜாதாவின் குண்டு முகம் அவன் மனக்கண்கள் முன்பு தோன்றியது. அலுவலகத்துக்குப் புதிதாக வந்த சுஜாதா தன் பிரிவிலேயே சேர்க்கப்படுவாள் என்பது அவன் எதிர்பார்த்திருந்த ஒன்றுதான். ஏனென்றால் அவன் பிரிவில் இரண்டு காலி இடங்கள் இருந்தன. கடந்த ஆறு மாதங்களாக அவை நிரப்பப்படவில்லை. எனவே புதிதாக வந்த பெண் அங்கேதான் சேர்க்கப்படுவாள் என்பது அவன் எதிர்பார்த்திருந்த ஒன்றுதான்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று தலைமை எழுத்தரைப் பின்பற்றித் தன் பிரிவுக்குள் நுழைந்த சுஜாதாவின் தோற்றம் அவன் மனக்கண் முன்பு விரிந்தது. குனிந்த தலையுடன் பிரிவுக்குள் நுழைந்த சுஜாதாவின் பார்வை முதலாவதாகச் சந்தித்தது ஞானப்பிரகாசத்தின் பார்வையைத்தான். எல்லாருடைய பார்வையையும்போல் அவன் பார்வையும் புதியவளான அவள்மீது படர்ந்திருந்ததில் வியப்பில்லைதான். ஆனால் அவன் மேல் பதிந்த தன் பார்வையை அந்தப் பெண் சில விநாடி நேரம்வரை அகற்றாமலே அவனை விழுங்கி விடுவாள்போல் பார்த்ததுதான் வியப்புக்கு உரியது. பின்னர் சட்டென்று சுஜாதா தன்

கண்களைத் திசை திருப்பிக் கொண்டாள். திடீரென்று தன் நினைவு வரப்பெற்று அப்படிச் செய்தது மாதிரி அவனுக்குத் தோன்றிற்று.

பக்கத்து இருக்கைக்காரன் பஞ்சவர்ணம் ''உனக்கு இந்தப் பெண்ணை ஏற்கனவே தெரியுமாடா ?'' என்று வினவியபோது அவள் கண்ணிமைக்காது தன்னை நோக்கியது நினைவுக்கு வந்தது. ஞானப்பிரகாசம் முகம் சிவந்துபோய் ஒருவகைப் பெருமிதத்துடன் உதட்டைப் பிதுக்கி எதிர்மறையாகத் தலையசைத்தான். நண்பனின் முகத்தில் பொறாமை தோன்றியது அவனுக்குப் புரிந்தது.

ஞானப்பிரகாசத்தின் கம்பீரமும் ஆண்மையும் நிறைந்த தோற்றத்தின் மேல் பஞ்சவர்ணத்துக்கு இருந்த பொறாமையை அவன் அறிவான். எலும்பும் தோலுமாக ஒட்டடைக் குச்சி மாதிரி இருந்த அவன் எரிச்சல் அவனுக்குப் புரிந்தது. தலைமை எழுத்தர் காட்டிய இருக்கையில் உட்காருவதற்கு முன்னால் மறுபடியும் அவள் கடைக்கண்ணால் தற்செயலாக நோக்குவதுபோல் அவனைப் பார்த்துவிட்டுத் தான் உட்கார்ந்தாள். அவனுக்கு இப்போது மிகத் தெளிவாகத் தெரிந்தது — அவள் பிரிவுக்குள் நுழையும்போது தன்னைப் பார்த்தவள் பார்த்தபடியே சில வினாடிகளுக்கு நின்றது தற்செயல் இல்லை என்பது. அவன் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. ஞானப்பிரகாசம் இருபத்தைந்து வயசு இளைஞனாகிப் போனான். காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு கனைப்பதை அவனது முப்பத்தாறு வயசு தடுத்து நிறுத்தியதுதான் அந்தச் சேட்டைகளில் அவன் ஈடுபடாததற்குக் காரணம். ஒருகால் மணமாகாதவனாக இருந்திருந்தால் வயதை மீறிய அந்தச் சேட்டைகளிலும் அவன் ஈடுபட்டிருந்திருப்பானோ என்னவோ? ஞானப்பிரகாசம் தன் கண்களைத் தாழ்த்திக்கொண்டு வேலையில் முனைப்பாக இறங்கினான். ஆனால் பளிச்சென்று துடைத்து ஏற்றி வைத்த குத்துவிளக்குப் போல் சுஜாதா எதிரில் உட்கார்ந்து அடிக்கடி தன்னை ஓரக் கண்ணால் பார்த்தது அவன் மூளையை இயங்க விடாமல் அடித்தது. பஞ்சவர்ணம் வேறு தன் கழுகுக் கண்களால் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தது அவனைச் சங்கடத்துக்குள்ளாக்கியது.

இடைவேளையில் சாப்பிடுவதற்காக எல்லோரும் எழுந்தபோது அவனும் கிளம்பினான். அந்தப் பிரிவில் வேலை செய்த அஞ்சுகமும் சுஜாதாவும் சேர்ந்து கிளம்பிச் சென்றார்கள்.

அதற்கு மறு நாள் இரண்டாவது சனிக் கிழமை. அதற்கும் அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை. அதனால் இரண்டு நாட்கள் அவர்கள் ஒருவரையொருவர் பார்க்க முடியவில்லை. திங்கட்கிழமையன்று சுஜாதா பிரிவுக்குள் நுழைந்தபோது சொல்லி வைத்தாற்போல் ஞானப்பிரகாசத்தைப் பார்த்தவாறுதான் வந்தாள். அவளது பார்வையைச் சந்தித்ததும் அவனுக்குப் படபடவென்று நெஞ்சு அடித்துக் கொண்டது. அன்று பிற்பகல் அலுவலக வேலையாக அவள் அவனது இருக்கைக்கு வந்தபோதோ அவனது மார்பு தெறித்துவிடுகிறாற்போல் துடித்தது. எல்லாரும் தன்னையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தபடி இருந்தாற்போல் அவன் மனக்குப் பட்டது. அவன் தலையைக் குனிந்து கொண்டான். 'இந்தப் பெண் கொஞ்சம் அடக்கம் உள்ளவளாக இருக்கலாம். என்னதான் நான் அழகாக இருந்தாலும் இப்படியா அடிக்கடி என்னை ஓரக்கண்ணால் பார்ப்பது?' என்று அவனுக்குத் தோன்றிற்று.

அன்று மாலை பக்கத்து இருக்கைப் பஞ்சவர்ணம், 'என்ன ஞானப்பிரகாசம் ? ஒரு மாதிரியாய் இருக்கிறீர்கள் ?' என்று கண்களைச் சிமிட்டியவாறு கேட்டபோது காரணமின்றி அவனுக்குச் சினம் பொங்கிற்று. மனத்தில் எதையோ நினைத்துக் கொண்டுதான் அவன் இலை மறை காயாக அப்படிப் பேசினான் என்பது அவனுக்குத் தெரிந்தபோது அவன் உள்ளம் சிறுமையில் தவித்தது. எனினும் எதையும் புரிந்து கொள்ளாதவன் போன்று, ''தலையை வலிக்கிறது......'' என்று சொல்லிவிட்டு அவன் கண்களை மூடிக் கொண்டான். பஞ்சவர்ணம் குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டதை அவன் கவனியாதவன் போல் இருந்துவிட்டான்.

அடுத்த இரண்டு நாட்கள் அவன் விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டில் இருந்தான். வியாழனன்று அவன் அலுவலகம் சென்றபோது சுஜாதா மட்டுமே பிரிவில் இருந்தாள். வேறு யாரும் வந்திருக்கவில்லை. சரியாக மணி பத்து. எல்லோரும் உடன் இருந்தபோது அடங்கி இருந்த ஞானப்பிரகாசத்தின் மனம் தனிமையில் அவளுடன் இருந்த அந்த நேரத்தில் சண்டித்தனம் செய்தது. அவன் திருட்டுத்தனமாக அவளை அடிக்கடி ஓரக் கண்ணால் நோக்கினான். அவளும் அடிக்கடி அவனைப் பார்த்தாள். அவளுடன் பேச்சுக் கொடுத்துப் பார்க்க எண்ணி அவன் தொண்டையைக் கனைத்துக் கொண்டபோது, பஞ்சவர்ணம் சதிகாரன்மாதிரி வந்து தொலைத்தான். அவன் முகத்தில் காணப்பட்ட புன்னகையின் பொருள் புரிந்ததும் ஞானப்பிரகாசம் 'நீ நாசமாய்ப் போக' என்று மனத்துள் அவனைத் திட்டினான். அதன் பிறகு அவன் சுஜாதாவின் பக்கம் பார்க்காமல் தவிர்ப்பதில் கவனமாக இருந்தான்.

அன்று மாலை அலுவலகம் முடிந்து எல்லோரும் கிளம்பிய பிறகு ஞானப்பிரகாசம் சற்றுத் தாமதமாகவே புறப்பட்டான். ஓர் அவசர வேலை இருந்ததுதான் காரணம். ஐந்தேகால் மணிக்கு அவன் பேருந்து நிறுத்தத்தை அடைந்தபோது அங்கே சுஜாதா நின்று கொண்டிருந்தாள். பக்கத்தில் அலுவலகத்தைச் சேர்ந்த எவரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டதன் பிறகு அவன் துணிவாக அவளை விழுங்கிவிடுவான்போல் பார்த்துச் சிரித்தான். அவளும் பதிலுக்குச் சிரித்தாள். அவளோடு ஏதாவது பேசலாமா— அவளை ஆழம் பார்க்கலாமா என்று அவன் நினைத்தபோது, வந்து தொலைந்த வண்டியில் ஏறிக்கொண்டு அவள் போய்விட்டாள். ஆனால் அவனிடம் விடைபெற்றுக் கொள்ள அவள் தவறவில்லை. அவள் போன பிறகு எதையோ தொலைத்து விட்டவன்போல்


அம்மா ஏன்
அவங்க பாத்ரூம்
நாற்றமடிக்குது,
நம்முடையது
ஜம்முனு வாசனை-
யாயிருக்கு?


ODONIL
ODO NIL

அவன் வெறுமையாகிப் போன நெஞ்சுடன் அங்கே நின்றான்.

பக்கத்தில் குழந்தை ஒன்றின் மழலையும் அதனோடு கொஞ்சிக் கொண்டிருந்த தகப்பன் ஒருவனின் குரலும் அவன் செவிகளில் விழுந்ததும் அவன் வெிர்த்தபடி தலையைக் குலுக்கிக் கொண்டான். தான் ஆறு வயதுக் குழந்தை ஒன்றுக்குத் தகப்பன் என்ற நிலை நினைவுபடுத்தப்பட்டதால் விளைந்த குறுகுறுப்பில் அவன் குற்ற உணர்வால் பாதிக்கப்பட்டு மரம் போல நின்றான். 'அழகும் இளமையும் உள்ள இந்த சுஜாதா ஒருகால் அடக்கம் இல்லாத அசட்டுப் பெண்ணாக இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட அசடுகளிடம்கூடக் கவனமாகத்தான் பழக வேண்டும். வெளிக்குத் தெரிகிறதை மட்டும் வைத்துத் தப்புக் கணக்குப் போட்டுவிடக் கூடாது....' என்று அவன் தனக்குள் எண்ணிக் கொண்டான். எப்படி இருந்தாலும், சுஜாதாவின் கண்கள் தன்னை நோக்குகையில் அவற்றில் கனிவு சொட்டுவது அவனுக்கு வெளிப்படையாகத் தெரிந்தது. இதனால் அவன் தன் மனத்தில் விளைந்த தடுமாற்றத்துக்கு வடிகால் காணாமல் நிம்மதி பெற முடியாது என்ற முடிவுக்கு வந்தான். எனினும் தான் மணமானவன், ஒரு பெண் குழந்தைக்குத் தகப்பன் என்றெல்லாம் எண்ணி அவன் தன் மனக் குதிரையை லகான் போட்டு நிறுத்த முயன்றான்.

மறுநாள் மாலையும் அவன் பேருந்து நிலையத்தில் அவளைச் சந்தித்தான். ''பக்கத்து ஹோட்டலுக்குப் போய் ஒரு காப்பி சாப்பிடலாம், வருகிறீர்களா?'' என்று அவன் அவளை அழைக்கத் திட்டமிட்டான். அவனைப் பார்த்துச் சிரித்த அவள், அவனுக்கு அருகில் வந்து நின்று, ''எங்கள் வீட்டுக்கு நாளை மாலை வருகிறீர்களா?'' என்று கேட்டாள். ஞானப்பிரகாசம் ஜிவ்வென்றுபறந்தான். ''எதற்கு?'' என்று ஈன ஸ்வரத்தில் கேட்டான்.

''நீங்கள் வாருங்களேன்..... உங்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருக்கிறது'' என்றாள் சுஜாதா. ஞானப்பிரகாசத்தால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. ''ஆகட்டும், வருகிறேன்'' என்றவன் அவளது முகவரியைக் கேட்டுக் குறித்துக் கொண்டான். மேற்கொண்டு அவன் பேசுவதற்குள் பாழும் பேருந்து வந்து விட்டது. அவள் கையை ஆட்டிவிட்டு அதில் ஏறிக் கொண்டாள். அவள் தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தது எதற்காக இருக்கும் என்பதை ஊகிக்க மாட்டாதவனாக ஞானப்பிரகாசம் மண்டையை உடைத்துக் கொண்டான். அவனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. யோசித்து யோசித்துக் குழம்பியபடி வீடு திரும்பியபோதுதான் மனைவி பத்மாவிடம் தலைவலி, வேலை மிகுதி என்றெல்லாம் அவன் புளுகி வைத்தான்....

''கறிகாய் வாங்கி வருகிறீர்களா ? என்ன பலத்த யோசனை — கூப்பிடக் கூப்பிடக் காதில் விழாத அளவுக்கு ?'' என்ற பத்மாவின் குரல் அவனது சிந்தனையைக் கலைத்தது. அவன் பெருமூச்சுடன் — பத்மாவின் காதுகளில் விழாத பெருமூச்சுடன்தான் — எழுந்தான்.

மறு நாள் மாலைப் பொழுதை எதிர் நோக்கியபடி ஞானப்பிரகாசம் ஆவலுடன்

> சந்தோஷமே தன் வாழ்க்கையில் முக்கிய குறிக்கோள் என்று யாரேனும் முடிவு செய்தால் அவர் நிச்சயம் தோல்வி யடைவார். மகிழ்ச்சி ஒரு துணைப்பொருள். அதுவே ஒரு முடிவல்ல. — ஆர்னல்ட் பென்னட்

காத்திருந்தான். ஆயிற்று. ஐந்து மணி அடித்ததும் அலுவலகம் காலியாகத் தொடங்கிற்று. நாலே முக்கால் லுக்கே அவளது இருக்கைக்குச் சென்ற அவன், ''நீங்கள் பஸ் ஸ்டாப்பில் காத்திருங்கள், நான் வருகிறேன்'' என்று மெதுவாகச் சுஜாதாவிடம் சொல்லிவிட்டுத் தன் இருக்கையில் வந்து அமர்ந்தான். பஞ்சவர்ணத்தின் பார்வையைத் துணிச்சலாகச் சந்திக்கவும் செய்தான்.

பேருந்து நிறுத்தத்தில் உடனேயே பஸ் கிடைத்தது. இருவரும் ஏறிக் கொண்டார்கள். மயிலாப்பூரில் பேருந்து நிறுத்தத்திலிருந்து வீடு போய்ச் சேரும் வரையில் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. தனக்கு அவள் வீட்டில் காத்திருக்கும் ஆச்சரியம் யாதாக இருக்கும் என்ற எண்ணத்தில் மூழ்கியவாறே அவன் நடந்து சென்றான்.

''வாருங்கள்; இதுதான் எங்கள் வீடு'' என்ற அவளது குரல் காதில் விழுந்ததும், அவனது எண்ணங்கள் கலைந்தன. வாசலில் அவர்களின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தவர் போல் நடுத்தர வயதுடைய ஒருவர், ''வாருங்கள், சார். சுஜாதா உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறாள்..... அப்படியே என் அண்ணாவை உரித்து வைத்தாற்போல் இருக்கிறீர்கள். இவ்வளவு உருவ ஒற்றுமை இருக்கும் என்று நான்கூட நம்பவில்லை'' என்று படபடவென்று பொரிந்து கொட்டினார். ஞானப்பிரகாசத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''இவர்தான் உங்கள் அப்பாவா? என்ன சொல்லுகிறார்?'' என்று ஒன்றும் புரியாதவனாக ஞானப்பிரகாசம் கேட்டான்.

''என்ன, சித்தப்பா இது? அவர் உள்ளே வருவதற்குள்ளேயே பொழிந்து தள்ளுகிறீர்களே ? அவருக்கு நான் இன்னும் விஷயத்தையே சொல்லவில்லை.... அவர் விழிப்பதைப் பாருங்கள். அப்பா மாதிரியே இல்லை?'' என்ற சுஜாதா இடிஇடி என்று சிரித்தாள்.

''என்ன பேசிக் கொள்ளுகிறீர்கள் ? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே ?'' என்ற ஞானப்பிரகாசம் அவர்களைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள் சென்றான்.

''சொல்லுகிறேன் எல்லாம்'' என்ற சுஜாதா, ''சித்தி, சித்தி !'' என்று கூவியவாறு உள்ளே ஓடினாள். கொஞ்சநேரத்துக்கெல்லாம் தலையை மட்டும் வெளியே நீட்டி எட்டிப் பார்த்த சித்தியம்மாள், ''ஆமாம், அவர் மாதிரியேதான் இருக்கிறது'' என்று சுஜாதாவின் காதில் முணுமுணுத்ததும் அவனுக்கு நன்றாகக் கேட்டது.

சுஜாதா கொண்டு வந்து வைத்த சிற்றுண்டியைச் சாப்பிட்ட வண்ணம், ''என்ன பேசிக் கொள்ளுகிறீர்கள், உங்களுக்குள்ளேயே? எனக்கும் கொஞ்சம் சொல்லக் கூடாதா?'' என்றான்.


மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
ரின். சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கன மிக்கது ரின்: சோப்பைவிட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்-திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள ஆடவரின், பெண்டிரின், குழந்தையரின்...யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பை விட அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

"இதோ வந்துவிட்டேன்" என்ற சுஜாதா மறுபடியும் உள்ளே ஓடினாள். மார்பளவு புகைப்படம் அது. அதில் இருந்த உருவத்தைப் பார்த்து ஞானப்பிரகாசம் அதிர்ச்சி அடைந்தான். கிட்டத்தட்ட அவனைப் போன்றே ஒருவர் படத்தில் காணப்பட்டார். தன் புகைப்படமே அது என்பதுபோல் அவன் ஒரு சில விநாடிகளுக்குள் குழம்பிப் போனான்.

"என்ன சார்? உங்கள் நகல் மாதிரியே இல்லை? இவர்தான் என் அண்ணா. அதாவது சுஜாதாவின் தகப்பனார். அவர் இறந்தபோது அவருக்கு முப்பத்தாறு வயசு. சுஜாதாவின் தாயாரும் அவளுக்கு மிகச் சிறு வயசிலேயே போய் விட்டாள். எங்களுக்குக் குழந்தை இல்லை. அதனால் நாங்களே எங்கள் மகளாக இவளை வளர்த்து வருகிறோம். வேலையில் சேர்ந்த அன்றே சொன்னாள் — எங்கள் அலுவலகத்தில் அப்பா மாதிரியே ஒருவர் இருக்கிறார் என்று. அதுதான் உங்களை ஆசையோடு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள். உங்களைப் பார்ப்பது இறந்துபோன அப்பாவையே பார்ப்பது போல் இருக்கிறதாம்" என்று அவளுடைய சித்தப்பா சொன்னபோது, ஞானப்பிரகாசம் பாசம் ததும்பும் கண்களால் சுஜாதாவைப் பார்த்துப் புன்னகை செய்தான். அவள் கண்களில் நீர் ததும்பியிருந்தது. ஞானப்பிரகாசத்தின் உள்ளத்தை அலைக்கழித்துக் கொண்டிருந்த குழப்பம், கலக்கம், கள்ளம் யாவும் கண் இமைப் பொழுதில் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தன. அவன் புது மனிதன் ஆனான். சுஜாதாவின் கலங்கிய கண்களில் அவன் தன் மகள் லீலாவின் கண்களைக் கண்டதுதான் அதற்குக் காரணம்.

ராம்பூர் கா லக்ஷ்மண்

ராம்பூர் கா லக்ஷ்மண் என்னும் படக் கதையின் அற்புதத் தொடக்கத்தைக் கண்டு, திரையுலகில் ஒரு புதுமையைக் காணப் போகிறோம் என்று நிமிர்ந்து உட்காருகிற நேரத்திலே...

...படம் தொய்ந்து விடுகிறது.

ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரண்டு இளங் குழந்தைகளை இரயில் விபத்து பிரிக்கிறது. ஒருவனைச் சூதுவாது அறியாதவனாக்குகிறது. இன்னொருவனைக் கொடுமையே உருவான கடத்தல் குழுத் தலைவனாக்குகிறது. இருவருக்கும் ஒரு காதலி. கடைசியில் நல்லவனுக்கே உரிமையாகிறாள்.

அண்ணன் தம்பியை மோத விட்டிருக்கும் இடங்கள் அபாரம்! லக்ஷ்மணனாக ரண்தீர் கபூர் வெகு இயல்பாக நடித்திருக்கிறார். சத்ருக்னன் சின்ஹாவோ கொடுமையே உருவான குமாராகத் தோன்றுகிறார். முகத்தில் குரூரமும் கோபமும் கொப்பளிக்கின்றன.


இவ்விரு ஆண் பாத்திரங்களின் மோதலில் பெண் பாத்திரம் படுத்து விடுகிறது. ரேகாவுக்கு அதிக வேலையில்லை. உயிர் உள்ள வசனங்கள் படத்துக்கு உறுதுணையாக நிற்பதை ஹிந்தி தெரிந்தவர்கள் உணர்வார்கள்.

எல்லாம் சரிதான். இன்றையத் திரையுலகம் குற்றச் செயல்களுக்கு ஏற்றம் கொடுத்துப் படமாக்குகிறதே. இது சமுதாயத்தின் நலனுக்கு உகந்ததுதானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?



புதுமையைக் காணப்போகிறோம் என்று நிமிர்ந்து உட்காருகிற நேரத்திலே......

பாரிவேர்
விண்ணை முட்டும் மாளிகைகளிலும் விரும்பி நிறுவப்படுகிறது!



ஏனெனில் பாரிவேர் என்றால்
எழிலுடன் கூடிய பயன் + திறமையான
உழைப்பு + நீண்ட கால சிக்கனம் என்று அர்த்தம்.
முத்துப் போன்ற வெண்ணிறம் மற்றும் பிங்க்,
பிரிம்ரோஸ், டர்க்காயிஸ், ஸ்கைப்ளூ,
மெல்லோ கிரீன், மிஸ்ட் கிரே ஆகிய தளிர்
நிறங்களிலும் கிடைக்கிறது.

இந்தியாவின் மிகப் பெரிய ஸெராமிக்
தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு, அகில
உலகப் புகழ் பெற்றது.

ஐ.எஸ்.ஐ. மற்றும் டி.ஜி.எஸ். அண்ட் டி.
பட்டியல்களில் இடம் பெற்றிருப்பது.

Parryware VITREOUS

பொலிவான வாழ்க்கைக்கு
பாரிவேர் விட்ரியஸ்

ஈ.ஐ.டி.-பாரி லிமிடெட்
டேர் ஹவுஸ், சென்னை-1

18 வாழ்க முல்லான்!

மரத்தை விட்டு மரம் தாவிச் செல்கிற குரங்கையும் அதன் ஓட்ட சாட்டங்களையும் பார்த்து அனுபவித்துள்ள ஞானிகளே, மனித மனத்தையும் அதன் இயல்புகளையும் ஆராய்ந்து கண்டார்கள்; இரண்டையும் இணைத்தார்கள்! ''மனக் குரங்கு'' என்னும் ஒரு சொற் சேர்க்கைக்குள் மனத்தையும் குரங்கையும் இணைத்த அந்த இணைப்புக்குள் அத்தனை ஞானம் பொதிந்து கிடக்கிறது!

ஆம்; மனிதனைப் போல் சலனமான இயக்கம் குரங்கேதான்; வேறொன்று இல்லை!

காலை வேளையில் ஒரு குணம். நல்லபடியாகப் பேசிக் கொண்டிருந்தார். மத்தி



யானம் குணம் மாறிவிட்டது! நேர் மாற்றமாகப் போய் விட்டார். மாலையில் மறுபடியும் சந்தித்தோம். ''அடாடா! வாருங்கள், வாருங்கள்!'' என்று ஆர்ப்பாட்டமான வரவேற்பு!

நாம் எல்லோருமே இத்தகைய அனுபவங்களுக்கு உள்ளாகிறோம் அல்லவா?

விநாடிக்கு விநாடி மாறுகிற குணங்களுக்கு நடுவிலே ஸ்திர புத்தி, நிலையான இயல்பு கொண்ட ஒரு மனிதரைக் கண்டு விட்டால் எவ்வளவு வியப்பு ஏற்படுகிறது! அதிலும் நிலையான அன்பு கொண்ட ஒருவரை இந்த உலகிலே கண்டு விட்டால் ஒரு கவியுள்ளத்துக்கு எத்தகைய பூரிப்பு ஏற்படும்!

பாடலைப் பார்ப்போம்:

காலையில் ஒன்றுஆவர்
கடும்பகலில் ஒன்றுஆவர்
மாலையில் ஒன்றுஆவர்
மனிதர் எலாம்

காலையிலே ஒரு நிலை; கடும் பகலில் வேறு ஒரு நிலை; மாலையில் மற்றொன்று! நேரத்துக்கு நேரம் ஒன்றொன்று!

இப்படிப்பட்ட மனக்குரங்கு சூழ்ந்த இந்த மண்ணுலகிலே

—சாலவே
முல்லானைப் போல

[சாலவே — நன்றாகவே, முழுமையாகவே]

முல்லானைப் போல
முகமும்அக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம்
நாம்!

வெளிச்சத்தில் மலர்ந்து, வெயிலிலே வாடி, இருட்டிலே கூம்பிவிடுகிற மனமா முல்லானுக்கு? இல்லை. முகமும் அகமும் எப்போதும் மலர்ந்தே இருக்குமாம் அந்த வள்ளலுக்கு! அவனைப் போல நிலையான நல்லவர்களை நாம் கண்டறியோம் என்று கையை விரிக்கிறார் புலவர்!

காலையில் ஒன்றுவர்
கடும்பகலில் ஒன்றுவர்
மாலையில் ஒன்றுவர்
மனிதரெலாம் — சாலவே
முல்லானைப் போல
முகமும்அக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம்
நாம்!

முல்லானையே கண்டறியோம் நீங்களும், நானும்! அவன் கறுப்பா சிவப்பா, நமக்குத் தெரியாது! ஆனால் அவனை அப்படியே படம் பிடித்துக் காட்டிவிடுகிறது கவிதை! நமக்கும் அவனைப் பார்த்து போலவே, அவனுடைய மலர்ந்த முகத்தைக் கண்டது போலவே ஒரு மன நிறைவைத் தருகிறது செய்யுள்!

நிலையான அன்பு கொண்ட முல்லானுக்கு இலக்கியத்தில் ஒரு நிலையான இடத்தைக் கொடுத்து விட்டது பாடல்! வாழ்க முல்லான்!




இன்று! தொடுவதற்கு
மென்மையான மழமழப்புக்கு
வில்லியம்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பிளேடு
வெட்டி வதைத்து, உங்கள் தன்மானம்
புண்பட 'முகத்திலடிக்கும்' முரட்டு
பிளேடுகளோடு மல்லுக்கு நின்றது
போதும். இதோ, க்ஷவர சோதனைக்கு
ஒரு விடிவு: புதிய வில்லியம்ஸ்
ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பிளேடு...
கரடுமுரடாகிக் 'கருநிழல்' படர்ந்த
கடின வளர்ச்சிக்குக் கடைகட்டுகிறது!
கீறலுக்கும் தழும்புக்கும்
விடைகொடுப்பீர். தீர்ந்தது சரும
வேதனை. மீண்டது நம் சரும மென்மை.
williams
STAINLESS

படித்துப் பாருங்கள்!

ஆடத்தெரியாத கடவுள்

இருபது அருமையான கட்டுரைகள் அடங்கிய ஒரு சுவையான நூலை 'ஆடத் தெரியாத கடவுள்' என்னும் கவர்ச்சியான தலைப்பிலே நமக்கு வழங்குகிறார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு மகராஜன் அவர்கள்! முதலாவது கட்டுரையின் தலைப்பே நூலுக்கும் தலைப்பாக அமைந்திருக்கிறது.

''புண்பட்ட நெஞ்சுக்குச் சிரிப்பைப்போல் இதமான மருந்து கிடையாது. உலக வாழ்க்கையிலிருக்கும் ஏற்றத் தாழ்வுகள், இன்ப துன்பங்கள், பித்தலாட்டங்கள், இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு சிரிக்கத் தெரியாமலும் நாம் இருந்தோமானால் என்ன ஆகும் நம் கதி ?''

இவ்வாறு தொடங்குகிறது இந்த அழகான நூல்.

''ஆனந்தமில்லாத வாழ்க்கை பயனற்ற வாழ்க்கை. ஆனந்தமில்லாத சமயம் பயனற்ற சமயம். ஆகவே நீட்ஸ்கே என்ற ஜெர்மன் தத்துவ ஞானி 'ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாராயில்லை!' என்று சொன்னார்.''

இவ்வாறு கூறி மகராஜன் அவர்கள் தமது முதலாவது கட்டுரையிலே ஆனந்த தத்துவமான நடராஜப் பெருமானின் மாண்பை விளக்குகிறார். இதைத் தொடர்ந்து ''சிந்தைக் கலசம்'' என்ற கட்டுரை. இதில் திருமூலருடைய திருமந்திரத்தை எடுத்துக் கொண்டு ''சிந்தைக் கலசத்து எழுகின்ற மாசக்தி''யாகிய சிவசக்தியை உணர்த்துகிறார். அடுத்த கட்டுரையாகிய 'வேதம் ஊன்றும் பலா'விலே கடவுட் தத்துவத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார் ஆசிரியர்:

''எப்படி மனிதனுக்கு இறைவனைப் புரிய வைப்பது என்று வேதம் நீண்ட காலம் யோசனை பண்ணி, கடைசியாக ஒரு தந்திரம் செய்தது. ஒரு பலாவின் வித்தைத் திருக்குற்றாலத்து மண்ணிலே ஊன்றிவிட்டுப் போய் விட்டதாம் வேதம். அந்த வித்து முளையிட்டு, இலை பரப்பி, கொப்பும் கவருமாக வளர்ந்து, காய்த்துக் கனிந்ததைப் பார்த்தான் மனிதன். பலா மரத்தினுள்ளிருக்கும் இஞ்சினியரிங் ஜாலங்களையும், ரஸமான வித்தைகளையும், தாவர மர்மங்களையும் பார்த்தவுடன் இறைவனுடைய திருவிளையாடலைப் புரிந்து கொண்டான் மனிதன்''

என்று சொல்லிக் குற்றாலக் குறவஞ்சிப் பாடலுக்கு வருகிறார் மகராஜன். இப்படியேதான் ஒவ்வொரு கட்டுரையும் !

டாக்டர் யுங், ஆல்டஸ் ஹக்ஸ்லி போன்ற அயல்நாட்டுப் பேரறிஞர்களின் தத்துவங்களோடு, திருமூலர், சிவவாக்கியர், திருவள்ளுவர் போன்ற தமிழ்நாட்டு ஞானிகளின் தத்துவங்களையும், மாணிக்கவாசகர், அப்பர் சுவாமிகள், இராமலிங்க அடிகளார் ஆகியோரின் பேருண்மைகளையும் பின்னி இணைத்து மாலை தொடுக்கிறார் மகராஜன். ஆண்டாள், பட்டினத்தார், கருவூரார், அவ்வையார், பாரதியார் ஆகியோரின் பாடல்கள் இரத்தினமணிகளாக நாலெங்கும் ஒளி வீசுகின்றன. மாலையின் கோப்புச் சரடு போல் டி.கே.சி. பெருமானின் இதய உணர்ச்சிகளும் சிந்தனைகளும் புத்தகத்தை ஊடுருவி நின்று எழில் செய்கின்றன.

ஆங்கிலமும் தமிழும் ப்ரெஞ்சும் ஆழ்ந்து கற்ற அறிஞர் மகராஜன். டி.கே.சி.யின் உறவிலே திளைத்து, அவருடைய கவிதா நோக்கிலே நின்று இலக்கியத்தையும், சமயத்தையும், கலைகளையும் உளம் தோய்ந்து அனுபவித்தவர். புத்தகத்தைக் கையில் எடுத்தால் பழந் தமிழ்க் கவிஞர்களோடும், சித்தர்களோடும், ஞானிகளோடும் உறவாடுகிற இன்ப அனுபவம் நமக்குச் சித்திக்கும். ரயிலைப் பிடிக்கிற அவசரமும், பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்துவிட்டுத் தூர எறிகிற பரபரப்பும், எதையும் மேலெழுந்தவாறாகப் பார்க்கிற உதாசீனமும் மலிந்து வருகிற இந்த நாளில் மனத்தை அழுத்திப் பிடித்து வைத்து நிரந்தரமான தத்துவங்களைக் காணச் செய்கிறது இந்த நூல்.

இதற்கு முன்னுரை எழுதியுள்ள திருமுருக கிருபானந்தவாரியார் சொல்லுகிறார் :

''இந்த மகராஜன் வழங்கிய தமிழ்க் கனி அமுதை உண்டார் உவப்பார்கள். கண்டார் களிப்பார்கள். தேனும் இன்னமுதாய்த் தித்திக்கும் தெய்வத் தமிழ் நடையில் என் ஆப்த நண்பர் மகராஜ பிள்ளை எழுதி, தமிழுலகுக்கு உபகரித்தார். நாவல் மிகுந்த இந்நாளில் சுவை மிகுந்த இந்நூல் பெருவகையைத் தருகின்றது. தீராப் பிணி தீர்க்கும் ஆரா அமுதம் ஆய இதனை யாவரும் போற்றுவர். ஏவரும் படித்து நலம் பெறுவார்களாக!''

வாரியார் அவர்களுடைய முன்னுரையின் கனியாட்டத்தைப் பார்த்தீர்களா? அதைப் போலவே புத்தகத்தைப் படிப்போர் அனைவருடைய உள்ளங்களையும் ஆட வைக்கும் ஒரு நூல்தான் மகராஜன் வழங்கும் 'ஆடத் தெரியாத கடவுள்!'

—மீ. ப. சோமு

வெளியிட்டோர்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை—14. விலை ரூ. 2.75.





என்ன பெயர் வைக்கலாம்

·நாடோடி·

அப்பொழுதுதான் பிடித்து முடித்திருந்த தங்களுடைய புதுப் படத்துக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று தீர்மானிக்க, படாதிபதி ஒரு கூட்டம் கூட்டியிருந்தார். டைரக்டர், காமிராமேன், நடிகர்கள், நடிகைகள், படாதிபதிக்குப் பணம் கடன் கொடுத்திருந்தவர்கள் எல்லோரும் வந்திருந்தனர்.

''என்ன பெயர் வைக்கலாம்?'' என்று கேட்டார் படாதிபதி.

உடனே நகைச்சுவை நடிகர் எழுந்து நின்று ''என்ன பெயர் வைக்கலாம்?'' என்று அவரும் கேட்டார்.

''அதுதான் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேனே, எதற்காக நீங்களும் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டார் படாதிபதி.

''நான் ஒன்றும் கேட்கவில்லை. நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன்!''

''கேள்வியையே திருப்பிக் கூறுவதுதான் பதிலா?''

''நான் கேள்வியைத் திருப்பிக் கேட்கவில்லை. 'என்ன பெயர் வைக்கலாம்?' என்று படத்துக்குப் பெயர் வைக்கலாம் என்று சொன்னேன்.''

''சரி, நீங்கள் என்ன சொல்கிறீர்கள், டைரக்டர் ஸார்?''

''படம் மிகவும் பயங்கரமான படம். பயங்கரக் காட்சிகள் மிகவும் நிறைந்துள்ளன. ஆகவே, ''பயப்படாதே'' என்று வைக்கலாம்'' என்றார் டைரக்டர்.

''படத்தைக் கண்டு ஜனங்கள் பயப்பட வேண்டும் என்பதற்காகத்தானே, பயங்கரக் காட்சிகள் நிறையச் சேர்த்துள்ளோம்! ஆகவே 'பயப்படுங்கள்!' என்று பெயர் வைப்பது தான் பொருந்தும்'' என்றார் நகைச்சுவை நடிகர்.

''படத்தில் எல்லோரையும் பயப்பட வைப்பது அடங்காப் பிடாரி அகிலாண்டம்தான். ஆகவே, 'அடங்காப் பிடாரி' என்று வைப்பதுதான் பொருந்தும்'' என்றார் படாதிபதிக்குப் பணம் கடன் கொடுத்தவர்.

''ஆமாம், அதுதான் சரியான பெயராகத் தோன்றுகிறது'' என்று எல்லோரும் 'ஆமாம்' போட்டார்கள்.

''இல்லீங்க, அந்தப் பெயர் வேண்டாமுங்க'' என்று கூறினாள் படத்தின் புது முகமான பிரியம்வதா தேவி.

''அப்படியானால் இந்தப் பெயர் வேண்டாம்'' என்றார் படாதிபதி. ஏனெனில் படத்தின் புது முகமான பிரியம்வதா தேவி, முதல் தடவையாக, படத்தில் மட்டும் இடம் பெறவில்லை, படாதிபதியின் வீட்டிலும், அவருடைய இதயத்திலும் இடம் பெற்றிருந்தாள்.

இன்னும் பல பெயர்கள் விவாதிக்கப்பட்டன. கடைசியில் ஒருவர், '' 'அக்கிரமக்காரி' என்று வைக்கலாமே!'' என்றார்.

''அந்தப் பெயர் வேண்டாமுங்க'' என்றாள் புது முகம் பிரியம்வதா தேவி.

இன்னும் பல பெயர்கள் கூறப்பட்டன. கடைசியில் ஒருவர், '' 'அரக்கி' என்று வைக்கலாம்'' என்றார்.

'' 'அரக்கி, அரக்கி' மிகவும் பொருத்தமான பெயர்'' என்றார் படாதிபதி.

''இல்லீங்க. அந்தப் பெயரும் வேண்டாமுங்க'' என்றாள் படத்துக்குப் புது முகமும், படாதிபதிக்குப் பழைய முகமும் ஆகியிருந்த பிரியம்வதா.

''என்ன, இப்படி எல்லாப் பெயர்களையும் வேண்டாம் என்று சொல்லுகிறாயே?'' என்று கேட்டார் படாதிபதி.

அதற்குப் பிரியம்வதா, ''என்னங்க, இப்படிக் கேட்கிறீங்க! இதுதான் எனக்கு முதல் படம். ஆகவே, இந்தப் படத்தின் பெயரை என் பெயரோடு சேர்த்து வைத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன். அரக்கி பிரியம்வதா, அக்கிரமக்காரி பிரியம்வதா, அடங்காப்பிடாரி பிரியம்வதா என்று வைத்துக் கொண்டால் நல்லா இருக்குங்களா!'' என்று கேட்டாள்.

படாதிபதி ஒரு கணம் திகைத்தார். பிறகு பிரியம்வதாவைத் தனியாகக் கூப்பிட்டார். ''இதோ பார். நீ படத்தில் மட்டும் இடம் பெற்றிருந்தால் பரவாயில்லை, என் இதயத்திலும் இடம் பெற்றுவிட்டாய். ஆகவே இனி நீ நடிக்கத் தேவையில்லை. என்ன பெயர் வைத்தால் உனக்கு என்ன?''



''சரி, தங்கள் இதயத்தில் ஒருவர்பின் ஒருவராக இடம் பெற்ற எத்தனையோ புது முகங்களில் நானும் ஒருத்தி. ஆகவே, அடுத்த புது முகம் தங்கள் இதயத்தில் இடம் பெறும்போது நான் நடித்துத்தானே பிழைக்க வேண்டும்!''

''அதை அப்பொழுது கவனித்துக் கொள்ளலாம்'' என்றார் படாதிபதி.

படத்துக்கு, 'அக்கிரமக்காரி' என்று பெயர் வைக்கப்பட்டது. ஆனால் படத்தின் பெயர் என்ன என்று மக்கள் தெரிந்து கொள்ளும் முன்னர் படம் டப்பாவுக்குள் புகுந்து விட்டது!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras 600031
Managing Editor: T. Sadasivam

ஒரே ஒரு காசு செலவில் 1 சேலை அல்லது 3 சட்டைகள் பனிபோல் வெண்மை பெற...

மாக்ஸிம்*

எல்லா துணிகளுக்கும்
உகந்த ஏற்றமிகு ஒயிட்னர்

எவ்வளவோ சிக்கனமானது!

எந்த ஆடையாக இருந்தாலும் சரி, அதற்குப் புத்தம் புதிய வெண்மை ஒளியேற்ற சராசரி ஒரு துளி மாக்ஸிம் போதும். ஒவ்வொரு மாக்ஸிம் பாட்டிலும் சுமார் 1200 துளிகள் கொண்டது என்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! எனவேதான் மாக்ஸிம் மிகவும் சிக்கனமான, வீரியமுள்ள நீலநிற. திரவ வடிவ ஒயிட்னராக விளங்குகிறது. மேலும் விசேஷ ட்ராப்பர் மூடிகொண்ட பிளாஸ்டிக் பாட்டிலாக இருப்பதால், இன்னும் லாபம். ஏனெனில் தேவைக்கு மேல் ஒரு துளி கூட சிந்தாது. எனவே துளியும் வீணாவதில்லை. துணியும் நீலம் படிவதில்லை.

- 'டெரீன்' ✓
- 'டெரீன்'/காட்டன் ✓
- நைலான் ✓
- உல்லன் ✓
- சில்க் ✓
- காட்டன் ✓


எல்லா துணிகளுக்கும் ஏற்றது

எல்லாவித துணிகளுக்கும் நீங்கள் மாக்ஸிம் உபயோகிக்கலாம். 'டெரீன்', 'டெரீன்'/காட்டன், நைலான், உல்லன், சில்க் மற்றும் காட்டன் போன்ற எல்லா துணிகளுக்கும் மாக்ஸிம் வெண்மையூட்டி புதிய மெருகேற்றுகிறது. தவிர, மாக்ஸிம் துணியில் கறை ஏற்படுத்துவதுமில்லை.

உபயோக முறை மிகமிக எளிது

மாக்ஸிம் உபயோக முறை மிகமிக் எளிதானது. துணிகளை முதலில் சோப் அல்லது பிற சலவைச் சாதனங்கள் மூலம் சுத்தமாக துவைத்து நன்றாக அலசி எடுக்கவும். பிறகு வாளியிலுள்ள (5 லிட்டர்) நல்ல தண்ணீரில் 10-15 துளிகள் மாக்ஸிம் விட்டுக் கலக்கவும். (பழுப்பேறிய துணிகளென்றால் கொஞ்சம் கூடுதல் துளிகள் மாக்ஸிம் சேர்க்கவும்) பின்பு துணிகளை 10—15 நிமிடங்களுக்கு அதில் ஊறவைக்கவும். மீண்டும் அலச வேண்டாம். அப்படியே உலரவிடவும்.





ஒவ்வொரு காசுக்கும் உரிய பலனைத் தருகிறது மாக்ஸிம்

GHH-13 TAM

*Regd. T.M. Geoffrey Manners & Co., Ltd.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

நீடித்திருப்பது
ICI டுலக்ஸ்



ஒப்பனையில்

குறைந்த அளவு
டுலக்ஸ் பெயின்ட்
கொண்டு பரந்த
இடப்பரப்பிற்குப் பிழையின்றி
பூசலாம். அழுக்குகளை
நீர்கொண்டு நன்றாக
நீக்கலாம். ஒரு பொழுதும்
மங்காது.



உங்கள் கன்ட்ராக்டரிடம் கேளுங்கள்: இவர் டுலக்ஸ் எப்படி ஆச்சரியகரமாக உங்கள் வீட்டிற்கு அதிக சோபை அளிக்கிறது என்பதை விளக்கிக் காட்டுவார்

டுலக்ஸை இந்தியாவில் தயாரித்து விற்பவர்கள்:
தி ஆல்கலி அன்ட் கெமிகல் கார்ப்பரேஷன் ஆப்
இந்தியா லிமிடெட்

ICI

டுலக்ஸ்—வீட்டின்
நெருங்கிய நண்பன்

டுலக்ஸ் இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், லண்டன் இன் வியாபாரச் சின்னம். பதிவுபெற்ற உபயோகிப்பவர்கள்: தி ஆல்கலி அன்ட் கெமிகல் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்.